




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com








CHENNAI Volume- 3 Issue:279 24-04-2026 வெள்ளிக்கிழமை Free E- Paper ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

வெள்ளிக்கிழமை
(24–04–2026)
பராபவ ஆண்டு,
சித்திரை–11

சூரிய உதயம் 5.57

திதி:
அஷ்டமி நள்ளிரவு வரை
பிறகு நவமி

நட்சத்திரம்:
பூசம் நள்ளிரவு 12.37 வரை
பிறகு ஆயில்யம்.

யோகம் :
மரண யோகம்.

நல்ல நேரம்
காலை 6.00 – 7.00.
மாலை 5.00 – 6.00.

இராகு காலம்
காலை 10.30–12.00 மணி.

எமகண்டம்
பிற்பகல் 3.00–4.30 மணி.

குளிகை
காலை 6.00 – 7.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவில் புதிய வரலாறு: 85% வாக்குப்பதிவு

**சென்னை, ஏப்.24**

அமைதியான முறையில் நடந்த 2026 தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில், மாலை 6 மணி நிலவரப்படி 84.69% சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அதிகபட்சமாக கரூரில் 92.15% வாக்குகள் பதிவாகியுள்ளன. குறைந்தபட்சமாக கன்னியாகுமரியில் 75.53% வாக்குகள் பதிவாகியுள்ளன.

6 மணிக்குப் பின் டோக்கன் பெற்றவர்களுக்கு வாக்களிக்க 2 மணி நேரம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தலைநகர் சென்னையில் மாலை 6 மணி நிலவரப்படி 83.18% வாக்குகள் பதிவாகியுள்ளன. இவற்றில் தொகுதி வாரியாகப் பார்த்தால் சென்னை டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் அதிகபட்சமாக 89.20% வாக்குகளும், குறைந்தபட்சமாக மயிலாப்பூரில் 74.46% வாக்குகளும் பதிவாகியுள்ளன.

வரலாறு படைத்த தமிழகம்: தமிழகத்தில் இதுவரை பதிவானதில் அதிக வாக்கு சதவீதம் என்றால் 2011-ல் 77.8 % வாக்குகள் பதிவானதுதான். அதற்கு முன்னதாக 1967-ல் 76.57% வாக்குகள் பதிவானதே அதிகபட்ச வாக்குப் பதிவு சாதனையாக இருந்தது. 1957 முதல் இதுவரை தமிழகசட்டப்பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குப் பதிவு சதவீதங்களின் விவரம்:

1957-ல் 47 % வாக்குகள்
1962-ல் 71 % வாக்குகள்
1967-ல் 76.57 % வாக்குகள்
1971-ல் 71 % வாக்குகள்
1977- ல் 61.58 % வாக்குகள்
1980-ல் 61.58 % வாக்குகள்
1984-ல் 73.47 % வாக்குகள்
1989-ல் 69.69 % வாக்குகள்
1991-ல் 63.92 % வாக்குகள்
1996-ல் 66.95 % வாக்குகள்
2001-ல் 59.07 % வாக்குகள்
2006-ல் 70.22 % வாக்குகள்
2011-ல் 77.8 % வாக்குகள்
2016-ல் 74.26 % வாக்குகள்
2021-ல் 71.28 % வாக்குகள்

பிரபலங்கள் வாக்களிப்பு: வாக்குச் சாவடிக்கு வழக்கம் போல் காலையிலேயே வந்த நடிகர் அஜித் குமார் திருவான்மியூர் வாக்குச் சாவடியில் முதல் நபராக வாக்களித்துச் சென்றார்.

தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி, சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதிக்கு உட்பட்ட சிலுவம்பாளையம் தொகுதியில் குடும்பத்துடன் வந்து மக்களோடு மக்களாக வரிசையில் காத்திருந்து வாக்களித்தார்.

சென்னையில் தவெக தலைவர் விஜய், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார், பாஜக மூத்த தலைவரும் மயிலாப்பூர் தொகுதி வேட்பாளருமான தமிழிசை சவுந்தர்ராஜன், பாஜக மாநில துணைத் தலைவர் குஷ்பு அவரது கணவரும் மதுரை மத்திய தொகுதி வேட்பாளருமான சுந்தர்.சி, நடிகர் ரஜினி காந்த், நடிகர் சிவகார்த்திகேயன், இயக்குநர் மணிரத்னம், நடிகர்கள் சிவக்குமார், ஜீவா, நடிகை த்ரிஷா, நடிகர் சூர்யா அவரது மனைவி ஜோதிகா எனப் பல்வேறு பிரபலங்களும் வாக்களித்தனர். தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு வியாழக்கிழமை (ஏப்.23) காலை 7 மணிக்குத் தொடங்கி நடைபெற்று வந்த நிலையில், மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது.

தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்பட்டிருக்கும் வாக்குச்சாவடிகளில், கடும் வெய்யிலையும் பாராமல் வாக்காளர்கள் வரிசையில் நின்று வாக்களித்து வந்தனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 5.73 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க தகுதியானவர்கள். இதில், 14 லட்சம் பேர் முதல் முறை வாக்காளர்கள்; 3.98 லட்சம் பேர் 85 வயதைக் கடந்தவர்கள்.



## மாவட்ட வாரியாக பதிவான வாக்குகள்...

தமிழக சட்டசபை தேர்தல் காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை நடைபெற்றது.

இந்நிலையில், தமிழக சட்டசபை தேர்தலில் மாலை 6 மணி நிலவரப்படி 84.69% வாக்குகள் பதிவாகியுள்ளன.




மாவட்ட வாரியாக பதிவான வாக்குகள் முழு விவரம்:-

அரியலூர் - 85.50 %
செங்கல்பட்டு - 84.42 %
சென்னை - 83.27 %
கோவை - 84.47 %
கடலூர் - 84.74 %
தருமபுரி - 89.96 %
திண்டுக்கல் - 88.42 %
ஈரோடு - 89.89 %
கள்ளக்குறிச்சி - 87.12 %
காஞ்சிபுரம் - 86.96 %
கன்னியாகுமரி - 75.53 %
கரூர் - 92.15 %
கிருஷ்ணகிரி - 84.80 %
மதுரை - 80.31 %
மயிலாடுதுறை - 81.27 %
நாகை - 85.56 %
நாமக்கல் - 89.51 %
பெரம்பலூர் - 85.28 %
புதுக்கோட்டை - 83.45 %
ராமநாதபுரம் - 76.33 %
ராணிப்பேட்டை - 88.75 %
சேலம் - 90.30 %
சிவகங்கை - 76.18 %
தென்காசி - 81.72 %
தஞ்சாவூர் - 80.15 %
நீலகிரி - 78.54 %
தேனி - 81.00 %
திருவள்ளூர் - 83.11 %
திருவாரூர் - 83.07 %
தூத்துக்குடி - 80.03 %
திருச்சி - 85.23 %
திருநெல்வேலி - 77.53 %
திருப்பத்தூர் - 88.05 %
திருப்பூர் - 88.30 %
திருவண்ணாமலை - 88.24 %
வேலூர் - 87.98 %
விழுப்புரம் - 87.85 %
விருதுநகர் - 84.33 %

## தமிழகத்தில் 13 இடங்களில் இன்று வெயில் சதம்

**சென்னை, ஏப்.24:**

தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பகல் நேரங்களில் மக்கள் வெளியே நடமாட முடியாத அளவுக்கு வெப்பம் வாட்டி வருகிறது. வெப்பத்தில் இருந்து தங்களை தற்காத்துக்கொள்ள மக்கள் இளநீர், குளிர்பான கடைகளை நாடி வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழகத்தில் 13 இடங்களில் இன்று 100 டிகிரி பாரன்ஹீட்டை தாண்டி வெப்பம் பதிவாகியுள்ளது. அதிகபட்சமாக வேலூரில் 105.26° பாரன்ஹீட் (40.7° செல்சியஸ்) வெப்பம் பதிவாகியுள்ளது. மேலும் 100 டிகிரியை தாண்டி வெப்பம் பதிவான இடங்களின் விவரம் வருமாறு:-

1. வேலூர் - 105.26° பாரன்ஹீட் (40.7° செல்சியஸ்)
2. மதுரை விமான நிலையம் - 104° பாரன்ஹீட் (40.0° செல்சியஸ்)
3. கரூர் பரமத்தி - 104° பாரன்ஹீட் (40.0° செல்சியஸ்)
4. ஈரோடு - 102.92° பாரன்ஹீட் (39.4° செல்சியஸ்)
5. சேலம் - 102.74° பாரன்ஹீட் (39.3° செல்சியஸ்)
6. மதுரை நகரம் - 102.56° பாரன்ஹீட் (39.2° செல்சியஸ்)
7. பாளையங்கோட்டை - 102.2° பாரன்ஹீட் (39.0° செல்சியஸ்)
8. தர்மபுரி - 101.66° பாரன்ஹீட் (38.7° செல்சியஸ்)
9. கோயம்புத்தூர் - 101.3° பாரன்ஹீட் (38 .5° செல்சியஸ்)
10. திருச்சி - 101.3° பாரன்ஹீட் (38.5° செல்சியஸ்)
11. நாமக்கல் - 100.94° பாரன்ஹீட் (38.3° செல்சியஸ்)
12. திருத்தணி - 100.58° பாரன்ஹீட் (38.1° செல்சியஸ்)
13. திருப்பத்தூர் - 100.4° பாரன்ஹீட் (38.0° செல்சியஸ்)

## மேற்கு வங்கத்தில் 90% வாக்குப்பதிவு

**கொல்கத்தா, ஏப்.24:**

மேற்கு வங்கத்தில் இன்று நடைபெற்ற முதல் கட்டத் தேர்தலில் 90 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகி உள்ளன. மாலை ஆறு மணிக்குள் வாக்குப் பதிவு மையங்களுக்கு வந்தவர்களுக்கு டோக்கன்கள் கொடுக்கப்பட்டு அவர்களுக்கு வாக்களிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கு வங்கத்தில் மொத்தம் 294 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இவற்றில் 152 தொகுதிகளுக்கு இன்று முதற்கட்ட தேர்தல் நடைபெற்றது. இதில், மொத்தம் 1,478 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். 3.60 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர். வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்குதுவங்கியது. அது முதலே வாக்காளர்கள் வரிசையில் நின்று வாக்களிக்கத் தொடங்கினர். அசம்பாவித சம்பவங்கள்



ஏற்படாமல் இருக்க மத்திய பாதுகாப்புப் படைகளை சேர்ந்த 2.4 லட்சம் வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

காலை 11 மணி நிலவரப்படி 41.11% வாக்குகளும், மாலை 3 மணி நிலவரப்படி 78.77% வாக்குகளும் பதிவான நிலையில், மாலை 5 மணி வரை 89.93% வாக்குகள் பதிவாகின. மாலை 6 மணி அளவில் 91.35% வாக்குகள் பதிவாகின. 3.60 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைச் செலுத்தியுள்ளனர். மாலை 6 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடைந்தது. எனினும், அதற்குள்ளாக வாக்குச்சாவடி மையங்களுக்கு வந்தவர்களுக்கு டோக்கன்கள் வழங்கப்பட்டு, அவர்கள் வாக்களிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. இதனால், துல்லியமான வாக்குப் பதிவு பிறகே தெரிய வரும்.

மாலை 5 மணி அளவில், அலிபுர்துவாரில் 88.74% வாக்குகளும், பன்குராவில் 89.91% வாக்குகளும், பிர்பும்-ல் 91.55% வாக்குகளும் பதிவாகின. கூச் பெஹாரில் 92.07%, தெற்கு தினாஜ்பூரில் 93.12%, டார்ஜிலிங்கில் 86.49%, ஜல்பைகுரியில் 91.20%, ஜார்கிராமில் 90.53%, கலிம்போங்-ல் 81.98%, மால்டாவில் 89.56% வாக்குகள் பதிவாகின. முர்ஷிதாபாத்தில் 91.36%, மேற்கு பர்த்துவானில் 86.89%, மேற்கு மிட்னாபூரில் 90.70%, கிழக்கு மிட்னாபூரில் 88.55%, புருலியாவில் 87.35%, வடக்கு தினாஜ்பூரில் 89.74% வாக்குகள் பதிவாகின.

முர்ஷிதாபாத் தொகுதி உட்பட சில தொகுதிகளில் சிற்சில அசம்பாவித சம்பவங்கள் நடந்தன. இருந்தபோதிலும், பெருமளவில் வாக்குப்பதிவு அமைதியாகவே நடந்தது. குறிப்பாக, இந்த முறை மத்திய பாதுகாப்புப் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டதே இதற்கு முக்கிய காரணம் என கூறப்படுகிறது.

## விளாத்திகுளம் தொகுதியில் தேர்தல் புறக்கணிப்பு

**கோவில்பட்டி, ஏப்.24:**

விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட எட்டயபுரம் அருகே குளத்துள்வாய்பட்டியில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமை இடமாற்றம் செய்ய வலியுறுத்தி 4 கிராம மக்கள், வீடுகளில் கருப்புக் கொடி கட்டி தேர்தலை புறக்கணித்துள்ளனர்.






## நாங்குநேரி 290-வது வாக்குச்சாவடியில் தேர்தல் புறக்கணிப்பு - 5 வாக்குகள் மட்டும் பதிவு

**நெல்லை, ஏப்.24:**

தமிழகத்தில் 17-வது சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை உணவு இடைவேளையின்றி 11 மணி நேரம் நடைபெற்றது. மாலை 5 மணி நிலவரப்படி 82.24 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன. மாலை 6 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடைந்தது.

நெல்லை மாவட்டம் நாங்குநேரி தொகுதிக்கு உட்பட்ட 290-வது வாக்குச்சாவடியில், பொதுமக்கள் தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பெரும்பத்து கிராமத்தில் நடந்த இரட்டைக் கொலை சம்பவம் தொடர்பாக உரிய நீதி கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.




இதனால் அதிகாலை முதல் அந்த வாக்குச்சாவடியில் ஒருவர் கூட வாக்கு செலுத்த வரவில்லை.

இதற்கிடையில், இளம்பெண் ஒருவர் வாக்களிக்க வாக்குச்சாவடிக்கு வந்தபோது, அப்பகுதி மக்கள் அவரை தடுத்து நிறுத்தி அவரை அங்கிருந்து விரட்ட முயன்றனர். இதையடுத்து வாக்குச்சாவடியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார், அந்த பெண்ணை பொதுமக்களிடம் இருந்து மீட்டு வாக்குச்சாவடிக்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் போலீஸ் பாதுகாப்புடன் இளம்பெண் தனது வாக்கை செலுத்தினார். இதன் மூலம் நாங்குநேரி 290-வது வாக்குச்சாவடியில் முதல் வாக்கு பதிவானது. தொடர்ந்து போலீசார் மற்றும் தேர்தல் ஆணைய அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை சமரசம் செய்து வாக்களிக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் நாங்குநேரி தொகுதிக்கு உட்பட்ட பெரும்பத்து 290-வது வாக்குச்சாவடியில் தேர்தல் புறக்கணிப்பில் பொதுமக்கள் ஈடுபட்ட நிலையில், அந்த வாக்குச்சாவடியில் மொத்தமாக 5 வாக்குகள் மட்டும் பதிவாகியுள்ளன.

. இவற்றில், ரூ.543 கோடி அளவுக்கு ரொக்கமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சமூக ஊடக பதிவுகள் தொடர்பாக 243 விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. 163 புகார்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 2,180 தவறான சமூக ஊடக பதிவுகளின் யுஆர்எல் பிளாக் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு தரப்புகளில் இருந்து 5,634 புகார்கள் பெறப்பட்ட நிலையில், அவற்றில் 17 புகார்கள் நிலுவையில் உள்ளன. அவற்றுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மே 4ம் தேதி மொத்தம் 62 மையங்களில் வாக்குகள் எண்ணப்பட உள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்” என்றார்.




## திருக்குறள் குறள்-599

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்



யானை பருத்த உடம்பை உடையது, கூர்மையானக் கொம்புகளை உடையது, ஆயினும் ஊக்கமுள்ளதாகியப் புலி தாக்கினால் அதற்கு அஞ்சும்.

## சிந்திக்க ஒரு நொடி



கொக்கு போல்
எதற்காகவும்
காத்திருக்காமல்..
சில இடங்களில்
மக்கு போல்
கடந்து செல்வது
புத்திசாலித்தனம்

**உஷா முத்துராமன்**

## சித்திரை பிரம்மோற்சவம் 3-ஆம் நாள்



**திருவண்ணாமலை, ஏப்.24:**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு பஞ்ச மூர்த்திகள் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.இரவு சுவாமி,அம்மன் மாட வீதி உலா மங்கள வாத்தியங்களுடன் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் மாடவீதி உலாவில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## போளூர் சட்டமன்றத் தொகுதியில் வாக்குப்பதிவு தொடங்கியது



திருவண்ணாமலை மாவட்டம் 66 போளூர் சட்டமன்ற தொகுதியில் வெண்மணி ஊராட்சியில் 178 பாகம் மற்றும் இரு சாவடியில் வாக்குப்பதிவு காலை 7 மணி முதல் தொடங்கியது பொதுமக்கள் வரிசையாக நின்று வாக்கு பதிவு செய்து வருகிறார்கள். பாதுகாப்பு ஏற்பாடுகள் காவல்துறை செய்துள்ளது.

## திட்டக்குடி அருகே கழுதூரில் குடும்பத்தோடு வாக்களித்த திமுக முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன்




**கடலூர், ஏப். 23:**

கடலூர் மாவட்டம் திட்டக்குடி அருகே கழுதூர் அரசு பள்ளியில் முன்னாள் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சரும் திமுக வேட்பாளர் சி.வெ.கணேசன் தனது குடும்பத்துடன் வாக்களித்தார். உடன் மகன் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி தாளாளரும் கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க.வெங்கடேசன் உள்ளிட்டோர் வாக்களித்தனர்.

## சுவாமி, அம்பாள் தங்கசப்பரத்தில் திருவிதியுலா



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் சித்திரை திருவிழா-2026-23.04.2026 காலை-சுவாமி, அம்பாள் தங்கசப்பரத்தில் திருவீதியுலா.

## ஸ்ரீகோதண்டராமர் ஸன்னதி பராபவ வருட ப்ரம்மோத்ஸவம்



மாம்பலம் ஸ்ரீகோதண்டராமர் ஸன்னதி பராபவ வருட ப்ரம்மோத்ஸவம் 1ம் திருநாள் காலை த்வஜாரோஹணம்.

## கலெக்டர் தர்ப்பகராஜ் வரிசையில் நின்று தனது வாக்கினை செலுத்தினார்



**திருவண்ணாமலை, ஏப்.24:**

திருவண்ணாமலை மாநகராட்சி வேங்கிக்கால் ஜெய்பீம் நகர் நடுநிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடிகள் 16 -ல் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் வரிசையில் நின்று தனது வாக்கினை செலுத்தினார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வாக்குச்சாவடி மையத்தில் ஆய்வு



திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் அரசு மாதிரி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தில் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு.க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் வாக்குச்சாவடி மையத்தில் ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வளர்பிறை சஷ்டி சிறப்பு வழிபாடு



கடலூர் மாவட்டம் மேல் புவனகிரி அருள்மிகு மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோவிலில் வளர்பிறை சஷ்டியை முன்னிட்டு அருள்மிகு வள்ளி தேவசேனை சமேத ஆறு முருகனுக்கு சிறப்பு அபிஷேகம், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன்,மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் முருகப்பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## கீழ்பாலூர் வாக்குச்சாவடி எண் 193- ல் ஆய்வு



திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்பாலூர் வாக்குச்சாவடி எண் 193 -ல் கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பொது பார்வையாளர் உயர்திரு.அபிஷேக் கிருஷ்ணா இ ஆ. ப.அவர்கள், தேர்தல் காவல் பார்வையாளர் உயர்திரு. அவுலா ரமேஷ் ரெட்டி இ.கா. ப. அவர்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் பொதுமக்கள் வாக்களிப்பதை ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வளர்பிறை சஷ்டி சிறப்பு வழிபாடு

**சென்னை, ஏப்.24:**

சோழிங்கநல்லூர் புதிய குமரன் நகரில் ஸ்ரீ விஜய கணபதி ஆலயத்தில் அமைந்திருக்கும் முருகப் பெருமானுக்கு வளர்பிறை சஷ்டியை முன்னிட்டு R. ராமகிருஷ்ணன் அய்யர் அவர்களால் வள்ளி,தெய்வானை சமேத முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, ரூபாய் நோட்டுகளால், நாணயங்களால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் முருகப்பெருமானை வேண்டி அருள் பெற்றனர்.



அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் வசந்த உற்சவம்

### 2-ஆம் நாள் பொம்மை பூ கொட்டும் விழா



**திருவண்ணாமலை ஏப். 24:**

அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் சித்திரை மாதம் 2-ஆம் வசந்த உற்சவத்தை முன்னிட்டு உற்சவருக்கு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரத்துடன் தீபாராதனை முடிந்து ஆலயம் 10 முறை சுற்றி வந்தன.

பொம்மைக்கு அலங்காரம் செய்யப்பட்டு பன்னீர் மண்டபத்தில் ஒவ்வொரு முறையும் பொம்மை சுவாமி மேல் பூ கொட்டும் பின்னர் தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பொம்மை பூ கொட்டும் விழாவில் கலந்து கொண்டு அண்ணாமலையாரை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# தேர்தல் கொண்டாட்டம் 2026



## தேர்தல் களப்பணியில்...

### தமிழகம் முழுவதும் எதிர்பார்க்கும் திமுக அரசு மீண்டும் அமையும்! ப. சிதம்பரம்




தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி காரைக்குடி சட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே அவரது சொந்த ஊரான கண்டனூர் சிட்டாள் ஆச்சி அரசு உயர்நிலைப் பள்ளி வாக்குச்சாவடியில் இன்று(வியாழக்கிழமை) காலை 7 மணிக்கு வாக்களித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் ப. சிதம்பரம் கூறியதாவது:

தமிழ்நாடு முழுவதும் நிலையான அரசு அமைய வேண்டும். வளர்ச்சி வேண்டும். மக்கள் நலத்திட்டங்கள் வேண்டும் என்கிற மூன்று எதிர்பார்ப்புகள்தான் எதிரொலிக்கின்றன. இந்த மூன்றையும் நிறைவேற்ற திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான அரசு அமையும். இன்னும் 5 ஆண்டுகள் நிலையான அரசு அமைய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி பெறும் என்றார்.

### "தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி அமையும்" - அமைச்சர் அன்பில் மகேஸ் உறுதி



திருச்சி திருவெறும்பூர் வேட்பாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சி வரகனேரி த.செவந்திலிங்கம் முத்திரியர் உயர்நிலைப்பள்ளியில் வாக்களிக்க தனது மனைவி ஜனனியுடன் வந்தார்.

மக்களோடு மக்களாக வரிசையில் 25 நிமிடங்கள் காத்திருந்து வாக்களித்தார் அதன் பிறகு அமைச்சர் அன்பில் மகேஸ் செய்தியாளரிடம் கூறுகையில், "நான் திருவெறும்பூர் தொகுதியில் முதல் முறை போட்டியிட்டபோது என்னை திமுகவினர் அழைத்துச் சென்று வாக்குகள் சேகரிக்க வைத்தனர். அதற்கடுத்த தேர்தலில் பொது மக்களிடம் வாக்கு சேகரிக்க சென்றபோது, கடந்த முறை நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை ஏன் நிறைவேற்றவில்லை என்று என்னை வழிமறித்து உரிமையுடன் கேட்டனர். ஆனால் தற்போது 3-வது முறையாக நான் போட்டியிடுகிறேன். என்னை பொதுமக்கள் வரவேற்று, நாங்கள் கொடுத்த கோரிக்கைகளை நிறைவேற்றி இருக்கிறீர்கள். அதற்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம். ஆனாலும் எங்களுக்கு சில தேவைகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றி கொடுங்கள் என்று உரிமையுடன் மனுக்களை கொடுக்கின்றனர். நான் வெற்றி பெற்ற பிறகு கண்டிப்பாக உங்களுக்கு நிறைவேற்றிக் கொடுப்பேன் என்று அவர்களிடம் வாக்குறுதி அளித்து இருக்கிறேன். திமுக அரசின் சாதனைகள் மற்றும் நான் தொகுதிக்கு செய்திருக்கின்ற மக்கள் நலத்திட்டங்கள் காரணமாக நிச்சயமாக நான் வெற்றி பெறுவேன். தமிழகத்தில் 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்று மீண்டும் திமுக ஆட்சி அமைக்கும். ஸ்டாலின் முதல்வராக மீண்டும் பொறுப்பேற்பார்." என்றார்.

### ஜனநாயகத்தையும் - அரசியலமைப்பையும் காப்போம்!: உதயநிதி ஸ்டாலின்



தமிழ்நாடு முழுவதும் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்று வருகின்றது. அரசியல் தலைவர்களும், சினிமா பிரபலங்கள் உள்பட பொதுமக்கள் அனைவரும் காலைமுதல் வரிசையில் நின்று ஆர்வத்துடன் வாக்குகளை செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில், சென்னை தேனாம்பேட்டையில் உள்ள எஸ்ஐஇடி மகளிர் கல்லூரியில் உள்ள வாக்குச் சாவடியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாக்களித்தார். உடன் அவரது மனைவியும் இயக்குநருமான கிருத்திகா உதயநிதி மற்றும் மகன் இன்பநிதி ஆகியோரும் வாக்களித்தனர். வாக்களித்த பின் புகைப்படங்களைப் பகிர்ந்த உதயநிதி ஸ்டாலின், வாக்களிப்போம், ஜனநாயகத்தையும் - அரசியலமைப்பையும் காப்போம் என்று பதிவிட்டுள்ளார்.

## தமிழக சட்டப்பேரவை தேர்தலில் ஜனநாயக கடமையை ஆற்றிய திரைப்பிரபலங்கள்



தமிழக சட்டசபைக்கு ஒரேகட்டமாக ஏப். 23ம் தேதி (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். இந்த தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியதையடுத்து, மக்கள் அதிக ஆர்வத்துடன் தங்கள் ஜனநாயக கடமையை நிறைவேற்றினர். நகரங்களிலும், கிராமங்களிலும் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகின்றனர். முதியவர்கள், பெண்கள், முதல் முறை வாக்களிப்பவர்கள் உள்ளிட்ட பலரும் உற்சாகமாக வாக்குச்சாவடிகளுக்கு வருகை தந்து தேர்தல் சூழலை உற்சாகமாக்கியுள்ளனர். இந்த நிலையில், காலை முதல் திரைப்பிரபலங்கள் பொதுமக்களுடன் வரிசையில் நின்று தங்களின் வாக்குகளை செலுத்தி வருகின்றனர். அந்தவகையில், யார் எந்தெந்த இடங்களில் வாக்களித்தனர் என்பதை காணலாம்.

* ரஜினிகாந்த், சௌந்தர்யா ரஜினிகாந்த்-சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி

*சுதா கொங்கரா - சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி

*விக்ரம் - சென்னை பெசன்ட் நகர்

* சரத்குமார் - சென்னை கொட்டிவாக்கம்

* சிவகார்த்திகேயன் - வளசரவாக்கம்

* ஹரிஷ் கல்யாண் - வளசரவாக்கம்

* இயக்குனர் அட்லீ - ஆழ்வார்பேட்டை

*கென் கருணாஸ், கருணாஸ், கிரேஸ் கருணாஸ் - வடபழனி

* விஜய் - நீலாங்கரை

*கமல்ஹாசன்-ஆழ்வார்பேட்டை

* ஆர்.ஜே.பாலாஜி - கோட்டூர்புரம்

*அனிருத் - ஆழ்வார்பேட்டை

* குஷ்பு - சென்னை மந்தவெளிப்பாக்கம்


* ஜெய் - அடையார்

* ஆரவ் - அண்ணாநகர்

* கவுதம் ராம் கார்த்திக் - சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி

* அஜித் - திருவான்மியூர்

## "யார் ஆட்சிக்கு வந்தாலும்..." - வாக்களித்த பின் நடிகர் சிவக்குமார் வைத்த கோரிக்கை



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தனது வாக்கினை செலுத்திய பின் நடிகர் சிவக்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது யார் ஆட்சிக்கு வந்தாலும் இதை செய்ய வேண்டுமென அவர் கோரிக்கை ஒன்றை வைத்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று காலை 7 மணிக்கு தொடங்கியது. இதில் மொத்தம் 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். காலை 9 மணி நிலவரப்படி சுமார் 17.69 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. இந்த சூழலில் சினிமா, அரசியல் என பல்வேறு துறை சார்ந்த பிரபலங்கள் தங்களது ஜனநாயக கடமையை ஆற்றி வருகின்றனர். அந்த வகையில் நடிகர் சிவக்குமார் சென்னையில் தனது வாக்கினை செலுத்தினார்.

"என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் யார் ஆட்சிக்கு வந்தாலும் டாஸ்மாக் மதுபானக் கடைகளை உடனடியாக மூட வேண்டும். குடிமக்களை குடிகார மக்களாக ஆக்கியது போதும்.

கோடி கோடியாக சொத்துகளை குவிக்காமல் கடைக்கோடி மக்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும். நான் வைக்கும் இந்த கருத்தை பல ஆண்டுகளாக சொல்லி வருகிறது. இதை செய்வார்களா என்று தெரியாது. ஆனால், செய்தால் சந்தோஷம். கிட்டத்தட்ட 40 சதவீத மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்" என சிவக்குமார் தெரிவித்தார்.

## "தமிழ் மண்ணில் மதவாத வெறுப்பு அரசியலுக்கு இடமில்லை" - திருமாவளவன்



தமிழ் மண்ணில் மதவாத வெறுப்பு அரசியலுக்கு இடமில்லை என்பதை இன்று மக்கள் தீர்ப்பாக எழுத உள்ளனர். திமுக கூட்டணி 200 இடங்களுக்கு மேல் வெல்லும் என விசிக தலைவர் திருமாவளவன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. அரியலூர் மாவட்டம் அங்கனூரில் உள்ள வாக்குச்சாவடியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தனது வாக்கை பதிவு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: திமுக தலைமையிலான கூட்டணி பொதுமக்களின் ஏகோபித்த நல்ல ஆதரவுடன் மகத்தான வெற்றியை பெரும். 200-க்கும் மேற்பட்ட இடங்களில் திமுக கூட்டணி வெற்றி பெறும். அறுதி பெரும்பான்மையுடன் திமுக தனித்து வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். தமிழ் மண்ணில் மதவாத வெறுப்பு அரசியலுக்கு இடமில்லை என்பதை இன்று மக்கள் தீர்ப்பாக எழுத உள்ளனர்.

திமுக தலைவர் ஸ்டாலின் கூறியது போல் இரு கட்சிகளுக்கு இடையேயான யுத்தம் அல்ல. இரு அணிகளுக்கு இடையேயான யுத்தம் அல்ல. இரண்டு கருத்தியல்களுக்கு எதிரான யுத்தமே இந்த தேர்தல். அந்த யுத்தத்தில் தமிழ்நாடு வெல்லும். மீண்டும் ஸ்டாலின் முன்மாதிரி ஆட்சி அமையும். சமூகநீதி தலைத்தோங்கும்.

கூட்டணிபேச்சுவார்த்தையில் ஏற்பட்ட மனக்கசப்புகள் என்பது வெறும் யூகங்கள். தேர்தல் நேர பேச்சுவார்த்தையில் கட்சிகளுக்கு இடையே இது போன்ற முரண்பாடுகள் கருத்து வேறுபாடுகள் வருவது இயல்பான ஒன்று. கூட்டணியை இது எந்த வகையிலும் பாதிக்காது. ஒரே அணியாக நின்று நாங்கள் களமாடுகிறோம். கட்டுக்கோப்பான கூட்டணி, பலம் வாய்ந்த கூட்டணி, கொள்கை சார்ந்த கூட்டணி என்ற நன்மதிப்பு பொதுமக்களிடையே உள்ளது. 5 ஆண்டுகளில் தமிழக அரசு பல்வேறு புதிய திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி உள்ளது. குறிப்பாக பெண்களை மையப்படுத்தி மேம்படுத்த புதுமைப் பெண், உரிமைத் தொகை, விடியல் பயணம் உள்ளிட்ட பெண்களை வலிமைப்படுத்தும் பல திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.

## மாற்றம் யாரிடமிருந்து தொடங்க வேண்டும்? வாக்களித்த பிறகு இயக்குநர் அமீர் கேள்வி





மாற்றம் யாரில் இருந்து தொடங்க வேண்டும் என்பதை சிந்தித்து மக்கள் வாக்களிக்க வேண்டும் என நடிகர் அமீர் கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. காலை 7 மணி முதலே மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகின்றனர்.

அரசியல் கட்சித் தலைவர்கள், திரைப் பிரபலங்கள் உள்ளிட்ட பலரும் வாக்களித்து தங்கள் ஜனநாயகக் கடமையாற்றி வருகின்றனர்.

அந்தவகையில் நடிகர் விஜய் சேதுபதி சென்னையில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்கு செலுத்தினார். பின்னர் பேசிய அவர்,

"தயவு செய்து அனைவரும் வந்து வாக்களிக்க வேண்டும். இது நமதுஜனநாயகக் கடமை" எனக் கேட்டுக்கொண்டார்.

இயக்குநர் அமீரும் சென்னையில் வாக்களித்த பிறகு செய்தியாளர்களுடன் பேசியதாவது:

"அமீமானத்தின் அடிப்படையில் நாம் வாக்களிக்கக் கூடாது. உலக அளவில் பெண்களுக்கான வாக்குரிமை 200 ஆண்டுகளுக்கு முன்புதான் இருந்து வருகிறது. மேற்கத்திய நாடுகளிலேயே 150 ஆண்டுகளுக்கு முன்பு இருந்துதான் பெண்கள் வாக்களிக்கின்றனர்.

பெண்களுக்கான வாக்குரிமை சாதாரணமான விஷயம் அல்ல. குழந்தைதிருமணம், உடன்கட்டை ஏறுதல், செருப்பு அணிவதில் இருந்து மாற்றம் என பெண்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். மாற்றம் யாரில் இருந்து தொடக்க வேண்டும் என்ற கேள்வி உள்ளது. இவற்றை சிந்தித்து மக்கள் வாக்களிக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

## "தமிழகத்தில் நல்லதொரு மாற்றம் வருமென்று முழுமையாக நம்புகிறேன்" - அண்ணாமலை



தமிழகத்தில் நல்லதொரு மாற்றம் வருமென்று முழுமையாக நம்புகிறேன் என பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கூறினார்.

பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கோவை பீளமேட்டில் உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் தனது வாக்கினை இன்று காலை செலுத்தினார். அதைத் தொடர்ந்து அண்ணாமலை செய்தியாளரிடம் கூறியதாவது: தமிழகத்தில் காலை முதல் எல்லோரும் தங்களது ஜனநாயக கடமையை சிறப்பான முறையில் செய்து வருகின்றனர். அனைத்து இடங்களில் உள்ள வாக்குச்சாவடிகளில் தமிழக மக்கள் வரிசையில் காத்திருந்த வாக்களித்து வருகின்றனர்.

5 கோடியே 65 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். 29 வயதிற்கு கீழே ஒரு கோடியே 30 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். முதல் முறை வாக்காளர்கள் கிட்டத்தட்ட 17 லட்சம் பேர் உள்ளனர். அனைவரும் நிச்சயம் தங்களது ஜனநாயக கடமை செய்ய வேண்டும் . அனைவரும் வாக்களிக்க வேண்டும். மதியம் வெயில் அதிகமாக இருந்தால் கூட குடையுடன் வந்து பெரியவர்கள் வாக்களிக்கலாம் வாக்குச்சாவடியில் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. வாக்களிக்காமல் யாரும் வீட்டில் இருந்து விட வேண்டாம்.

தமிழகத்தில் நல்ல ஒரு மாற்றம் வரும் என்று முழுமையாக நான் நம்புகின்றேன். மனசாட்சிப்படி சரியான முறையில் அனைவரும் ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும். 84 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என செய்திகள் கேள்விப்பட்டேன். தமிழ்நாடு எப்பொழுதும் அமைதியான மாநிலம். நாம் ஒரே கட்டமாக தான் தொடர்ந்து வாக்குப்பதிவு நடத்தி வருகிறோம்.

மக்கள் எப்போதும் அமைதியாக வந்து வாக்களித்து விட்டு சென்று விடுவார்கள் எதுவும் இருக்காது. அதேசமயம் கடந்த இரண்டு மூன்று நாட்களாக வாக்குக்கு பணம் கொடுத்தல், கரூரில் பார்த்தால் தங்கம் வெள்ளி பொருட்கள் கொடுத்தல், கோவையில் பணம் விநியோகித்தல் என வாக்குப்பதிவுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அதிகம் மீறி இன்று வாக்களிக்க வருபவர்கள் மனசாட்சிப்படி வாக்களிப்பார்கள் என்று நம்புகின்றேன். சென்னையில் இருந்து தென் தமிழகத்திற்கு செல்லக்கூடிய பேருந்து வசதிகள் குறைவாக இருக்கிறது. சிங்காநல்லூரில் இருந்து வெளியூர் செல்லும் பேருந்துகளும் குறைவாய் இருக்கிறது என்ற புகார் வந்தது. தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் இன்னும் சிறப்பாக செய்திருக்கலாமோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. பேருந்துகள் பொதுஅளவுக்கு இருக்கிறது என்று உறுதிப்படுத்தி இருக்க வேண்டும். கட்சி சார்ந்தவர்கள் பொதுவாக இருப்பவர்கள் இளைஞர்கள் கூட பேருந்து வசதி தொடர்பாக புகார் கூறுகின்றனர். அனைவரும் வாக்களிப்பதற்கு தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் ஆணையம் இன்னும் சிறப்பாக தன் பணியை செய்திருக்க வேண்டும் என்று என் தனிப்பட்ட கருத்து வீட்டுக்கு வீடு நடந்து சென்று ஒரு வாக்குக்கு ஐந்தாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். கரூரில் வாக்காளர்களுக்கு தங்க நாணயங்கள் கொடுக்கின்றனர். இவை அனைத்தும் ஒரே நாளில் வரவில்லை. முன்னரே கொண்டு வந்து எங்கோ ஒரு இடத்தில் பதுக்கி வைத்து இதை கொண்டு சென்று இருக்கின்றனர்.

## வைத்தீஸ்வரன் கோவிலில் நகரத்தார் திருவிழா..

மயிலாடுதுறை, ஏப்.24:

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவிலில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான வைத்தியநாத சுவாமி கோவில் உள்ளது. இந்த கோவிலில் வைத்தியநாத சுவாமி, தையல்நாயகி அம்மன், விநாயகர், செல்வமுத்துக்குமாரசாமி, அங்காரகன் (செவ்வாய்), தன்வந்திரி ஆகிய சாமிகள், தனி சன்னதிகளில் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றனர்.

இக்கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதம் 2-வது செவ்வாய் அன்று நகரத்தார் திருவிழா நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு நகரத்தார் திருவிழா நேற்று நடந்தது. முன்னதாக புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, தஞ்சை, சேலம் உள்பட பல்வேறு ஊர்களில் உள்ள நகரத்தார்கள் சித்திரை 1-ந்தேதி முதல் தங்கள் வீட்டில் வேப்பங்குச்சியில் மஞ்சள் துணி கட்டி வைத்து வழிபாடு செய்து வந்தனர். மேற்கண்ட ஊர்களில் இருந்து நகரத்தார்கள் தங்கள் வீட்டில் வைத்து வழிபட்ட வேப்பங்குச்சியை கையில் எடுத்துக்கொண்டு பாதயாத்திரையாக புறப்பட்டு வந்தனர். அவர்கள் நேற்று முன்தினம் இரவு வைத்தீஸ்வரன் கோவிலை வந்தடைந்தனர். தொடர்ந்து கோவில் கொடிமரம் முன்பு தங்களது பிரார்த்தனையை வேண்டிக்கொண்டு தாங்கள்கொண்டுவந்தவேப்பங்குச்சிகளை கொடிமரத்தில் விட்டுச்சென்றனர். பின்னர் வைத்தியநாதசுவாமி, தையல்நாயகிஅம்மன், விநாயகர், செல்ல முத்துகுமாரசாமி உள்ளிட்ட சாமிகளை தரிசனம் செய்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

## பழநி பெருமாள் கோயிலில் சித்திரை திருவிழா தொடக்கம்

பழநி லட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலில்சித்திரைதிருவிழாபுதன்கிழமை காலை (ஏப்.22) கொடியேற்றத்துடன் தொடங்கியது.

திண்டுக்கல் மாவட்டம் பழநி மேற்கு ரத வீதியில் லட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. பழநிதண்டாயுதபாணிசுவாமிகோயிலின் உப கோயிலான இக்கோயில் 400 ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்தது. இக்கோயிலில் சித்திரைத் திருவிழாவையொட்டி, புதன்கிழமை (இன்று) சங்கு, சக்கரம், கருடாழ்வார் படம் பொறிக்கப்பட்ட கொடிக்கு சிறப்பு பூஜைசெய்யப்பட்டு, காலை 9.45 மணிக்கு கொடியேற்றம்நடைபெற்றது. முன்னதாக, பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் கோயில் உதவி ஆணையர் செந்தில் குமார், கண்காணிப்பாளர் அழகர் சாமி, கந்த விலாஸ் உரிமையாளர் செல்வ குமார் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். திருவிழாவையொட்டி, தினமும் பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதியுலா நடைபெறும். விழாவின் முக்கிய நிகழ்வுகளாக ஏப்.28-ம் தேதி இரவு 7 மணிக்கு மேல் திருக்கல்யாணம், ஏப்.30-ம் தேதி காலை 8 மணிக்கு மேல் தேரோட்டம் நடைபெற உள்ளது. மே 1-ம் கொடியிறக்குதலுடன் திருவிழா நிறைவு பெறும்.

# சார்தாம் யாத்திரை: கேதார்நாத் கோயில் நடைதிறப்பு- திரளான பக்தர்கள் தரிசனம்

புதுடெல்லி, ஏப்.24:



உத்தரகண்டில் வருடாந்திர சார்தாம் யாத்திரையின் ஒரு பகுதியாக கேதார்நாத் கோயில் நடை புதன்கிழமை திறக்கப்பட்டது. இதையொட்டி, திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம் மேற்கொண்டனர்.

உத்தரகண்டில் யமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய 4 புண்ணியத் தலங்களுக்கான வருடாந்திர சார்தாம் யாத்திரை, அட்சய திருதியை நாளான கடந்த ஏப்ரல் 19-ஆம் தேதி தொடங்கியது. அன்றைய தினம் யமுனோத்ரி, கங்கோத்ரி கோயில்களின் நடை திறக்கப்பட்டது.

சிவபெருமானுக்குரிய பிரசித்தி பெற்ற தலமான கேதார்நாத் கோயிலின் நடை புதன்கிழமை திறக்கப்பட்டது. இதையொட்டி, கோயிலில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் 'ஹர ஹர மகாதேவ்' என பக்தி கோஷம் எழுப்பினர்.

நடை திறப்பு நிகழ்வில் முதல்வர் புஷ்கர் சிங் தாமி கலந்துகொண்டு, சுவாமிக்கு முதல் பூஜையை மேற்கொண்டார். பக்தர்களுக்கான பல்வேறு வசதிகளையும் அவர் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

நடை திறப்பையொட்டி, கேதார்நாத் கோயில் முழுவதும் ஒன்றரை டன் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

விஷ்ணு பகவானுக்குரிய பத்ரிநாத் கோயில் வியாழக்கிழமை காலை திறக்கப்பட உள்ளது.

பிரதமர் மோடி வாழ்த்து: சார்தாம் யாத்திரை மற்றும் கேதார்நாத் கோயில் நடைதிறப்பையொட்டி, பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, பக்தர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், 'கேதார்நாத் உள்பட 4 புண்ணியத் தலங்களுக்கு மேற்கொள்ளப்படும் சார்தாம் யாத்திரை, நாட்டின் நம்பிக்கை, ஒற்றுமை, வளமான பண்பாட்டுப் பாரம்பரியங்களின் மாபெரும் கொண்டாட்டமாகும். ஜகத்குரு ஆதி சங்கராசாரியர், பத்ரிநாத் மற்றும் கேதார்நாத்துக்கு பயணித்ததன் மூலம் இந்திய கலாசாரத்துக்கு புதிய திசையைக் காட்டினார்.

இமயமலையின் மடியில் அமைந்துள்ள இந்த 4 தலங்களும் மக்களின் நித்திய நம்பிக்கை மற்றும் பக்தியின் மையங்களாக விளங்குகின்றன என்று தெரிவித்துள்ளார்.

# திருவையாறு ஐயாறப்பர் கோவில் சித்திரை திருவிழா

திருவையாறு, ஏப்.24:

தஞ்சையை அடுத்த திருவையாறில் பிரசித்தி பெற்ற ஐயாறப்பர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை திருவிழா சிறப்பாக நடப்பது வழக்கம். இந்த ஆண்டு சித்திரை விழா நேற்று தொடங்கியது. அடுத்த மாதம் (மே) 3-ந் தேதி வரை விழா நடக்கிறது.

முதல் நாளான நேற்று காலை சிறப்பு அபிஷேக பூஜைகள் செய்து கொடி ஏற்றப்பட்டது. விழாவில் திருவையாறு மற்றும் சுற்றுவட்டாரத்தில் உள்ள பக்தர்கள் கலந்துகொண்டு ஐயாறப்பரை வழிப்பட்டனர். 25-ந் தேதி (சனிக்கிழமை) மாலை தன்னைத்தானே பூஜித்தல் நடைபெறுகிறது. அன்று 6 ஊர்களிலிருந்து சுவாமிகள் கோவிலுக்கு வந்து சன்னதிக்கு முன் சைவர்களுக்கு மகேஸ்வர பூஜை நடைபெறுகிறது.

29-ந் தேதி (புதன்கிழமை) தேரோட்டம் நடைபெறுகிறது. ஐயாறப்பர் அறம் வளர்த்த நாயகியுடன் தேரில் அமர்ந்து பஞ்ச மூர்த்திகளுடன் திருவையாறின் 4 வீதிகளிலும் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். தேர் 4 வீதிகளில் வந்து நிலையை அடைந்ததும் தீபாராதனை காண்பிக்கப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படுகிறது.

மே 2-ந் தேதி (சனிக்கிழமை) முக்கிய திருநாளான சப்தஸ்தான பெருவிழா நடைபெறுகிறது. விழாவை முன்னிட்டு காலை 5.30 மணிக்கு ஐயாறப்பர் அறம்வளர்த்த நாயகியுடன் கண்ணாடி பல்லக்கிலும், நந்திகேஸ்வர் சுயசுவாம்பிகையுடன் வெட்டிவேர் பல்லக்கில் புறப்பட்டு திருப்பழனம். திருசோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, சென்று அன்று இரவு காவிரி ஆற்றில் 6 ஊர் பல்லக்குகளும் தில்லைஸ்தானத்தில் சங்கமிக்கிறது.

# சித்திரை திருவிழா.. தங்கப்பல்லக்கில் புறப்பட்டு பாகற்காய் மண்டபத்தில் எழுந்தருளிய மீனாட்சி -சுந்தரேஸ்வரர்

மதுரை, ஏப்.24:



உலக பிரசித்தி பெற்ற மதுரை சித்திரை திருவிழா கடந்த 19-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழா தொடங்கியதில் இருந்து சுவாமி -அம்பாள் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதிஉலா வருகின்றனர். கடந்த 3 நாட்களில் இரவு நேரங்களில் மாசி விதிகளில் சிறப்பு அலங்காரத்தில் வீதி உலா வருகின்றனர். இதனை காண்பதற்காக நகரின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கானோர் விதிகளில் குவிகின்றனர்.

மாலை 6 மணி முதல் குடும்பம் குடும்பமாக வருபவர்கள், சாலையின இருபுறங்களிலும் காத்திருந்து சாமி தரிசனம் செய்கின்றனர். சுவாமி ஊர்வலத்தின்போது கலைக் குழுவினரின் கண்கவர் நடனம் நடைபெறுகிறது. குழந்தைகள், சிறுமிகள் பல்வேறு சுவாமி வேடங்களை அணிந்து வருகின்றனர்.

மீனாட்சி அம்மன், சுந்தரேஸ்வரர்-பிரியாவிடை

சித்திரை திருவிழாவின் 4-ம் நாளான இன்று காலை 9 மணிக்கு தங்கப்பல்லக்குகளில் பிரியாவிடையுடன் சுந்தரேஸ்வரர், மீனாட்சி அம்மன் ஆகியோர் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளியதும் பல்லக்கு புறப்பாடு நடைபெற்றது. கிழக்கு சித்திரை வீதி, மீனாட்சி கோவில் தெரு, தெற்கு ஆவணி மூல வீதி, தொட்டியன் கிணற்று தெரு, சின்னக்கடை தெரு, தெற்குவாசல் வழியாக வில்லாபுரத்திற்கு சென்றனர். அங்குள்ள பாகற்காய் மண்டபத்தில் (பாவக்காய் மண்டபம்) சுவாமி- அம்பாள் எழுந்தருளினர்.

அப்போது திரளான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.






## நலம் தரும் மருத்துவம்

### கோடையை தணிக்க உதவும் குளிர்ச்சியான காய்கறிகள்!



கோடை காலத்தின் வெப்பத்தைத் தணிக்கவும், உடலை நீரேற்றத்துடன் (HYDRATING VEGETABLES) வைத்திருக்கவும் உதவும் சிறந்த 10 காய்கறிகள் பற்றி இந்தப் பதிவில் காண்போம்.

வெள்ளரிக்காயில் 95% நீர்ச்சத்து உள்ளது. கோடையில் உடல் சூட்டைத் தணித்து, நச்சுக்களை வெளியேற்ற இதுவே சிறந்த தேர்வு.

நீர்ச்சத்து மற்றும் நார்ச்சத்து மிகுந்த இந்த புடலங்காய் செரிமானத்திற்கு மிகவும் நல்லது. இது உடலை குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது.

சுரைக்காய் ஒரு சிறந்த 'COOLANT' ஆகும். இதில் உள்ள நீர்ச்சத்து மற்றும் தாதுக்கள் கோடைக்காலத்தில் ஏற்படும் சிறுநீர் தொற்று பிரச்சனைகளைத் தடுக்க உதவும்.

வெப்பம் காரணமாக ஏற்படும் தோல் வியாதிகள் மற்றும் அஜீரணக் கோளாறுகளைத் தடுக்க பாகற்காய் உதவுகிறது. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

பீர்க்கங்காய் ரத்தத்தைச் சுத்திகரிக்கவும், உடல் வெப்பத்தைக் குறைக்கவும் உதவுகிறது. மலச்சிக்கல் பிரச்சனை உள்ளவர்களுக்கு இது சிறந்த மருந்து.

கோடையில் பொதுவாக ஏற்படும் சோர்வைப் போக்க வெண்டைக்காய் உதவும். இது உடலுக்குத் தேவையான புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது.

தக்காளியில் உள்ள 'லைகோபீன்' (LYCOPENE) சூரிய கதிர்களால் சருமத்திற்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க வல்லது. மேலும் இதில் நீர்ச்சத்தும் அதிகம்.

மஞ்சள் பூசணி அல்லது வெள்ளை பூசணி இரண்டுமே கோடைக்கு உகந்தவை. இவை உடலின் நீர்ச்சமநிலையைப் பராமரிக்கின்றன.

வெப்பக் காலங்களில் உடலுக்குத் தேவையான வைட்டமின்கள் மற்றும் இரும்புச்சத்தை முருங்கைக்காய் வழங்குகிறது. இது உடல் சூட்டை சமன் செய்ய உதவும்.

பீன்ஸில் உள்ள நார்ச்சத்து ஜீரண மண்டலத்தை சீராக வைக்கிறது. கோடையில் எளிதில் செரிக்கக்கூடிய உணவுகளில் இதுவும் ஒன்று

# விரல் ரேகைகளுக்கு பின்னால் இவ்வளவு பெரிய சயின்ஸ் இருக்கா? விஞ்ஞானிகள் சொல்லும் தகவல்!

கைரேகையை பெரும்பாலும் செல்போனை அன்லாக் செய்வதற்கும், அலுவலகத்தில் அட்டெண்டன்ஸ் போடுவதற்கும், அல்லது ஆதார் கார்டு எடுக்கவும்தான் நாம் இன்று பயன்படுத்துகிறோம். ஆனால், இயற்கையாகவே மனிதர்களுக்கு இந்த விரல் ரேகை எதற்கு உருவானது என்று எப்போதாவது நீங்கள் யோசித்தது உண்டா.

பல லட்சம் வருடங்களாகப் பரிணாம வளர்ச்சியில் நமது முன்னோர்களிடமிருந்து நமக்குக் கிடைத்த இந்த சின்ன ரேகைகளுக்குப் பின்னால் ஒரு மிகப்பெரிய அறிவியல் மற்றும் உயிர் பிழைப்பதற்கான போராட்ட வரலாறு மறைந்திருக்கிறது. இது வெறும் அடையாளம் காண்பதற்கான ஒருடூல் கிடையாது. அதைவிட முக்கியமான பல ரகசியங்களை இது தன்னுள் அடக்கியுள்ளது.

### கைரேகைகளின் கிரிப்!

நமது கைகளில் இந்த மேடுபள்ளமான ரேகைகள் இருப்பதற்கான மிக முக்கிய காரணம் 'கிரிப்' என்று சொல்லக்கூடிய பிடிமானம்தான். நீங்கள் ஒரு வழுவழுப்பான கிளாஸை பிடிக்கும்போதோ அல்லது மரத்தில் ஏறும்போதோ உங்கள் கை சறுக்காமல் இருப்பதற்கு இந்த ரேகைகள்தான் பெரும் உதவி செய்கின்றன. கைகளில் லேசாக வியர்க்கும் போது அந்த ஈரம் நமது கைகளை மிருதுவாக்கி ஒரு சூப்பரான பிடிமானத்தைக் கொடுக்கிறது.

அதே சமயம், ரொம்ப அதிகமாக தண்ணீர் கைகளில் பட்டால், இந்த ரேகைகளுக்கு இடையே உள்ள பள்ளங்கள் அந்தத் தண்ணீரை அப்படியே வெளியேற்றி கை வழுக்காமல் பார்த்துக் கொள்கின்றன. குரங்குகளில் இருந்து நாம் வந்தோம் எனச் சொல்வார்கள் அல்லவா, அப்போது மரங்களில் தாவுவதற்கும் உணவைப் பிடித்துச் சாப்பிடுவதற்கும் இந்த ரேகைகள்தான் அவர்களுக்கு ஒரு மாபெரும் ஆயுதமாக இருந்துள்ளது.

### தொடு உணர்வு!

ஒரு பொருளை நாம் தொடும்போது, அந்தப் பொருளின் சொரசொரப்பு அல்லது மென்மையை நமது மூளைக்கு மிகத் துல்லியமாகக் கடத்துவது இந்த ரேகைகள்தான். ரேகைகளில் உள்ள மேடுகள் ஒரு பொருளின் அதிர்வுகளை நமது தோலுக்கு அடியில் உள்ள நரம்புகளுக்கு நேரடியாகக் கடத்துகின்றன.

இதனால்தான் நம்மால் ஒரு சின்ன ஊசியைக் கூட மிகக் கவனமாகக் கையாள முடிகிறது அல்லது கண்ணை மூடிக்கொண்டே ஒரு பொருளைத் தொட்டு அது என்னவென்று சரியாகச் சொல்ல முடிகிறது. இதே போன்ற ரேகைகள் நமது உள்ளங்கால்களிலும் இருப்பதால்தான் நம்மால் தரையில் வழுக்கி விழாமல் பேலன்ஸ் செய்து நடக்க முடிகிறது.



### தனித்துவம்!

இன்னொரு பெரிய ஆச்சரியம் என்னவென்றால், இந்த ரேகைகள் நாம் தாயின் வயிற்றில் இருக்கும்போதே பத்தாவது வாரத்திலேயே உருவாக ஆரம்பித்து விடுகின்றன.

மரபணுக்களைத் தாண்டி, வயிற்றில் உள்ள நீர், ரத்த ஓட்டம் மற்றும் தோல் வளரும் விதம் என பல விஷயங்கள் இணைந்துதான் இந்த ரேகையைச் செதுக்குகின்றன.

இதனால்தான் இந்த உலகத்தில் எந்த இரண்டு பேருக்கும் ஒரே மாதிரியான ரேகை இருப்பதில்லை.

ஏன், ஒரே கருவில் உருவான இரட்டையர்களுக்குக் கூட கைரேகைகள் அச்சு அசலாக ஒன்றாக இருக்காது என்பது ஒரு ஆச்சரியமான உண்மையாகும்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு காடுகளில் வாழ்ந்த மனிதர்கள் மரங்களில் பாதுகாப்பாக ஏறுவதற்கும், வேட்டையாடுவதற்கும் உருவான இந்த ஒரு சின்ன விஷயம்தான், இன்று மாடர்ன் உலகில் மிகப்பெரிய செக்யூரிட்டி சிஸ்டமாக மாறி நிற்கிறது.

போலிஸ் இன்வெஸ்டிகேஷன் ஆகட்டும் அல்லது சர்வதேச விமான நிலையங்களில் நடக்கும் செக்கிங் ஆகட்டும், எல்லாவற்றுக்கும் நமது கைரேகைதான் முக்கிய சாட்சியாக இருக்கிறது.

# "தொலைந்து போன டைரி"



ரவி கல்லூரியில்
இறுதியாண்டு மாணவன்.
அவன் வாழ்க்கையில்
மிக முக்கியமான ஒன்று,
அவனுடைய பழுப்பு நிற
டைரி.
அது சாதாரண டைரி அல்ல.
அதில் அவன் கனவுகள்
இருந்தன.
"டைரக்டர் ஆக வேண்டும்..."
"ஒரு நாள் என் கதையை
உலகம் கேட்க வேண்டும்..."

"அப்பாவுக்கு ஒரு வீடு கட்ட
வேண்டும்..."
என ஒவ்வொரு பக்கமும்
அவன் உள்ளத்தின் குரல்.
ஒருநாள் கல்லூரி முடிந்து,
பேருந்து நெரிசலில் சிக்கி,
சிரமப்பட்டு வீடு வந்து
சேர்ந்தவன், அப்போதுதான்
கவனித்தான் டைரி மிஸ்ஸிங்.
அவன் இதயம் நொறுங்கியது..
மறுநாள் காலை முதலே
தேட ஆரம்பித்தான். பேருந்து
நிலையம்...
கல்லூரி...
வழியெல்லாம்... ம்ஹூம்...
கிடைக்கவேயில்லை.
அவன் மனது வெறுமை
ஆனது.
டைரி தொலைந்து போனதால்
அதிலிருந்த கனவுகளும்
தொலைந்து போயின.
ஒரு வருடம் கழித்து... ஒரு
பேனர் அவன் கண்ணில்
பட்டது.
"இளம் இயக்குனர் விருது
டைரக்டர் விஜய்குமார்
அவர்களுக்கு"

அருகே போய் அந்த
பேனரைக் கூர்ந்து
பார்த்தான். கீழே ஒரு வரி,
"என் கனவுகளுக்கு உயிர்
கொடுத்த டைரிக்கு நன்றி..."
ரவி திடுக்கிட்டான்.
அந்த விழாவிற்கு நேரில்
சென்றான்.
மேடையில் அந்த இளம்
டைரக்டர் பேச ஆரம்பித்தார்.
"ஒரு வருடம் முன்பு,
பேருந்தில் ஒரு டைரி
கிடைத்தது...
அதில் யாரோ ஒருவர் தன்
கனவுகளை எழுதியிருந்தார்.
அந்த வார்த்தைகள் என்னை
உலுக்கின... நான் அந்த
டைரியில் இருந்தபடி என்
வாழ்க்கையை மாற்றினேன்..."
சொல்லியவாறே அந்த
டைரியை எடுத்துக் காட்டினார்.
அதே பழுப்பு நிற டைரி.
ரவியின் கண்களில் கண்ணீர்.
மெதுவாக மேடைக்குச்
சென்றான்.
"சார்... அது... என் டைரி..."
சொன்னான்.

அந்த இளம் டைரக்டர் சில
நொடிகள் அமைதியாக
பார்த்தார். "மிஸ்டர்... நீங்கள்
அதை எழுதினீர்கள்...
ஆனால் அதன் செயல்படுத்த
முயலவில்லை!"
அந்த வார்த்தை ரவியின்
இதயத்தை கிழித்தது.
"இந்த டைரி எனக்கு
கிடைக்கவில்லை என்றால்...
நான் இன்றைக்கு இந்த
மேடைக்கே வந்திருக்க
மாட்டேன்.
இது உங்களிடம் இருந்த
போது...
நீங்கள் ஏன் முயற்சி
செய்யவில்லை?"
ரவியால் பதில் சொல்ல
முடியவில்லை.
அவன் விழியோரக் கண்ணீர்
தோல்வியின் சாட்சியாய்த்
தெறித்தது..

அந்த இளம் இயக்குனர்
டைரியை ரவியிடமே
கொடுத்தார்.

"கனவுகளை அடுக்குவது
எளிது... அதை
நிஜமாக்குவதுதான்
உண்மையான துணிச்சல்...
இப்போது உங்கள் நேரம்.....
நீங்கள் அதில் எழுதியதை
நீங்கள் நிரூபிக்க வேண்டிய
நேரம்." என்று அந்த இளம்
இயக்குனர் சொல்ல,
கட்டை விரலை
உயர்த்திக்
காட்டியவாறே
அங்கிருந்து
நடந்தான் ரவி



முகில் தினகரன்
கோயமுத்தூர்

# மலர்ந்த பாசம்



பள்ளி
தலைமையாசிரியராகப்
பணியாற்றி ஓய்வு பெற்ற
சுந்தரத்திற்கு, தன்
வாழ்நாள் முழுவதும்
பேணி வந்த ஒழுக்கமும்,
தனித்துவமும் மீது தனிப்
பெருமை உண்டு.

"யார் தயவும் இல்லாமல்
சுயமாக வாழ்ந்து
காட்டுவதே கௌரவம்"
என்பதே அவரது
கொள்கை.

மகன் சுரேந்தர்
மென்பொருள்
துறையில் கைநிறைய
சம்பாதித்தாலும், சுந்தரம்
எதற்கும் அவன் கையை
எதிர்பார்ப்பதில்லை.

வீட்டுத் தோட்டம்
பராமரிப்பது முதல்,
மின்சாரக் கட்டணம்
செலுத்துவது வரை
அனைத்தையும் அவரே
இழுத்துப் போட்டுச்
செய்வார். யாரிடமும்
அனாவசியமாகப் பேச
மாட்டார்.

"அடுத்தவர்களிடம்
நெருங்கினால்
தேவையற்ற சச்சரவுகள்
வரும்" என்பது
அவரது எண்ணம்.
மனைவி மரகதம்
எவ்வளவோ சொல்லியும்
அவர் தன் போக்கை
மாற்றிக்கொள்ளவில்லை.

ஒரு ஞாயிற்றுக்கிழமை
காலை. சுரேந்தர் தன்
குடும்பத்துடன் வெளியூர்
சென்றிருந்தான்.
மரகதமும் உறவினர்
வீட்டு விசேஷத்திற்காகச்
சென்றிருக்க, சுந்தரம்
மட்டும் வீட்டில் தனியாக
இருந்தார். திடீரென
அவருக்கு மூச்சுத்திணறல்
ஏற்பட்டது. நெஞ்சுக்கூடு
அழுத்துவது போன்ற
உணர்வு. பதற்றத்தில்
போனைத் தேடினார்,
அதுவோ பக்கத்து
அறையில் இருந்தது.
எழுந்து செல்லக் கூட
உடலில் தெம்பு இல்லை.
நிமிடங்கள் யுகங்களாக
நகர்ந்தன.

அப்போதுதான் வீட்டின்
அழைப்பு மணி அடித்தது.
மெல்லத் தவழ்ந்து சென்று
கதவைத் திறந்தபோது,
அங்கே பக்கத்து வீட்டுச்
சிறுவன் வினித் நின்று
கொண்டிருந்தான்.
"தாத்தா, எங்க அம்மா
இந்த அதிரசத்தைக்
கொடுத்துட்டு வரச்
சொன்னாங்க" என்று
நீட்டியவன், சுந்தரத்தின்
நிலையைக் கண்டு
பதறினான்.
உடனடியாக தன்
தந்தையை அழைத்து,
சுந்தரத்தை அருகில்
உள்ள மருத்துவமனையில்
சேர்த்தான் வினித்.
முதலுதவி சிகிச்சைக்குப்
பின் சுந்தரம் கண்
விழித்தபோது, சுரேந்தரும்
மரகதமும் பதற்றத்துடன்
நின்றிருந்தனர்.
பக்கத்திலேயே வினித்தின்
தந்தை அமர்ந்திருந்தார்.
"நல்லவேளை சார், வினித்
சரியான நேரத்துக்கு
வந்தான். இப்போ பயப்பட
எதுவுமில்லை" என்றார்
அவர் புன்னகையுடன்.
சுந்தரத்திற்கு அன்று
ஒரு உண்மை புரிந்தது.
நாம் எவ்வளவுதான்
வசதியாகவும், யாரையும்
சாராமலும் இருக்கிறோம்
என்று நினைத்தாலும்,
இக்கட்டான சூழலில்
முதலில் கை கொடுப்பது
நம்மைச் சுற்றியுள்ள
மனிதர்கள்தான்.
"பணம் கௌரவத்தைத்
தரலாம், ஆனால் அவசர
காலத்தில் உயிரைக்
காப்பதும் மனதிற்கு
மருந்தாவதும் ஒரு
துளி அன்பு கலந்த
அண்டை வீட்டாரும்
உறவுகளும்தான்" என்று
உணர்ந்தார். அன்று
முதல், 'யார் தயவும்
வேண்டாம்' என்று
சொன்னவர், தெருவில்
யாரைப் பார்த்தாலும்
இன்முகத்துடன் நலம்
விசாரிக்கத் தொடங்கினார்.
தனிமையில் சேர்த்த
சொத்துக்களை விட,
பகிர்வில் கிடைக்கும்
பாசமே மேலானது
என்பதை அந்தத்
தலைமையாசிரியர்
உணர்ந்த தருணம் அது.

-லால்குடி.
வெ.நாராயணன்


# மாயக்கண்ணன் லீலை (பாகம் -8)





- எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம்.
சென்னை 88

"பகாசுரன்"
பிருந்தாவனத்தில்
யமுனை ஆற்றங்கரையில்
கிருஷ்ணனும்,
பலராமனும் எல்லா
இடைச் சிறுவர்களுடனும்
தினமும் விளையாடிக்
கொண்டிருப்பது வழக்கம்.
ஒரு நாள் அவர்கள்
கன்றுகளை மேய்த்துக்
கொண்டிருந்தார்கள்.
அன்று வெயில் அதிகமாக
சுட்டெரித்ததால்
சிறுவர்களுக்கு தாகம்
ஏற்பட்டது. அவர்கள்
ஆற்றில் ஓடிய நீரை
அருந்துவதற்காக
சென்றார்கள். தங்கள்
கன்றுகளுக்கும் நீர்
தேவைப்படுமே என்று
நினைத்தார்கள்.சிறுவர்கள்
தங்களுடைய கன்றுகளை
ஆற்றில் உள்ள தண்ணீரை
குடிப்பதற்காக ஓட்டிச்
சென்றார்கள். கன்றுகளும்
நீரை பருகியன. தாகம்
அதிகமாக இருந்ததால்
மீண்டும் சிறுவர்கள்
நீரைப் பருகினார்கள்.
அப்பொழுது அங்கே
ஒரு பெரிய பூதத்தைப்
போன்று பயங்கரமான
ஒரு உருவத்தை கண்டு
பயந்தார்கள். அது
உயரமான மலையில்
இருந்து உடைந்து விழுந்த
பெரிய பாறாங்கல்லை
போன்று இருந்தது.
மேலும் அதை உற்று
பார்க்கும் போது கூறிய
மூக்கு உள்ள கொக்கு
வடிவம் கொண்டிருந்தது.
அவன் ஒரு அசுரன்.
அந்த அசுரனின் பெயர்
பகாசூரன்.' பகா' என்ற
சொல்லிற்கு கொக்கு என்று
பொருள். கிருஷ்ணனை
கொல்வதற்காக , ராட்ஷச
கொக்கின் வடிவில்
அவன் வந்தான். அந்த
அசுரன் வேகமாய் வந்து
கிருஷ்ணனை விழுங்க
முயன்றான் .இவனும்
கிருஷ்ணனை கொல்
வதற்காக, கம்சனால்
அனுப்பப்பட்டவன்.
கொடிய அசுரனாகிய இந்த
'பகாசுரன்' கிருஷ்ணனை
தாக்க முயன்ற போது,
கிருஷ்ணன் தன்னுடைய
இரு கைகளாலும்
பகாசுரனுடைய
கூரிய மூக்கின் இரு
பக்கங்களையும்
பிடித்தான்.அவன்
புல்லை கிழிப்பது போல்
விளையாட்டாய் கிழித்தான்
. வலி தாங்க முடியாமல்
அலறிக்கொண்டே
கொக்கு வடிவில் வந்த
பகாசுரன் கீழே விழுந்து
இறந்தான். அந்த
சம்பவத்தைப்பார்த்து
இடைச் சிறுவர்கள்
பிரமித்துப்
போனார்கள்.
கண்ணனுடைய அந்த
சக்தியை கண்டு
பரவசமடைந்தார்கள்.
வானுலகில் இருந்து
தேவர்கள் இந்த நிகழ்ச்சியை
பார்த்து மகிழ்ந்தார்கள்.
'நல்லோர்களின் நாயகனே
போற்றி'
என துதித்தார்கள்.
பட்சிகளுடன்
விளையாடுவதும்,
மணலில் வீடு கட்டுவதும்,
குரங்குகளுடன் தாவித்தாவி
விளையாடுவதும், எல்லா
சிறுவர்களுடனும்
ஓடி
விளையாடுவதும், மரத்தின்
பின்னால் ஒளிந்து
கொண்டு மற்றவர்களை
கண்டுபிடிப்பதும், இது
போன்ற பலவிதமான
விளையாட்டுக்களில்
தங்களுடைய



பாலப்பருவத்தை
பலராமனும், கிருஷ்ணனும்
கடந்தார்கள்.
பாலபருவத்திற்கு
'கௌமார பருவம்' என்றும்
கூறுவார்கள் .5 வயது வரை
கௌமார பருவம் ,10 வயது
வரை 'பௌகண்டப்பருவம்'
,15 வயது வரை 'கிசோரம்',
பதினைந்து வயதுக்கு மேல்
'யௌவனம்' எனப்படும்.
மாலை நேரமானதால்
கிருஷ்ணன், பலராமன்
மற்றும் இடைச் சிறுவர்களும்
தங்களுடைய கன்றுகளை
ஓட்டிக்கொண்டே வீடு
திரும்பினார்கள். வரும்
வழியில் களைப்பு
தெரியாமல் இருக்க
கிருஷ்ணன் தன்னுடைய
குழலினை ஊதிக்கொண்டே
வந்தான். வீடு வந்து சேரும்
வரை ,அந்த இனிமையான
குழலோசையை,
கன்றுகளும் கேட்டுக்
கொண்டே சோர்வடையாமல்
தங்களுடைய இடத்திற்கு
வந்து சேர்ந்தன.
கிருஷ்ணனின்
குழலோசையை
கேட்ட கோபியர்களும்
சந்தோஷத்துடன் அருகே
ஓடி வந்தார்கள். இடைச்
சிறுவர்களும் தங்கள்
தாய்மாரிடம் அங்கு
நடந்த சம்பவத்தை
பற்றி கூறினார்கள்.
நந்தகோபனும்,
யசோதையும்
சந்தோஷத்துடன்
கண்ணனையும்,
பலராமனையும் அணைத்துக்
கொண்டார்கள். இவ்வாறாக
தினமும் கண்ணனின்
லீலைகள் நடந்த வண்ணம்
இருந்தன.

தொடரும்..

# ஆன்மீக தரிசனம்

கற்றோர்கள் தாமுகப்பர் கல்வி தன்னில் ஆசை உள்ளோர் பெற்றோம் என உகந்து பின்பு கற்பர்...

என்ற உபதேச இரத்தின மாலையில் இன்றுலகீர் சித்திரையில் ஏய்ந்த திருவாதிரை நாள் என்றையினும் இன்றி தனுக்கேற்றமென்தான் என்றவர்க்குச் சாற்றுகின்றேன் கேண்மின் எதிராசர் தம்பிறப்பால் நாற்றிசையும் கொண்டாடும் நாள்..

ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்த நாள்களிலும் வாழ்வான நாள் நமக்கு மண்ணுலகீர் ஏழ்பாரும் உய்ய எதிராசர் உதித்தருளும் சித்திரையில் செய்ய திருவாதிரை

எந்தை எதிராசர் இவ்வுலகில் எந்தமக்கா வந்துதித்த நாள் என்னும் வாசியினால் இந்தத் திருவாதிரை தன்னின் சீர்மைதனை நெஞ்சே ஒருவாமல் எப்பொழுதும் ஓர்

ஆழ்வார்கள் ஏற்றம் அருளிச்செயல் ஏற்றம் தாழ்வாதும் இன்றி அவை தான் வளர்த்தோர் எழுபாரும் உய்ய அவர்கள் செய்த வியாக்கியைகள் உள்ளதெல்லாம் வையமறியப் பகர்வோம் வாய்ந்து...

என்ற எத்திராசர் ஆகிய எம்பெருமானார் தான் பெற்ற பேறினை அறிந்து கொண்டேன் திருக்கோஷ்டியூர் தன்னில்..

ஆம் இன்று அவரது திருநட்சத்திரம். நேற்றையப் பொழுதில் எல்லாம் அவரது நினைவுகளே..

நல்ல மணம் உள்ளதொன்றை நண்ணியிருப்பதற்கு நல்ல மணம் உண்டாம் நயமது போல் நல்ல குணம் உடையோர் தங்களுடன் கூடியிருப்பதற்குக் குணமகவேயாம் சேர்த்திக் கொண்டு

தீய கந்தம் உள்ள தொன்றைச் சேர்ந்திருப்பது ஒன்றுக்குத் தீய கந்தம் ஏறும் திறமது போல் தீய குணமுடையோர் தங்களுடன் கூடியிருப்பார்க்குக் குணமதுவே யாம் செறிவு கொண்டு..

உண்மைதான் வாழ்க்கையின் மாற்றங்கள் எப்படி நடக்கின்றன எங்கே யாரால் நடக்கின்றது என்பதை எல்லாம் அறியக்கூடிய ஞானத்தை நாம் பெறவில்லை.

திடீரென்று காரைக்குடி செல்ல வேண்டும் என்று தோன்றவே அங்கு சுற்றியுள்ள ஊர்களைப் பற்றிக் கேட்கும் பொழுது திருக்கோஷ்டியூர் செல்ல வேண்டும் என்ற அபிப்பிராயம் வந்தது.

திருக்கோஷ்டியூர் என்ற உடனே திருமா மகள் தாயாரும் நினைவுக்கு வரவே ஆம் ஏகாந்த சேவையில் தன்னை மறந்து அவன் அழகில் சொக்கி எவ்வளவு நேரம் நின்றோமோ தெரியாது.

எம்பெருமானாரின் திருநட்சத்திரம் நாளை அவர் கூறிய "ஓம் நமோ நாராயணா எட்டெழுத்து மந்திரத்தைச் சொன்ன இடத்தைப் பார்க்க வேண்டும்!" என்ற பொழுது "தாயார் சன்னதியில் இருந்து ஒரு பாதை போகும் அங்குப் போய் கேளுங்கள் போகலாம்!" என்றார். ஆகா என்று தாயார் சன்னதிக்கு வந்தோம். அங்கு ஒரு உண்டியல் வைக்கப்பட்டிருந்தது. அது பக்கத்தில் ஒரு பாதை போனது. அது வழியாகப் போகலாம் என்று மேலே ஏறும்பொழுது அங்குப் பூட்டு இருந்தது.

பார்க்க முடியாதா என்ற ஆதங்கம், மேலும் படிகள் எல்லாம் குத்து வெட்டாகவும் உயரமாகம் இருப்பதால், இனி வரும் காலம் கூட, நமக்கு அதைப் பார்க்கக்கூடிய தெம்பு இருக்காது என்று எண்ணமும் வர, பார்த்தே ஆக வேண்டும் என்ற உந்தலில் பூட்டி இருக்கிறது என்று நம் ஆதங்கத்தை அச்சகரிடம் சொல்ல, "அங்கு ஒருவர் இருப்பார் அவரை அழைத்து வாருங்கள்! அவர் உங்களைக் கூட்டிச் செல்வார்!" என்றார். நாங்களும் அவரை மெதுவாக அழைத்து வந்தோம். அவர் "வாருங்கள்" என்று எம்பெருமானாரே கூட வந்த உணர்வுடன் நாங்களும் அவருடன் சென்றோம்.

வழிகாட்டியபடியே வந்த அவர், கீழே இருக்கக்கூடிய பெருமாள் பூமியில் அவதாரம் காளிங்கநர்த்தன கிருஷ்ணர் என்றார். அதற்கு அடுத்து உபேந்திரர் என்ற பிரம்மலோகத்தில் இருக்கிறார் என்றார். அதற்கு மேலே பரமபத வாசலில் சயனக்கோலத்தில் எம்பெருமான் உந்தியில் பிரம்மனுடன் காட்சியளிக்கிறார்.

அந்தப் பாதையில் ஏறி மேலே வந்தவுடன் தான் தோன்றியது, குருவிடம் எட்டெழுத்து மந்திரத்தைக் கற்றவர் எவ்வளவு வேகமாக இதை எல்லாம் கடந்து வந்து அந்த மந்திரத்தைச் சொல்ல வேண்டும் என்ற அந்த உந்துசக்தி அவரிடம் எவ்வளவு இருந்திருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

எம்பெருமானார் எங்களுக்குக் கதை



சொல்வது போல, அந்தப் மனிசர் (எங்களுக்கு வழிகாட்டியாக வந்த அவர்) பேச ஆரம்பித்தார்.

இந்த ஊருக்குத் திருக்கோஷ்டியூர் என்ற பெயர் ஏன் வந்தது என்று ஆரம்பித்தவர். கோஷ்டி என்பது கூடும் இடம். பலபேர் கூடிய இடம் தானே கோஷ்டியூர். திருக்கோஷ்டியூர் என்பது திரு என்பது மதிப்பைக் கொடுப்பதற்காக திருவரங்கம், திருவானைக்காவல் என்பது போல் எனவே திருக்கோஷ்டியூர் என்று ஆயிற்று. கோஷ்டி என்றால் கூடுபவர் என்றால் யாரெல்லாம் கூடினார்கள்? ஏன் கூடினார்கள்? எதற்காகக் கூடினார்கள்? என்ற கேள்விகள் எல்லாம் நம் மனதில் எழுகிறது அல்லவா?

உடனே அவர் பதில் அளிக்க ஆரம்பித்தார். (பிரம்மன்) அயன், அரன் இல்லாமல் திருமால் இல்லை அல்லவா! திருமாலும் அயன் அரனோடு இங்குக் கூடினார்கள். இவர்களைப் பார்த்து தேவர்கள் நித்யசூரிகள் என அனைவரும், எல்லா உலகத்தில் இருந்தும் இங்குக் கூடி விட்டார்களாம். எதற்காகக் கூடினார்கள். இரணியன் காலம் முடிந்துவிட்டது என்று அறிந்த அயனும் அரனும் திருமாலுடன் இங்குக் கூடுகிறார்கள். இவர் எடுக்கும் அவதாரத்தைப் பற்றி பேசுவதற்காக! எப்படிப்பட்ட அவதாரம்! அரக்கன் என்றாலும் இரணியன் மிகப்பெரிய அறிவாளி, திறமைசாலி ஏனென்றால் தன் மரணத்தை இவ்வாறாக வரவேண்டும் என்று கூறியவன். அதில் ஒரு பிசகு கூட இருக்கக் கூடாது மனிதனும் இல்லாமல் மிருகமும் இல்லாத ஒரு அவதாரம்! அப்போ பாதி உடம்பில் மனிதனாகவும் பாதி மிருகம் ஆகவும் எடுக்க வேண்டும். ஆயுதம் ஏந்தாமல் எந்த ஆயுதத்தாலும் அவனைக் கொல்லக் கூடாது. அப்பொழுது நகங்கள் கூர்மையான உகிர் உடைய நரசிம்மனாக அவதாரம் எடுக்கிறார். அதற்கு அப்புறம் காலையிலும் இரவிலும் சாவு வரக்கூடாது. அப்படி என்றால் மாலைப்பொழுது அந்திசாயும் நேரம் பகலும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று அவன் வேண்டுகிறான். வீட்டின் உட்புறத்திலும் வீட்டின் வெளிப்புறத்திலும் சாவு வரக்கூடாது. அதற்கடுத்து அவன் பூமியிலும் சாகக்கூடாது விண்ணிலும் சாகக்கூடாது. எனவே வாசப்படியில் வைத்து, தன் மடிமீது அவனைக் கிடத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்று யோசனை சொல்லப்படுகிறது. சரி உகிரால் எடுக்கும் பொழுது அவனுடைய ஒரு சொட்டு ரத்தம் கூட மண்ணில் படக்கூடாது. அப்படி என்றால் குடலை மட்டும் உருவி ரத்தத்தை உறிஞ்சினாலே போதும் அவன் இறந்து விடுவான். எனவே இரணிய வதத்திற்குத் தான் எடுக்க போகும் அவதாரத்தைப் பற்றிப் பேசுவதற்காகக் கூடிய கூட்டமே கோஷ்டி. அவ்வாறு கூட்டப்பட்ட இடமே திருக்கோஷ்டியூர்.

நரசிம்ம அவதாரம் எடுக்க ஆலோசனை நடந்து கொண்டிருந்த நேரம் இங்கு ஆனால் அங்கோ கடைசியாகப் பிரகலாதனுக்குத் தன் தாயை விட்டு விஷம் கொடுக்கப்படுகிறது. இப்போது நரசிம்மர் மிகவும் கோபமாக இருக்கிறார். "இதைவிட ஒரு கொடுமை உண்டா தன் தொண்டனுக்கு!" என்று கோபமாக இருக்கிறார். அப்பொழுது இரணியன் கேட்கிறான் "மகனே! பிரகலாதா! உன்னுடைய ஹரி இருப்பது நிஜம் என்றால் அவன் எங்கு இருப்பான் என்று? "

பதில் சொல்கிறான் "உன்னிலும் இருப்பான்: என்னிலும் இருப்பான் ஏன் இந்தத் தூணிலும் இருப்பான்: துரும்பிலும் இருப்பான்!"

தூணில் என்றவுடன் இரணியன் எந்தத் தூணைச் சொல்லுவான் என்று தெரியாது அல்லவா? அவன் எந்தத் தூணை உடைக்க போகிறான் என்று தெரியாது. இந்தத் தூணிலும் இல்லை என்றால் பிரகலாதனை அவன் கொன்று விடுவான் அல்லவா? எனவே அவர் தன்னை எல்லா தூண்களிலும் வியாபித்துக் கொண்டார். இந்தக் காட்சியைக் காணத் தேவலோகத்தில் இருந்து அத்தனை பேரும் வந்து இருந்தாங்க!" என்றவுடன் நமக்கே ஒரு உணர்வு, அந்த உணர்வு வந்து எப்படிப்பட்ட உணர்வு என்று சொல்ல முடியவில்லை. ஒரு வைப்ரேஷன் நம் உடம்பில் ஏற்படுகிறது.

அதற்கு அப்புறம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் காலத்தில் வாழ்ந்த இராமானுஜரும் இங்கு வருகிறார். அவர் இங்கே ஏன் வருகிறார் என்றால் நாங்கள் எந்த இடத்தில் நின்று கொண்டிருக்கிறோமோ அதற்கு எதிர்த்தாற்போல் ஓம் நமோ நாராயணா என்று எழுதப்பட்டு இருக்கிறது. அதுதான் திருக்கோஷ்டியூர் நம்பி அவர்களின் வீடு.

நீங்கள் திருக்கோஷ்டியூர் நம்பி அவர்களைக் கண்டு மோட்சம் பெறுவீர்கள் என்று சொல்ல ராமானுஜரும் அவரைத் தேடி இங்கு வருகிறார். "வந்தவர் யார்?" என்று திருக்கோஷ்டி நம்பி அவர்கள் கேட்க ராமானுஜரோ "ராமானுஜன் வந்திருக்கிறேன்!" என்று சொல்கிறார். அப்படியாயின் "நான் செத்து நீ வா!" என்கிறார். அதன் அர்த்தம் புரியாமல் 17 முறை வருகிறார் 17முறையும் "ராமானுஜர் வந்திருக்கிறேன்!" என்ற வார்த்தையைத் தவிர எதுவும் சொல்லவில்லை. அவரும் திருப்பி அனுப்பி விடுகிறார். 18 வது முறையாக வரும்பொழுது "வந்தவர் யார்? " என்று கேட்க "அடியேன் ராமானுஜன் வந்திருக்கிறேன்!" என்று கூறினார். அவருக்கு அந்த பதினெட்டாவது முறை வரும்போது மழை பெய்து கொண்டிருக்கிறது. "உனது மனம் பக்குவப்பட்டு விட்டது உள்ளே வா!" என்கிறார் உடனே உள்ளே கூப்பிடுகிறார். "என்ன வேண்டும் உனக்கு? " என்கிறார்.

"மோட்சத்தை அடையும் உபாயத்தை உம்மிடம் கற்க வந்தேன்!" என்றார்.

"இது எங்கள் வீட்டில் மூத்த பையனுக்கு மட்டுமே சொல்லிக் கொடுத்து வழிபடும் முறையாக வழி வழியாக வந்துள்ளது. இதனை வெளியே யாருக்கும் சொல்லிக் கொடுக்காமல் பாதுகாத்து வருகிறோம். இவ்வாறு தான் இவ்வளவு தலைமுறையாக பாதுகாக்கப்பட்டது. உனக்கு அதனை சொல்லிக் கொடுக்க இறைவன் அருளியதால் அதனை உனக்கு நான் சொல்கிறேன் ஆனால் நீ இதனை யாரிடத்திலும் சொல்லக்கூடாது. எனக்கு சத்தியம் செய்து கொடுக்க வேண்டும்!". என்கிறார். "அதனால் என்ன சத்தியம் செய்து கொடுத்தால் போகிறது!" என்று சத்தியம் செய்து கொடுக்கிறார். "அவ்வாறு நீ இதை மீறினால் உனக்கு நரகம் தான் கிடைக்கும்!" என்கிறார்.

" சரி!" என்று சொன்னவர் அந்த மந்திர உபதேசத்தைப் பெற்றுக்கொண்டு நேராக ஓடி வருகிறார். இப்பொழுது நாம் நின்று கொண்டிருக்கிற இடத்தில் தான் அவர் வந்து நிற்கிறார்

"உங்களுக்குப் பரமபதம் போகக்கூடிய ஒரு அருமந்திரத்தை நான் சொல்லப் போகிறேன். எல்லோரும் ஓடி வாருங்கள்!" என்று கூறுகிறார்.


"இவர் என்ன சொல்ல போகிறார்? " என்று எல்லாரும் எல்லா மக்களும் ஓடி வருகிறார்கள். இவரோ அதுவரை ஒரு குடும்பத்தாரே பாதுகாத்து காப்பாற்றிய 'ஓம் நமோ நாராயணா!" என்ற மந்திரத்தை உரக்க கூறி எல்லோரும் எல்லோரையும் சொல்லச் சொல்கிறார். இப்பொழுதும் கோபுரத்திற்கு, அவருடைய உருவத்துக்கு, எதிரில் எழுதிருக்கிறது "ஓம் நமோ நாராயணாய!" ஆனாலும் மக்களுக்கு எத்தனை பேருக்கு நம்பிக்கை இருந்தது தெரியாது. அவர் உணர்வு, "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!" என்பது போல் எல்லோரும் மோட்சத்தை அடைய எனது குரு ஒரு மந்திரத்தை சொல்லிக் கொண்டிருக்கிறார். அதனை நான் உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். எல்லோரும் வாருங்கள் என்று அழைத்தாரே! எல்லோரும் அறிகிறார்கள் "என்ன மந்திரம் "ஓம் நமோ நாராயணா!" என்ற அனைவரின் ஒலியும் நம்பிகளைச் சென்றடைகிறது. உடனே அவர் வந்து வருகிறார் வந்து "ராமானுஜா! என்ன செய்கிறாய்? உன்னுடைய இந்தச் செயல் எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. நீ எனக்குக் கொடுத்த சத்தியத்தை மீறி விட்டாய்! எனவே நீ நரகம் செல்வாய்!" என்றார். உடனே உடையவரும் " "நான் ஒருவன் நரகம் சென்றால் என்ன! இத்தனை பேர்கள் மோட்சத்தை அடைவார்கள் என்றால் நான் ஒருவன் நரகம் செல்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை!" என்கிறார் இதனைக் கேட்ட குரு "நாங்கள் மட்டுமே அதுவும் மூத்த பையன் மட்டுமே அறிந்த மந்திரத்தை ரகசியமாக வைத்திருந்த அந்த மந்திரத்தை இவ்வளவு பேர் அறிய நீ சொல்லும்பொழுது, நான் எவ்வளவு சுயநலமாக இருந்து விட்டேன் என்று எனக்குத் தோன்றுகிறது. இன்றிலிருந்து நீ எம்பெருமானார்!" என்று அழைக்கிறார்.

பின்னர் ராமானுஜர் செய்த தொண்டுகளும் அவருடைய சீர்திருத்தங்களும் அளப்பரியன. இன்று அவரைப் பற்றி பேசி அவரைப் பற்றி நான் எழுதிய இந்தப் பதிவு என்னை மிகவும் நெகிழ வைக்கிறது.

ஓம் நமோ நாராயணாய :

**Bhanumati Nachiyar**

# தினம் ஒரு தலைவர்கள் டி.ரங்காச்சாரி வரலாறு




கான்பெராவில் உள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் உள்ள ஓவியத்தில் காணப்படும் திவான் பகதூர் டி. ரங்காச்சாரியார் (நடுவில்). புகைப்பட உரிமை: சிறப்பு ஏற்பாடு.

மார்ச் 24, 1931 அன்று, புது தில்லியில் உள்ள மத்திய சட்டமன்றத்தில், முந்தைய இரவு லாகூர் சிறையில் சுதந்திரப் போராட்ட வீரர்களான பகத் சிங், சுக்தேவ் தாப்பர் மற்றும் சிவராம் ராஜ்குரு ஆகியோரை தூக்கிலிட்டதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக சில ஆவேசமான உரைகள் நிகழ்த்தப்பட்டன. தேசியவாதக் கட்சியின் தலைவரான மூத்த வழக்கறிஞர் டி. ரங்காச்சாரியார் தனது உரையில் கூறினார்: "ஆழ்ந்த துக்கம் மற்றும் ஆழ்ந்த கோப உணர்வுகளுடன் நான் ஒரு அறிக்கையை வெளியிட எழுந்திருக்கிறேன். பகத் சிங் மற்றும் இரண்டு பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை நேற்றிரவு நிறைவேற்றிய அரசாங்கத்தின் நடவடிக்கையை நாங்கள் துக்கத்துடனும் வெறுப்புடனும் பார்க்கிறோம். பொதுமக்களின் கருத்தை புறக்கணிப்பதன் மூலம் அரசாங்கம் தங்களுக்கும் நாட்டிற்கும் கடுமையான பிரச்சனையை வரவழைத்து வருகிறது. இப்போது மிகவும் அவசியமான அமைதியான சூழ்நிலை கடுமையாக ஆபத்தில் உள்ளது. இதை நாங்கள் மிகவும் கடுமையாக எதிர்க்கிறோம், நாங்கள் மிகுந்த துக்கத்தில் இருக்கிறோம். இன்றைய நடவடிக்கைகளில் எங்களால் பங்கேற்க முடியாது." (தி இந்து தேதியிட்ட மார்ச் 24, 1931).

வெட்டர்பர்னின் கீழ் தொழிற்பயிற்சி சட்ட வல்லுநர், சுதந்திர ஆர்வலர், கொள்கை வகுப்பாளர் மற்றும் கொடை வள்ளல் என பன்முக ஆளுமை கொண்ட திவான் பகதூர் ரங்காச்சாரியார், தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே உள்ள ஓம்பலபாடியில் நவம்பர் 27, 1865 அன்று பிறந்தார். கும்பகோணத்தில் உள்ள நேட்டிவ் உயர்நிலைப் பள்ளி, சிதம்பரத்தில் உள்ள பச்சையப்பா உயர்நிலைப் பள்ளி மற்றும் திருச்சியில் உள்ள எஸ்பிஜி கல்லூரியில் கல்வி பயின்றார். பொன்னம்மாள் என்கிற கனகவள்ளியை மணந்தார். ஒரு குறுகிய கால ஆசிரியருக்குப் பிறகு, ரங்காச்சாரியார் சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றார் மற்றும் 1890 இல் பட்டம் பெற்றார். அடுத்த ஆண்டு, அவர் சென்னை பார் கவுன்சிலில் சேர்ந்தார் மற்றும் அப்போது அட்வகேட் ஜெனரலாக இருந்த எச். ஜி. வெட்டர்பர்னிடம் பயிற்சி பெற்றார். பின்னர் அவர் 1896 இல் சுயாதீன பயிற்சியை நிறுவினார் மற்றும் சுதந்திர இயக்கத்தின் போது ஜி. சுப்பிரமணிய ஐயர் மற்றும் வி.ஓ. சிதம்பரம் பிள்ளை ஆகியோரின் பாதுகாப்பு உட்பட ஏராளமான குற்றவியல் மற்றும் சிவில் வழக்குகளை நடத்தினார். ரங்காச்சாரியார் தன்னை சட்டப் பயிற்சியுடன் மட்டுப்படுத்தவில்லை. அவர் மெட்ராஸ் மகாஜன சபையின் தீவிர உறுப்பினராக இருந்தார், பின்னர் மெட்ராஸ் மாநகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக கிட்டத்தட்ட 14 ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் அவர் இந்திய இம்பீரியல் சட்டமன்ற உறுப்பினரானார், மெட்ராஸுக்கு அமர்ந்தார்.

சர்தார் வல்லபாய் படேலின் மூத்த சகோதரர் விட்டல்பாய் படேலின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவையொட்டி மக்களவைச் செயலகம் 1973 ஆம் ஆண்டு வெளியிட்ட நினைவுப் பரிசு ஒன்றில், சட்டமன்ற உறுப்பினராக இருந்த ரங்காச்சாரியார் பிப்ரவரி 5, 1924 அன்று பிரிட்டிஷ் அரசாங்கத்தை பிரிட்டிஷ் பேரரசுக்குள் இந்தியாவிற்கு முழுமையான, சுயாட்சி அதிகாரம் கொண்ட அந்தஸ்தையும், மாகாணங்களில் மாகாண சுயாட்சியையும் வழங்க வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். சட்டமன்றத்தில் ஸ்வராஜ் கட்சியின் தலைவர் மோதிலால் நேரு முன்வைத்த திருத்தத்துடன் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



ஆகஸ்ட் 1925 இல், ரங்காச்சாரியார் மத்திய சட்டமன்றத்தின் தலைவர் பதவிக்கு (சபாநாயகருக்கு சமமானவர்) அதிகாரப்பூர்வ வேட்பாளராகப் போட்டியிட்டு 56 வாக்குகளைப் பெற்றார். அவர் ஸ்வராஜ் கட்சி வேட்பாளர் விட்டல்பாய் படேலிடம் இரண்டு வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார் என்று நினைவுப் பரிசு குறிப்பிட்டது. மத்திய சட்டமன்றத்தின் ஒரு அமர்வில் அதன் துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், கென்யா பிரச்சினை தொடர்பாக இங்கிலாந்துக்கும், புதிய தலைநகரான கான்பெராவைத் திறப்பதற்காக ஆஸ்திரேலியாவிற்கும் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக ரங்காச்சாரியார் அதிகாரப்பூர்வ விஜயம் செய்தார். ஆஸ்திரேலியாவின் வளர்ச்சியில் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, சென்னை சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் கல்லூரியில் (இப்போது கல்வியில் மேம்பட்ட படிப்பு நிறுவனம்) 'ஆஸ்திரேலியாவில் கல்வி நடவடிக்கைகள்' என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவு ஆற்றியதாக, ஜூலை 27, 1928 அன்று தி இந்து ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

திரைப்பட மற்றும் நாடக ஆளுமையான ஒய். கீ. மகேந்திரா, கான்பெராவில் உள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் தனது கொள்ளுத்தாத்தா ரங்காச்சாரியாரின் ஓவியத்தைப் பார்த்தபோது பெருமைப்படுவதாகக் கூறினார். சென்னையில் உள்ள பத்மா சேஷாத்ரி பால பவன் சீனியர் செகண்டரி பள்ளிகளின் நிறுவனர், மறைந்த தனது தாயார் ராஜலட்சுமி பார்த்தசாரதி (திருமதி. ஒய்.ஜி.பி என்று அழைக்கப்படுபவர்) தனது தாத்தா ரங்காச்சாரியாரைப் பற்றிய கதைகளைக் கேட்டதை அவர் நினைவு கூர்ந்தார். அவரைப் பொறுத்தவரை, 1940களில் தனது தாயார் இளங்கலைப் பட்டம் பெறுவதில் உறுதியாக நின்று ஆதரவளித்தவர் ரங்காச்சாரியார் தான்.

1920களின் பிற்பகுதியில், அவரது மகன் ஆர். வெங்கடாச்சாரி, அல்லது முத்தண்ணா, ஜகன்னாத பக்த சபாவைத் தொடங்கினார், இது சென்னை எழும்பூர் ஹை ரோட்டில் ரங்காச்சாரியாரின் அப்போதைய இல்லமான வேத விலாஸின் வராண்டாவில் இருந்து இயங்கியது. வெங்கடாச்சாரியின் பேரனான எஸ். வாசுதேவன் கூறுகையில், இசைக்கலைஞர்களும் பாடகர்களும் ஜகன்னாத பக்த சபாவில் திரண்டு வந்து தங்கள் இசை நிகழ்ச்சிகளை நடத்தினர். ரங்காச்சாரியாரின் மருமகளில் ஒருவரான ரங்கம்மாள், மயிலாடுதுறை மகாதான தெருவில் உள்ள தேசிய உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு நிலத்தை நன்கொடையாக வழங்கியதாக திரு. வாசுதேவன் தெரிவித்தார். பின்னர், நூற்றாண்டு பழமையான பள்ளிக்கு திவான் பகதூர் டி. ரங்காச்சாரியார் தேசிய மேல்நிலைப் பள்ளி என்று பெயர் சூட்டப்பட்டது. ரங்காச்சாரியார் 1932 ஆம் ஆண்டு பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, 1933 ஆம் ஆண்டு பொது வாழ்வில் இருந்து ஓய்வு பெற்றார். ஆகஸ்ட் 4, 1945 அன்று, வேப்பேரியில் உள்ள ரிதர்டன் சாலையில் உள்ள தனது இல்லத்தில் 80 வயதில் இறந்தார்.



ரசிகர்களின் மனம் கவர்ந்த நடிகைகளில் ஒருவர் ஸ்ரேயா சரண். இவர் இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கக்கூடிய பிரபலங்களில் ஒருவர்.

தனது குடும்பத்துடன் எடுத்துக்கொள்ளும் புகைப்படங்களை அவ்வப்போது பதிவு செய்வார். அதே போல், தனது போட்டோஷூட் புகைப்படங்களையும் இன்ஸ்டா பக்கத்தில் பதிவிடுவதை வழக்கமாக கொண்டுள்ளார்.

அந்த வகையில், Stunning கிளாமர் லுக்கில் சமீபத்தில் நடிகை ஸ்ரேயா சரண் போட்டோஷூட் நடத்தியுள்ளார். அந்த புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் படுவைரலாகி வருகின்றன.

# புரவியாட்டம்- திரை விமர்சனம்







புரவியாட்டம்- விமர்சனம்(2 / 5)

கிராமப்புற தமிழ்நாட்டின் பாரம்பரிய நாட்டுப்புறக் கலையான பொய்க்கால் குதிரை ஆட்டத்தை மையமாக கொண்டு உருவாக்கப்பட்ட படம் புரவியாட்டம். இந்த கலை வடிவத்தை வாழ்வாகக் கொண்ட கலைஞர்களின் வாழ்க்கை, அவர்களின் போராட்டங்கள் மற்றும் அந்தக் கலையை பாதுகாக்கும் முயற்சிகளே படத்தின் மையம். நாயகன் அர்ஜு, மற்றும் நாயகி சிம்ரன் அதானி இருவரும் காதலித்து வருகிறார்கள். அந்த ஊரில் திருவிழாவின்போது இருவரும் பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆட திட்டம் போடுகிறார்கள். ஆனால் அர்ஜுவின் உறவினர் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்.

அதே சமயம் அந்த பொய்க்கால் குதிரையில் ஒரு அமானுஷ்ய சக்தியும் இருக்கிறது. இறுதியில் அர்ஜு, ஊர் திருவிழாவில் பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆடினாரா? உறவினர் எதிர்க்க காரணம் என்ன? பொய்க்கால் குதிரையில் இருக்கும் அமானுஷ்யம் என்ன? என்பதே படத்தின் மீதிக்கதை.

**நடிகர்கள்**

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் அர்ஜு, எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். காதல், காமெடி, குதிரை ஆட்டம் என அனைத்திலும் ஸ்கோர் செய்ய முயற்சி செய்து இருக்கிறார். நாயகியாக நடித்திருக்கும் சிம்ரன் அதானி அழகாக வந்து அளவான நடிப்பை கொடுத்து இருக்கிறார். ஆர். சுந்தரராஜன், கஞ்சா கருப்பு ஆகியோர் அனுபவ நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

**இயக்கம்**

பொய்க்கால் குதிரை கலைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், சமூகத்தில் கிடைக்கும் அங்கீகாரம், பாரம்பரியம் மெல்ல மெல்ல மறைந்து போகும் நிலை ஆகியவற்றை படம் நேர்மையாக பதிவு செய்து இருக்கிறார் இயக்குனர் விநாயகா சுப்ரமணியன். இயக்குனர், ஆவணப்பட பாணியில் கதையை இயக்கி இருக்கிறார். மெதுவாக நகரும் திரைக்கதையும், சுவாரசியமான காட்சிகள் இல்லாததும் வருத்தம்.

**ஒளிப்பதிவு**

மகாதேவன் சுப்ரமணியன் ஒளிப்பதிவு கிராமப்புற சூழலையும், கலைஞர்களின் அன்றாட வாழ்க்கையையும் நெருக்கமாக காட்டுகிறது.

**இசை**

கணேஷ் ராகவேந்திரா பின்னணி இசை மிகக் குறைவாக பயன்படுத்தப்பட்டாலும், காட்சிகளின் உணர்வை பாதிக்காமல் பயணிக்கிறது.

# இன்று கொழும்புவில் ஆல்பம் வெளியீடு

இலங்கையிலிருந்து வந்தும், தமிழர் பண்பாட்டு வேர்களை கொண்ட DHEE, தனது தலைமுறையின் மிகவும் தனித்துவமான மற்றும் உலகளவில் கொண்டாடப்படும் குரல்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளார். இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரின் படைப்பாற்றல் மிக்க கலைச் சூழலுக்கு சென்ற அவரது பயணம், மரபும் உலகளாவிய தாக்கமும் இணைந்த ஒரு வலிமையான இசை அடையாளத்தை உருவாக்கியுள்ளது.

'என்ஜாய் என்ஜாமி (ENJOY ENJAAMI)' என்ற பண்பாட்டு கீதத்தின் மூலம் DHEE அபாரமான புகழைப் பெற்றார். உலகளவில் பெரும் வரவேற்பைப் பெற்ற இந்தப் பாடல் ஐந்து கோடிக்கும் அதிகமான பார்வைகளை கடந்ததுடன், வேர்கள் மற்றும் அடையாளத்தை கொண்டாடும் அதன் உணர்வால் ரசிகர்களின் மனதில் ஆழமாக பதிந்தது. இந்தப் பாடல் இந்திய சுயாதீன இசையை புதிய பரிமாணத்திற்கு கொண்டு சென்றதோடு, DHEE-யை உலக இசை வரைபடத்தில் உறுதியாக நிலைநிறுத்தியது.

அவரது கலைத்திறன் பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஃபிலிம் ஃபேர் விருதுகள் உள்ளிட்ட பல மதிப்புமிக்க கௌரவங்களை பெற்றுள்ள அவர், சமகால இசை உலகில் முன்னோடி கலைஞராக தனது நிலையை வலுப்படுத்தியுள்ளார். மேலும், 'I WEAR MY ROOTS LIKE A MEDAL' மற்றும் 'CAN'T YOU STAY A LITTLE LONGER' போன்ற சுயாதீன பாடல்கள் மூலம் DHEE தனது கலை ஆழத்தை தொடர்ந்து விரிவுபடுத்தி வருகிறார். இந்தப் பாடல்கள் உணர்வு, அடையாளம் மற்றும் பரிசோதனையான இசை வடிவங்களை ஒருங்கிணைக்கும் அவரது தனித்துவமான திறனை வெளிப்படுத்துகின்றன.

இந்தியா முழுவதும் பெரிதும் விரும்பப்படுவதுடன், உலகளாவிய ரசிகர்களாலும் அதிக அளவில் கொண்டாடப்படும் DHEE, எல்லைகளையும் இசை வகைகளையும் கடந்து நிற்கும் புதிய தலைமுறை கலைஞர்களின் பிரதிநிதியாக திகழ்கிறார்.


நாளை (ஏப்ரல் 24) கொழும்புவில் இந்த இசை ஆல்ப வெளியீட்டு விழா நடைபெறுகிறது. இந்த வெளியீடு அவரது தொடர்ந்து வளர்ந்து வரும் இசைப் பயணத்தில் மேலும் ஒரு முக்கியமான அத்தியாயமாக அமைகிறது.



சிவப்பு மஞ்சள் பச்சை படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் நடிகையாக அறிமுகம் ஆனவர் காஷ்மிரா பரதேசி. அவர் அதன் பிறகு பல சின்ன பட்ஜெட் படங்களில் நடித்து இருக்கிறார். கடைசியாக அவர் பிடி சார் படத்தில் நடித்திருந்தார்.

மேலும் ஐபிஎல் போட்டிகளை பார்க்க அடிக்கடி செல்லும் அவரை டிவி நேரலையில் ரசிகர்கள் அடிக்கடி பார்த்திருக்கலாம்.

தற்போது காஷ்மிரா அதிகம் கிளாமர் ஆன லுக்கில் ஹாட் போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.



# சாம் சி.எஸ். இசையில் உருவாகும் "மகா அவதார் பரசுராம்"

இந்திய சினிமாவில் தனித்துவமான பின்னணி இசை மற்றும் சவுண்ட் டிசைன் மூலம் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கியுள்ள இசையமைப்பாளர் சாம் சி.எஸ். தற்போது "மகா அவதார் பரசுராம்" படத்தின் மூலம் மீண்டும் இசை ரசிகர்களுடைய கவனத்தின் மையமாகியுள்ளார்.

"மகாவாதார் நரசிம்மா" படத்தின் மிகப்பெரிய கமர்ஷியல் மற்றும் விமர்சன வெற்றிக்குப் பிறகு, அதன் யூனிவர்ஸை விரிவுபடுத்தும் இந்த புதிய படத்தில் அவர் தொடர்ந்து பணியாற்றுவது ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த படத்தின் மிகப்பெரிய சிறப்பு என்னவெனில், சாம் சி.எஸ். வழக்கமான முறையை மாற்றி, கதைக்கு முன்கூட்டியே இசையமைத்து முடித்துள்ளார். பொதுவாக காட்சிகள் தயாரான பிறகே இசை அமைப்பது வழக்கம் என்றாலும், இங்கு அதற்கு மாறாக இசையே முதலில் உருவாக்கப்பட்டு, அதனை அடிப்படையாக கொண்டு அனிமேஷன் மற்றும் காட்சிகள் வடிவமைக்கப்படுகின்றன.

இந்த "MUSIC-FIRST" அணுகுமுறை இந்திய சினிமாவில் அரிதாக காணப்படும் ஒன்றாகும். இதனால், இந்த படத்தின் இசை வெறும் பின்னணி இசையாக இல்லாமல், முழுக் கதையின் ஓட்டத்தையும் உணர்வையும் வழிநடத்தும் மைய சக்தியாக மாறியுள்ளது. இப்படத்தில் சாம் சி.எஸ். ஒரு சாதாரண இசையமைப்பாளராக அல்லாமல், கதையின் உணர்வுகளை முன்கூட்டியே வடிவமைக்கும் முக்கிய படைப்பாளராக செயல்படுகிறார்.



இசையை மையமாகக் கொண்டு உருவாகும் இந்த திரைப்படம், இந்திய சினிமாவில் புதிய முயற்சியாகவும், இசை மற்றும் அனிமேஷன் இணையும் ஒரு வித்தியாசமான அனுபவமாகவும் அமையும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

# “தென் கொரிய அதிபர் பாராட்டியது பெருமையாக இருந்தது”

ரா.கார்த்திக் இயக்கத்தில், பிரியங்கா மோகன் நடித்த திரைப்படம் ‘மேட் இன் கொரியா’. கொரியாவுக்குச் செல்லும் இளம் பெண் ஒருவர் அங்கு சந்திக்கும் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட இந்தப் படத்தை, ரைஸ் ஈஸ்ட் என்டர் டெயின்மென்ட் தயாரித்தது. நெட்ஃபிளிக்ஸ் தளத்தில் வெளியாகி வரவேற்பைப் பெற்றது.

இந்நிலையில் இந்தியா வந்துள்ள தென்கொரிய அதிபர் லீ ஜே மியுங்-கிற்கு மரியாதை செலுத்தும் விதமாக இந் திய குடியரசு தலைவர் திரவுபதி முர்மு விருந்தளித்துக் கவுரவித்தார்.

ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற இவ்விருந்தில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இதில் ‘மேட் இன் கொரியா’ கதாநாயகி பிரியங்கா மோகனும் கலந்துகொண்டார்.

இது பற்றி பிரியங்கா மோகன் கூறும்போது, “இப்படி ஒரு விருந்தில் பங்கேற்பேன் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. இவ்வளவு முக்கிய பிரமுகர்கள் பங் கேற்ற விருந்தில் நான் கலந்துகொண்டது அற்புதமான அனுபவமாக இருந்தது.

இதில் பலரும் ‘மேட் இன் கொரியா’ திரைப்படத்தைப் பற்றிப் பேசியதும், தென் கொரிய அதிபரே படத்தைப் பாராட்டியதும் எனக்குப் பெருமையாக இருந்தது” என்று தெரிவித்துள்ளார்.



விஜய் டிவியில் ஒளிபரப்பான சிப்பிக்குள் முத்து என்ற சீரியல் மூலம் பிரபலமானவர் தான் நடிகை சம்யுக்தா. இவர் சீரியல் மூலம் பிரபலமானதை தாண்டி பிரபல சீரியல் நடிகர் விஷ்ணுகாந்தை காதலித்து திருமணம் செய்ததன் மூலம் மிகவும் பிரபலமானார். அதாவது இவர்கள் இருவரும் திருமணம் செய்த சில நாட்களிலேயே பிரச்சனையானதால் பிரிந்துவிட்டனர். இப்போது அவரவர் தங்களது வேலையில் பிஸியாக உள்ளனர்.

தற்போது நாம் நடிகை சம்யுக்தா வெளியிட்ட சில அழகிய புகைப்படங்களை காண்போம்.



# யாருக்கு ஓட்டு என குறியீடு மூலம் சொன்ன த்ரிஷா!



நடிகர்கள் மற்றும் நடிகைகள் இன்று வாக்களிக்க வந்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் தற்போது இணையத்தில் வைரல் ஆகி வருகின்றன. மேலும் அவர்கள் அணிந்து வந்த உடை, சமூக வலைதள பதிவுகள் மூலமாக எந்த கட்சிக்கு வாக்களித்தார்கள் என்றும் இணையவாசிகள் பேச தொடங்கி இருக்கின்றனர்.

யாருக்கு ஓட்டு என குறியீடு மூலம் சொன்ன த்ரிஷா! வைரலாகும் பதிவு | TRISHA CAST VOTE HER POST WITH GHILLI SONG

த்ரிஷா ஓட்டு யாருக்கு?

நடிகை த்ரிஷா வாக்களித்த போட்டோவை இன்ஸ்டாவில் பதிவிட்டுள்ளார். கில்லி படத்தின் "அர்ஜுனர் வில்லு" பாடலில் வரும் விசில் உடன் பாடலையும் தனது பதிவில் போட்டிருக்கிறார் த்ரிஷா. அதனால் அவர் விஜய்யின் தவெகவுக்கு வாக்களித்தது உறுதியாகி இருப்பதாக நெட்டிசன்கள் கூறி வருகின்றனர்.

# திருமணம் நின்றுபோனது காரணம் கூறிய நடிகை



பாலா இயக்கிய பரதேசி படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை ரித்விகா. தொடர்ந்து மெட்ராஸ், கபாலி போன்ற படங்களில் நடித்து கவனம் பெற்றார். மெட்ராஸ் படத்திற்காக சிறந்த துணை நடிகைக்கான விருது எல்லாம் பெற்றார்.

சினிமாவை தாண்டி அவர் விஜய் தொலைக்காட்சியில் கலந்துகொண்ட பிக்பாஸ் நிகழ்ச்சி அவருக்கு பெரிய திருப்பு முனையாக அமைந்தது. 100 நாட்களுக்கு மேல் அந்த வீடில் இருந்து 2வது சீசன் டைட்டிலையும் வென்றார்.

ஆனால் திருமணம் தேதியை அவர் அறிவிக்காமல் இருந்தார். ஆனால் கடந்த வருடம் ஆகஸ்ட் 27ம் தேதி அவரது திருமணம் நடைபெறும் என சமூக வலைதளங்களில் தகவல் பரவியது. ஆனால் தற்போது என்ன தகவல் என்றால் ரித்விகாவிற்கு இன்னும் திருமணம் நடக்கவில்லை. குடும்ப காரணங்கள் மற்றும் எதிர்ப்பாராத சூழ்நிலைகள் காரணமாக திருமணம் ஒத்திவைக்கப்பட்டதாக நடிகை தரப்பில் கூறப்படுகிறது. ரசிகர் ஒருவர் இதுகுறித்து ரித்விகாவிடம் கேட்க, அவர் நினைத்தது நடக்கவில்லை என பதிலளித்துள்ளார்.

# இந்த புகைப்படத்தில் உள்ள குழந்தை யார் என்று தெரிகிறதா?

கதாநாயகியாக மட்டுமின்றி சோலோ ஹீரோயினாகவும் நடித்து பல சூப்பர்ஹிட் படங்களை இவர் கொடுத்துள்ளார். மேலும், தற்போது இவர் தொடர்ந்து படங்களில் நடிக்கவில்லை என்றாலும், ரசிகர்கள் மத்தியில் இவருக்கு இருக்கும் வரவேற்பு கொஞ்சம் கூட குறையவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அனுஷ்கா

அவர் வேறு யாருமில்லை, நடிகை அனுஷ்கா ஷெட்டிதான். அருந்ததி, பாகுபலி, பாகுபலி 2, சிங்கம், மிர்ச்சி, என்னை அறிந்தால் என பல சூப்பர்ஹிட் படங்களை இவர் கொடுத்துள்ளார். இவர் தனது சகோதரர்களுடன் எடுத்துக்கொண்ட சிறு வயது புகைப்படம்தான் தற்போது வைரலாகி வருகிறது. இந்த புகைப்படத்தில் உள்ள குழந்தை யார் என்று தெரிகிறதா? இந்திய சினிமாவின் வசூல் நாயகி



நடிகை அனுஷ்கா ஷெட்டி நடிப்பில் அடுத்ததாக கத்தனார் - தி வைல்ட் சோர்சரர் என்கிற திரைப்படம் மலையாளத்தில் உருவாகியுள்ளது. இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளிவந்து நல்ல வரவேற்பை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.



விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் தொடர்களில் பாண்டியன் ஸ்டோர்ஸ் சீரியல்களுக்கு என்று தனி ரசிகர்கள் கூட்டம் உள்ளது என்று தான் கூற வேண்டும்.

அதிலும் இப்போது ஒளிபரப்பாகும் 2ம் பாகத்தை விட முதல் பாகம் ரசிகர்களின் மனதில் பெரிய இடம் பிடித்துள்ளது. எதார்த்தமான குடும்பக்கதை, நடிகர்கள் தேர்வு, சீரியலை கொண்டு சென்ற விதம் என எல்லா விஷயத்தையும் ரசிகர்கள் கொண்டாடினார்கள். இந்த சீரியலில் நடித்ததன் மூலம் அண்ணியாக மக்கள் மனதில் வாழ்பவர் தான் சுஜிதா. குழந்தை நட்சத்திரமாக சினிமாவில் அறிமுகமாகி எத்தனையோ படங்கள் நடித்துள்ளார், ஆனால் மக்களிடம் அதிகம் அவரை கொண்டு சேர்த்தது பாண்டியன் ஸ்டோர்ஸ் சீரியல் தான்.விஜய் டிவியில் ஹிட் சீரியலில் என்ட்ரி கொடுத்துள்ள பாண்டியன் ஸ்டோர்ஸ் புகழ் சுஜிதா... எந்த தொடர் தெரியுமா?பாண்டியன் ஸ்டோர்ஸ் சீரியலுக்கு பிறகு சுஜிதா, போட்டோ ஷுட்கள், சின்ன சின்ன கதாபாத்திரங்களில் சீரியல்களில் என்ட்ரி கொடுத்து வந்தார். கடைசியாக ஜீ தமிழில் ஒளிபரப்பாகிய சமையல் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி வந்தார்.விஜய் டிவியில் ஹிட் சீரியலில் என்ட்ரி கொடுத்துள்ள பாண்டியன் ஸ்டோர்ஸ் புகழ் சுஜிதா... எந்த தொடர் தெரியுமா? தற்போது சுஜிதா மீண்டும் விஜய் டிவி பக்கம் வந்துள்ளார். அவர் ஹிட்டாக ஓடிக் கொண்டிருக்கும் சின்ன மருமகள் சீரியலில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க என்ட்ரி கொடுத்துள்ளார்.




### குறுங்கவிதைகள்

'வந்தேபாரத்' விரைவு
வண்டிகளின்/ வரவேற்பில்
இந்தியத் தண்டவாளங்கள்/
வேகமாய் மேலோடும்
சுமைகளில் / விலையுயர்ந்த
பாரமன்றோ அவை?/
***********
ஒளியுடன் காட்சித் தருகிறான்
உளியால் உருவான
இறைவன். சிலை ஆயினும்
தரிசனம் சிற்பியின்
மேலில்லை கரிசனம்.
********
பாரிசவாயுவால் முடங்கியது
ஜனநாயகம் வாரிசுகளின்
அரசியலே காரணம்.
தந்தை, மகன், பேரனென
நாட்டைத் ,துண்டாடும்
ஓரினம்.
********
எத்தனை மணிக்கு மறைவது?
பனித் துளியே தீர்மானி.
ரோஜா இதழ்களின் மௌனம்
ரொமான்ஸ் புரிந்திட அல்ல.
*********
பிரசவத்திற்கு
இலவசமாய்
ஓட்டுகிறான்
ஆட்டோவில்
மழலைப்படம்
மாட்டுகிறான்
இல்லத்தரசி
இன்னுமில்லை



பிள்ளைத்தாய்ச்சி/
புத்தாண்டில் உண்டாகுமோ
புழுபூச்சி?
********
ஓடுபாதையில் ஓடவைத்து
பத்திரமாய்த் தரை இறக்கியது
போயிங்–777 விமானம்
மேலெழுப்பிச் சென்றநிழலை.
*********
இல்லத்தரசியே!நின்முகத்தில்
எப்படி புன்னகை,மாறிமாறி?
மனைப் பிணக்கு,
மாதவிலக்கு மக்களின்
பராமரிப்புகளை மீறி?
*********
வானூர்தியைப் பழுதாக்கி
தானும் சிதையுண்டது பருந்து
குஞ்சியை அபகரித்துப்
பறக்கையில் கோழியின்
வானளாவிய சாபம்.
**********
ஒவ்வொரு முறையும்
வெவ்வேறு இருளை
உதிர்க்கிறது மின்னொளி
மின்வெட்டு என்னும் பெயரில்
வெளிநடப்பு செய்யும் முன்.
*********
தினக்கிழி நாட்காட்டியின்
கணிப்பை நிஜமாக்கக்
காத்திருக்கும் கதிரவன்
இன்னும் இரண்டு நிமிடங்கள்
இன்றைய சூரியோதயம்
காலை–06.32.

**முனைவர் வே. புகழேந்தி**
பெங்களூரு.

### "கவிதை எழுதும் கைதி"

சுவரின் நிழலில்,
சிறையின் இருளில்,
கருங்கல் நிற்கிறது
கைதியென்ற பெயரில்!
கனவுகள் முறிந்த
இதயத் துணுக்காய்!

கம்பிகளின் பின்னால்
ஆயிரம் கவிதைகளை
கண்களில் சுமந்து
கருங்கல் வடிக்கிறது
கண்ணீர்க் கவிதைகளை!

சுவர்தான் காகிதம்,
கை நகம்தான் எழுதுகோல்
உள்ளம்தான் மைக்கூடு
ஒவ்வொரு எழுத்திலும்
ஒரு வலி!
ஒரு வேதனை! ஒரு நினைவு!

"நான் குற்றவாளிதான்...
என் கவிதைகள் என்ன
குற்றம் செய்தது?"
அதையேன்
அடைக்க வேண்டும்?
அவன் எழுத்துக்கள்
சிறைச் சுவர் தாண்டி
வானத்தில் தேடின
சுதந்திரமென்ற
சுகானுபவத்தை!

அந்த கருங்கல்
மனமும் ஓர் நாள்
சிதறிப் போகலாம்...
ஆனால் எழுதிய கவிதைகள்
சுவர்களைத் தாங்கி
மனங்களில் நிலைக்கும்!.

சிறை அவனை அடைத்தது
அவன் கவிதையை
எந்தச் சட்டத்தாலும்
அடைக்க முடியவில்லை!



காரணம்
எல்லாமே
அனுபவத்
தெறிப்புக்கள்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



உன் மவுனக் கோப்பைகளில்
உரையாடலற்ற அத்தனை
வார்த்தைகளையும்
முழுவதுமாக நிரப்பி
வைத்திருக்கிறாய்.
கொஞ்சமாவது தளர்த்திக்
கொள்.. உடைந்து விழும்
தருணங்களில்
பெருத்த சத்தங்கள் உன்னை
காயமுடையச் செய்யும்...
--------------------
அத்தனை மெனக்கெடலுடன்
சமைத்து பரிமாறி சாப்பிட்டு
முடித்தவுடன் நன்றாக
இருக்கிறது என்ற அவரின்
ஒற்றை வார்த்தைக்கு
தவமிருந்த எனக்கு..
இன்று எதிர்பார்க்காமலேயே
வார்த்தைக்கு வார்த்தை
என் அம்மாவின் சமையலுக்கு
எதுவும் இணையில்லை என்று
ஆயிரமாயிரம் மகுடங்களை
சூட்டுகிறான் என் பிள்ளை...

**Nishaa..**



### புவியைக் காப்போம்!

நேரிசை வெண்பா!

காலநிலை மாற்றமும்
காண்கின்ற மாசுபாடு
கோலமுடன் கண்டிடக்
கூர்மையாய்ப்.. பாலமாய்
நல்லியற்கை தம்மை
நலமாகக் காத்திடுவோம்
சொல்லிடுவோம்
மாந்தர்க்கே சொல்!

உயிரினம் நன்றாக
உன்னதமாய் வாழ
நயன்மை இயற்கையை
நாளும்..வியப்பாகக்
காப்பமே காட்டில்
மரத்தையே வெட்டாமல்
கூப்பியே கேட்பமே கூர்ந்து!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**



தீதும்–நன்றும்
இவையெனக்கு தீதோ?
நன்றோ? இவையெனக்கு
தீதும் நன்றும் என
வகைப்படுத்த எனக்கு ஏதும்
இல்லை. இன்றெனுக்கு
தீதானது நாளை
நன்மையாகலாம்.
இன்று நன்மையெனத்
தெரிவது தீமையாகலாம்.
நாளை பற்றின சிந்தனை
விடுபடும் மட்டும்
நாளும் எனக்கு
அலைக்கழிப்பு மட்டுமே.



நாதன் அவன்
சித்தம்
அதுவே
ஆயின்;
ஆகட்டும்
எனக்கு
அதுவும்சம்மதமே!
தீதோ? நன்மையோ?

**சசிகலா விஸ்வநாதன்**



கொக்கொன்றுப்
பறந்துச் செல்கிறது.
அதன் நிழல் பின்தொடர்ந்துப்
போக மறுத்து
இறந்த மீனுக்கு இரங்கல்
கூட்டம் நடத்த
ஆயத்தமாகிறது.
நிழலுக்காவது மனசொன்று
இருக்கிறதே என்று
மகிழ்வதா? நிழலுக்கு
மட்டும்தான் இருக்கிறது
என்று வருத்தப்படுவதா?
என்றுத் தெரியவில்லை.



நிழல்
போலாவதுச்
சில
உறவுகள்
இருந்தால்கூட
நல்லாயிருக்கும்ல என்று
தோண வைக்கிறது.

**துங்கன்**



### வசந்த காலவாக்குரிமை....

வாக்காளர் நம்மை
வரவேற்கும் உற்சவம்

சித்திரை திருவிழா வசந்த
காலத்தில்

பணமும் பொருளும்
இலவசமாக வழங்கப்படும்

ஐந்தாண்டு திட்டம்
அமோகமாக பேசப்படும்

நாட்டின் நலனில்
அக்கறைப் பிறக்கும்

வீதியெங்கும் தோரணங்கள்
வண்ணமயமாய் வரவேற்கும்.

அன்னதானம் வழங்குவதும்
மோரும் நீரும்

கோடை தாகம்
தணிக்க உதவும்.

மக்களை சந்தித்து மகிழ்ச்சி
பொங்கும்

உற்சாகம் பயணம்
ஊரூராய் சென்று

உறவாடி கொடுக்கும்
வசந்தகால வாக்குரிமை.

**தாராமதன்**



### ஹைக்கூ!

ஓராயிரம் பொருள் கிடைக்கும்
உற்று நோக்கினால்
படைப்பதற்கு

மேடுகளைத் தகர்த்து
பள்ளம் நிரப்பு சமத்துவம்
பொதுவுடமை

விழி இரண்டு போதாது
வனப்பை ரசிக்க
வண்ண மலர்கள்

ஒய்வதில்லை
விண்ணும் மண்ணும்
அலையும்
ஒய்ந்திடும் மனிதன்

வெட்ட வெட்ட
வளரும் பனைமரம்
பாராட்ட வளரும் குழந்தை

குடியால் கோடிகள் திரட்டி
கோடித் துணி தந்தனர்
ஏழைகளுக்கு

புதிய பொருளாதாரம்
கல்வி தனியார் மயம்
மது அரசுமயம்

உருவமின்றியும்
தேசப்படுத்தியது
வாழையை
காற்று

அன்றே அநீதி
ஆண்களுக்கு கை
சிலம்பு
பெண்களுக்கு கால் சிலம்பு

இருப்புப் பாதையில்
இருப்பின்றி பயணம்
தொடர் பயணம்

கழிவுநீர் உறிஞ்சி
இளநீர் தரும் உயர்ந்த
தென்னை

யார் உயர் திணை
மோதி விழும் மனிதன்
கூடி வாழும் பறவைகள்

விளைவித்தன கேடு
கண்ணிற்கும் மனதிற்கும்
தொல்(ல்) லைக்காட்சிகள்

தரம் தாழ்ந்தால்
களையாகும் கலை

மாடு செரிப்பதற்கும்
மனிதன் மகிழ்வதற்கும்
உதவிடும் அசைபோடுதல்

போராட்டம் நடிப்பு அரசியலில்
பேராட்டமே வாழ்க்கை
ஏழைகளுக்கு

கண்ணிற்கு குளிர்ச்சி
மனதிற்கு மகிழ்ச்சி
இயற்கை

மனம் வருந்துவதில்லை
மங்கையர் சூடாததற்கு
எருக்கம் பூக்கள்!



**கவிஞர் இரா.இரவி!**



Where are You என்றாள்
I am in Out side என்றேன்
இப்படி விலகியே இருந்தால்
நம் உறவுக்குள் Gap தான்
விழுமென கோபத்துடன்
அலைபேசியில் கத்தினாள்.
தண்டவாளங்கள்
விலகி இருந்தாலும்
இரயில் பயணங்கள்
தடை படுவதில்லை
அந்த தேவதை
Gabriella க்கு சொல்லி
புரிய வையுங்கள்
பிரிந்திருக்கும் காதல்
அவ்வளவு சீக்கிரத்தில்
சோர்ந்தும் போகாது
வீழ்ந்தும் போகாதென்று!

அடித்து கொள்கிறது
மனசு உன் பவ்யங்களில்
ஐக்கியமாகிட!

நான் அதிர்ஷ்டமில்லாதவன்
என் வாழ்க்கையில்
ஐஸ்வர்யமாய் வந்தவள்
நீ மட்டும் தானடி!

குட்டி போட்ட பூனையாய்
சந்தோஷத்தில்
துள்ளி குதிக்கிறது
உன்மேல் பட்ட
அந்த சூரியன் !

எவ்வளவு முயன்றும்
தோற்று தான் போகிறேன்
சத்தியமாக தெரியவில்லை
உன் கண்களின்
பார்வையிலிருந்து
எப்படி தான்
தப்பிப்பது?!

காந்தாரி மிளகாய்
சுட்டெரித்தது
கவிழ்க்கும் அவள்
கண்கள்!

கொஞ்சம் வலிக்க தான்
செய்கிறது என்னுள் ஏனடி
ஊஞ்சலாடுகிறாய்!

நான் மட்டும் உன்னை
பார்ப்பது இயற்பியல்
நீயும் என்னை பார்ப்பது
வேதியியல் பரஸ்பரமாய்
நட்போடு கைகுலுக்கி
கொள்வது தாவரவியல்
இதழோடு இதழ் வைத்து
இம்சைகள் செய்ய
துவங்குவது விலங்கியல்
மொத்தத்தில் நான் படிக்க
விரும்பும் அறிவியலே
நீ தானடி!

இப்படி பார்த்து
தொலைக்காதே பாவம் நான்
இன்னும் சில காலம்
வாழ ஆசைப்படுகிறேன்
விழி வீச்சு வேண்டாமடி
கால் பிடித்து கேட்கிறேன்
என்னை விட்டு விடு!

நீ என்னருகே இல்லாத
போதும் வீசும் காற்றில்
உன் வாசமடி!

எனை கொல்ல நினைக்கும்
அந்த கண்களின்
பார்வைக்கு கூட
வேலி தான் போட வேண்டும்!

ஏஞ்சல் தான்
மஞ்சள் பூசிய மங்கை!

கனவில் கூட மனதோடு
ஊஞ்சலாடுகிறது–அந்த
மஞ்சள் பூசிய முகம்!

ஈர்ப்பு விசை
பூமிக்கு மட்டுமல்ல
உனக்குள்ளும்
இருக்கத் தான் செய்கிறது!

அவள் வெட்கப்பட்டு
சிலாகித்த கவிதையெல்லாம்
அவனுக்கு மொக்கையாக
தெரிகிறது ஏனோ
அவள் எனை விட்டு போன
பிறகு அந்த வார்த்தையும்
என்னோடு வர மறுக்குது
மாலையில் சூரியன்
வேண்டுமானால்
மறையலாம்–ஆனால்
விடியும் பொழுதில்
மீண்டும் நிச்சயம்
உற்சாகமாய் உதிக்கும்–என்
கவிதைச்சூரியன்!



**லி.நௌஷாத் கான்**




## நூல் விமர்சனம்:

நூலின்பெயர்:அஃகம்சுருக்கேல்
ஆசிரியர்: நாஞ்சில் நாடன்
வெளியீடு: சிறுவாணி வாசகர் மையம் விலை : ₹130
தொடர்புக்கு ஜி.ஆர். பிரகாஷ் 9940985920/8778924880

18 கட்டுரைகள் அடங்கிய மாணவர் பதிப்பு. பள்ளி கல்லூரி மாணாக்கர் மட்டுமின்றி எல்லோரும் படிக்க வேண்டியது.

ஃ என்பது ஆயுத எழுத்து அல்ல ஆய்த எழுத்துஎன்பதே சரி என விளக்குகிறார்.

அஃகம் சுருக்கேல், அஃகம் சுருக்கல் என்றால் 2 மீட்டர் சட்டைத்துணி கிழி என்றால் 190 செ.மீ கிழித்தல் அதான் அஃகம் சுருக்கல். ஒரு கிலோ கத்தரிக்காய் விலைகேட்கிறோம் ₹30 என்றாலும் பேரம் பேசாமல் வாங்குகிறோம் நிறுத்தல் அளவு 900 கிராமாக இருந்தால் அஃகம் சுருக்கல் என்கிறார்.

முதுமை, மரணம் பற்றிய சென்று, தேய்ந்து இறுதல் கட்டுரையில் , தாத்தா பருவம் உவப்பாக இருக்கிறது என்றும் சொல்பவர் திருமூலரின் 145 வது பாடலை நினைவூட்டுகிறார். ஊர் எலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப், பேரினை நீக்கிப் பிணம் என்று பேர் இட்டு, சூரை அம் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு நீரினால் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே! நகுலனிடம் கேட்டாராம் மரணத்தைப் பற்றி, பயமாக இருக்கிறது என்றாராம்.

இனிமேல் வாசிக்கும் சுகம் இருக்காது, பாட்டுக் கேட்க முடியாது நண்பர்களைப் பார்த்துப் பேச இயலாது, மனைவி மக்களை, உறவுகளை நிரந்தரமாகப் பிரிந்து போவோம். இவற்றை எல்லாம் எண்ணும் போது திகைப்பாக இருக்கிறது. மகளின் உயிர்த்தோழி டாக்டர் சுமித்ரா அப்படியெல்லாம் பேசக் கூடாது, வான்வெளியில் பறந்து கொண்டிருக்கும் தேவனிடம் ஏதேனும் "ததாஸ்து" என்று சொல்லிப் போய்விடும் என்றாள். "ததாஸ்து" எனில் 'அங்ஙனமே ஆகுக' என்பதாகும். இந்த திகைப்பைத்தானே பயம் என்கிறோம், எனவே காலன் வருமுன்னே, கண்பஞ்சடையும் முன்னே செய்து முடிக்க வேலைகள் உண்டு என்கிறார்.

யாமும் சொல்கிறோம் இது தாத்தா பருவம் அல்ல, உம் தமிழை இன்னும் எமக்குத் தா தா எனும் பருவம்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## நூல் விமர்சனம்

நூலின் பெயர்: நோயற்ற வாழ்வே
ஆசிரியர் : Dr. ஜெ. பாஸ்கரன்
வெளியீடு : குவிகம் பதிப்பகம்
விலை : ₹ 1 2 0
தொடர்புக்கு : 89396 04745/ 94425;2519

பல்வேறு இதழ்களில் வெளியான 23 கட்டுரைகளின் தொகுப்பு.

வெர்டிகோ என்றதும் குணா படத்தில் கமலுக்கு மருத்துவமனையே தலைகீழாக சுற்றுவது போல் , எனக்கு *fissure in Ano* அறுவை சிகிச்சை நடந்ததும் நினைவு திரும்பி ஓரிரு நாட்களுக்கு வெர்டிகோ இருந்தது. வீட்டிலும் சில நாட்கள் எழுவதற்கு முன் இது நிகழும்...இதற்கும் காதுக்கும் ஏதும் தொடர்பு உண்டா?

தோல் சிகிச்சை மருத்துவரை ஒரு முறை பார்த்தபோது, எனக்கு காதில் ஏதோ பிரச்சினை இருப்பது போல் தெரிகிறது என்றார்.

டிமென்ஷியாவில் பல வகைகள் உள்ளதாக குறிப்பிடும் டாக்டர் , அதைக் கணிக்க கூடுதல் கவனம் தேவை என்கிறார் . அவரது அனுபவத்தில் எதிரே அமர்ந்திருக்கும் பெரியவர் எவ்வளவு முயற்சித்தும் தலையசைத்து சிரித்தாரே என நினைத்த போது , அவர் மகன் வர, பேரைக் கேட்டால் சொல்லவில்லையே என்ன பிரச்சினை? எனக் கேட்க, அவர் காதருகே குனிந்து உன் பேர் என்ன? னு கேட்கிறாங்க என்றதும், பேரா... முனுசாமி என்கிறார். காது பிரச்சினை அவர் இடம் மாறி , நேரே உள்ளே வந்து விட்டார், என ஸாரி சொல்லி அழைத்துச் செல்கிறார்.

சிறு வயதில் குழந்தைகளுக்கு தலையில் படர்தாமரை வரும் வாய்ப்புகள் அதிகம், கவனிக்காவிட்டால் மொட்டையே ஆகலாம் என எச்சரிக்கிறார்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**








## காசும்.. கடவுளும்.!

காசுக் கொடுத்துக்
கடவுளைப் பார்த்தான்!
கடவுளுக்கே காசு
கொடுத்தான்..! கடைசியில்
கடவுளிடம் காசு கேட்டான்
மனிதன்!

காசுக்கும் கடவுளுக்கும்
அத்தனைப் பொருத்தம்!
காசில்லா கடவுள்..
கவனிப்பாரற்று கிடக்கும்.!

காசேதான் கடவுள்..
காசில்லை யென்றால்
கடவுளே வந்தாலும்
கதவினைச் சாத்து.. இது
இவன் பழமொழி.

காசுக்கும் கடவுளுக்கும்
முதலெழுத்து ஒன்றுதான்..
காசேதான் கடவுள்.

கடவுளைத் தேடுபவன்
காசினை தேடுகிறான்.!கடந்து
இருப்பவனை காசினால்
தேடுகிறான்!

படைப்பது.. காப்பது..
அழிப்பதும் கடவுள்..!
காசுக்கும் அத்தகைய
குணமுண்டு இங்கே.!
மூவாசையிலே முதலாசை
பொன்னாசை..
மூவாசையினை துற..

கேட்கும் கடவுள் நடந்துவரும்
ஓசை.!

காசு என்றால் குற்றம்
காசில்லை என்றால் ஏதடா
சுற்றம்? கடவுள் என்றால்
கடந்தவன்!

கடவுள் இல்லை
என்பவனும் மனிதன்!
கடவுள் போகா இடத்துக்கும்
காசு போகும்!
காசும் கடவுளும்
கடந்தே போகும்.!
காசு என்றால் பணம்
பணமில்லையல் பிணம்!

காசு என்றால் துட்டு..
துட்டிருந்தாலே பிறர்
வாயைக் கட்டு! கைக்கட்டு..
கால் கட்டு.. கீரைக்கட்டு..
அத்தனையும் விலைக்கு
வாங்கும் பணக்கட்டு.!

கடவுளுக்கு மணி ஓசை!
மனிதனுக்கு மணி ஆசை. !
கடவுளுக்கு ஆறுகால பூசை.
பணத்துக்கு
நொடிதோறும் பூசை.!

கடவுளை நம்பினோர்
கைவிடப் படார்..
காசினை நம்பினோர்
கை தொழப் படுவார்

காசத் தேடு கஞ்சி
கிடைக்கும்.. கடவுளைத் தேடு
மோட்சம் கிடைக்கும்.!

கருவிலே தோன்றி..
கட்டையில் படுக்கும் வரை..
காசிருந்தால் தான் காரியம்
நடக்கும்!

**வே.கல்யாண்குமார்.**



பொண்ணும், பூவும்
மலரின் கலரே....

வாசனை பொருளே...
தலையில் சூட பிறந்தாயோ....

சூடி முடிந்த பிறகு
நீ இறந்தாயோ...
காம்பை விட்டு உதிர்ந்தும்
வாசனை விட்டு
மறைந்தாயோ....


காலையில் மலர்ந்து
காவியம் படைத்தாயோ...
மாலையில் மரணித்து
சரித்திரம் படைத்தாயோ...

பெண்ணும், பூவும் ஒன்னுனா...
பேணி காப்பது சரிதானே...



வாடிய பூ மலர்வதில்லை
வாக்கப்பட்டவள் வாழ்வு
ஓய்வதில்லை...!!

**பொன்.கருணா**
நவி மும்பை



அந்த மரத்தின் ஒவ்வொரு
இலை காற்றுக்கு விழுந்ததும்
மரம் அசையாமல் அப்படியே
தான் நின்றது..
வலிகள் எல்லாம்
மறைந்து கிடக்கும்
வேர்களுக்கு மட்டும்தான்

ஒவ்வொரு முறையும்
செடிகளுக்கு தண்ணீர் ஊற்றி
கடந்து செல்லும்
பொழுதெல்லாம்
என்னைப் பார்த்து
தலையசைத்து சிரிக்கின்றது
இலைகள்

அன்பு என்பது
உச்சரிப்பதற்கு
மிக எளிமையான சொல்
தான்.. ஆனால் அதை
ஆத்மார்த்தமாகக்
கொடுப்பதற்குத் தான்
மிகக் கடினமானதாக்கிக்
கொள்கிறார்கள் இந்த
மனிதர்கள்..

எதற்க்கு சண்டையிடுகிறோம்
என்று தெரியாமலே
அன்றைய பொழுதை
பரபரப்பாக்கி நகர்த்திச்
செல்வதில் உனக்குஅலாதிப்
ப்ரியம்தான் ..

இரவுச் செடியில்இரவுச்
செடியில் உறக்கப் பூக்களைக்
கொய்து கனவுச் சாலைக்குள்
வீசி எறிகிறாய்!

வீசி எறிந்த
உறக்கப் பூக்களெல்லாம்
எந்தன் விழி தோட்டத்தில்
உதிர்ந்து கிடக்கின்றது
நின் நினைவுகளாக!!!

வாஞ்சையுடன் தலை கோதும்
உன் விரல்களுக்கு
என்றுமே சலித்ததில்லை
என் கூந்தலின் வாசம்..

நெடுந்தூரம் நடந்த பின்
தான் தெரிகிறது. என் பாதச்
சுவடுகளைத் தவிர
எதுவுமில்லை என்னைப் பின்
தொடர...

**NISHAA**

## பொதுவுடைமைவாதி விளாதிமிர் லெனின்!

அறுசீர் மண்டிலம்.

பொதுவுடைமை
கொள்கையைக்கண்டவராம்
பொலிவான கொள்கையைக்
கொண்டவராம்!
இதயமீர்த்த இனிமையாம்
தலைவராம் ஈர்க்கின்ற
நெஞ்சுடைக்கலைஞராம்!
முதலாளித் துவத்தையே
எதிர்த்தவராம் மேன்மையான
பனுவலை யாத்தவராம்!
முதன்மையாய்க் கருத்துகள்
ஏற்றவராம் முன்னேற்றப்
பாதையை உற்றவராம்!

புரட்சிக்கே பிதாமகன்
ஆனவராம் பூத்திட்ட
பொதுமையாய்ப்போனவராம்!
விரிவான லெனினியம்
காட்டியவர் வெற்றிக்கே
வித்தினைச்சூட்டியவர்!
புரட்சிக்கே நாயகன்
லெனினன்றோ
பொதுமையெனில்
லெனினையே கூறுவாரே!
அருமையான சோவியத்
தலைவரன்றோ அன்பிற்கும்
கண்ணெனக்கலைஞரன்றோ!


## சூதினைச் சேர்க்காதே சொல்!

நேரிசை வெண்பா!

உணவைப்பணத்தை
உடைமையை மற்றும்
குணத்தையும் கொன்றுவிடும்
அன்றோ!--
கணக்கின்றி ஓதிடுவோம்
எல்லோர்க்கும்
ஒண்மையிலாத்தன்மையாம்
சூதினைச் சேர்க்காதே
சொல்!

தர்மத்தின் வாழ்வுதனைத்
தக்கசூது கொன்றிடும்
அர்த்தமில்லா வாழ்வாகும்
ஆங்கேதான்.. நிர்மூலம்
ஆதியும் அந்தமும்
எல்லாமே போகுமே
சூதினைச்சேர்க்காதே சொல்!

**முனைவர்
இராம.வேதநாயகம்.**



## அவள்

புருவம் உயர,
விழிகள் அகல,
அதரங்கள் பிரிய
உன் முகமொரு
பாவனை காட்டிட
ஆர் வருவார் என்
மனதை மீட்டிட?

**கே. பி. ஜனார்த்தனன்**

பொழுது விடியும் முன்பே
பால் வியாபாரி
வண்டியை ஸ்டார்ட் செய்தார்
பூ விற்கும் அக்கா வேக
வேகமாய் கடை திறக்க
ஓடினான்

பேருந்து நிலையத்தில்
ஆட்டோ ஓட்டும்
அண்ணன்கள் சவாரிக்காக
காத்திருந்தனர்


டீ மாஸ்டர்கள் பறக்க பறக்க
டீ ஆற்றிக் கொண்டிருந்தனர்

நேற்று வரை கையெடுத்து
கும்பிட்ட எந்த
கட்சிக்காரர்களும்
இவர்கள் யாரையும் இன்று
கண்டுகொள்ளவில்லை
கண்ணில் படவில்லை



அடுத்த முறை
கையெடுத்து
கும்பிடுவதற்கு
இன்னும் சில
ஆண்டுகள்
காத்திருக்க
வேண்டும்
தேர்தல்
திருவிழா இனிதே முடிந்தது

**நாகை பாலா**



## குரு அருள்

" குருவின் பார்வையும்
அவரின் அசைக்க பாத
பற்றுதலால் பாதகம் என்பது
ஏது ஏது ...?

குரு பார்க்க கோடி நன்மை
என்பது அதுவே .... "

மகான்கள் தரிசனம்
அவர்கள் பேச்சு
ஸ்பரிசம் பட்டால்
போதும் வாழ்வு
ஜொலிக்கும் ....."

மகான்களுக்கு
யாரைப் பிடிக்கும்
ஏழைக்கு உதவி அன்னமிட்டு
எளிமையாய் இறைபக்தி
கொண்டவரை
மிக பிடிக்கும் ...."

மனதால் நினைத்தால்
நம்மோடு கலக்கும்
ஜீவன் தான் மகான் .... "

அற்புதங்களை செய்து விட்டு
புன்சிரிப்பை மட்டும்
பொங்கவிடும் எளிமை
ஆசான் மகான் ....."

அன்பும் ஆசையும்
ஈடுபாடும் அசைக்க
முடியாத ஈர்ப்பும்
மகான்களை
கட்டிப் போட்டுவிடும் ....."

இருளை நீக்கி அருளை
தந்து அருமந்தாகும்
மகான் ... "



மனதால்
நினைத்து
உருகினால்
உடலோடு
கலக்கும்
ஆத்மா மகான் ..."

**ஆர். சீதாராமன்,** சீர்காழி



(1) பணிந்த ஜனநாயம்
ஜனநாயக திருவிழா
நெரிசலில்பணநாயகத்துடன்
மோத முடியாமல்
காணாமல் போனது
ஜனநாயகம்
(2) 0% வரி
வரிபிடித்தம் இல்லாமல்
வாரி வழங்கப்படுவது
ஓட்டுக்கு பணம் மட்டுமே
(3) லஞ்சம்
நாங்கள் ஆட்சிக்கு வந்தால்
லஞ்சத்தை ஒழிப்போம் என்று
சூளுரைத்த வேட்பாளர்
கமுக்கமாக பூத் ஸ்லிப்பில்
மடித்துக் கொடுத்தார்
வாக்குக்கான பணத்தை
(4) காந்தி சிரித்தார்
கரன்சியில் சிரித்த
காந்தியின் எண்ணற்ற
பரிமாணங்கள்

நேர்மையிலும்
சிரித்தார் காந்தி
வாய்மையிலும்
சிரித்தார் காந்தி
ஏழ்மையிலும்
சிரித்தார் காந்தி
வறுமையிலும்
சிரித்தார் காந்தி
லஞ்சத்திலும்
சிரித்தார் காந்தி
வஞ்சத்திலும்
சிரித்தார் காந்தி
இலவசத்திலும்
சிரித்தார் காந்தி
ஓட்டுக்களித்த பணத்திலும்
சிரித்தார் காந்தி
நடுத்தர குடும்பத்தின்
மாதாந்திர பட்ஜெட்டின்
இறுதி நாட்களில் மட்டும்



ஏனோ சிரிக்க
மறந்தார்
காந்தி

**ஆர்.
ஹரிகோபி,**
புது டெல்லி

## வாசனை !

உடல் மீது தேய்க
வேண்டியதில்லை....
பீச்சி அடிக்க
வேண்டியதில்லை...

இதயதுடிப்பு
இருக்கும் வரையே
மனித வாசம்...



துடிப்பு நின்று
விடின்
வாசம்...
பிறகு...
பிண
நாற்றம் என
மாறுதலடைவதே
மனித வாழ்வு !

**எம்.பி.தினேஷ்.** கோவை

1. மாட்டி கொள்ளாமல்
செய்யப்படும் தப்புக்கு
சாமர்த்தியம் என்று பெயர்

2. நீ யார் என்பதை
நிரூபிக்க ஆதார் அட்டை
வாக்காளர் அட்டை குடும்ப
அட்டை என பல உள்ளது
ஆனால் நீ மனிதன் என்பதை
நிரூபிக்க அன்பு ஒன்றுதான்
உள்ளது

3. அன்பை பிச்சை எடுக்கக்
கூடாது அக்கறையை கேட்டு
வாங்க கூடாது காதலை
கெஞ்சி பெறக்கூடாது
உணர்வுகளை புரிய
வைக்கக் கூடாது

4. இரக்கம் இல்லாதவனிடம்
பணம் போய் சேருகிறது
பணம் இல்லாதவனை
இரக்கம் பிடித்துஆட்டுகிறது



5. இன்று
நீ சொல்லு
வேர்வை
நாளை
உனக்கான
கிரீடம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## வெற்றி

நான் படிக்க விரும்பும்
ஆயுட்காலக் கவிதை நீ!
உன்னைக்கா த லி க் க த்
தொடங்கிய நாளிலிருந்து
எனக்கு எப்பொழுதும்
வெற்றி முகம்தான்!
காவல்துறையில் பணி
புரிந்தாலும் என்னைக்
கா த ல் து றை யி ன் புறம்
திரும்பிப் பார்க்க
வைத்தவள் நீ!
கத்தி துப்பாக்கி என
ஆயுதங்கள் கிடங்குகளில்
மட்டுமல்ல விழிகளிலிருக்கும்
என எனக்குக்காட்டியவள் நீ!
நமக்குள் பரஸ்பர பேச்சு
வார்த்தைகளுக்கிடையே
சொற்களை விட
மு த் த ங் க ளை யே
அதிகமாகப் பரிமாறுபவள் நீ!
நீ எனக்கென நான்
உனக்கென வாழ்வதில் சுகம்
மட்டுமல்ல நம் கா த லி ன்
வெற்றியுமிருக்கிறது!

## தோல்வி

எனக்காக நான் மீட்ட
உன்னையே தருபவளும்
நீதான்!
நான் தோல்வியைத்
தழுவும் நேரங்களில் என்னை
மீட்டெடுப்பவளும் நீதான்!
தேவதைகளைக் காணவே
எண்ணற்றோர் காத்திருந்து
தவமிருக்க நானோ
ஓர் அழகிய தேவதை என்னை
நேசிக்கும் பாக்கியம்
பெற்றவனாகிறேன்!
பொய்யுரைத்து மையலுறும்
பாவையரிடையே
மெய்யையே எனக்குப்
பரிசாகத் தருபவள் நீ!
நேர்மையாக இருந்தே
வளர்ந்து விட்டாலும் நீ
என்னை நெருங்கும்
நேரங்களில் நான் உத்தம
வில்லனாகிறேன்!
நீ என் கரம் சேர்ந்த பின்
நான் உன் கரம் கோர்த்த பின்
நம் கா த ல் ம கு ட ம்
சூட்டிக் கொண்டு
தன் பணியை வெகு
நேர்த்தியாகத்
தொடங்குகிறது!

## டெபாசிட்

என் வாழ்க்கைக்குத்
தேவையான ஒரே ராணி
நீதான்!
எனவே உன்னை என்
இதயத்தில் டெபாசிட்டாக
வைத்திருக்கிறேன்!



## வாசிக்க சிலதுளிப்பாக்கள்..

1–நதியோரம் பூக்கும் பூக்கள்
விற்பனைக்கு வரவில்லை
தினசரி நாளிதழ்..

2–மலை முகடுகளின்
நிழல்கள் படர்ந்து தெரிகிறது
ஆகாயத்தின் வெளிச்சம்..

3–சிலந்தியின் வலை
கொஞ்சம் கொஞ்சமாய்
நகர்ந்து செல்கிறது..
மேகத்திற்குள் நிலா..

4–பச்சை வயல் முழுவதும்
நிறைந்து கிடக்கிறது
வானில் நட்சத்திரங்கள்

5–மலை முகடுகளின்
நிழல்கள் பரவலாய் படிந்து
கிடக்கிறது தண்ணீர்
தொட்டிக்குள் பாசி..

6–விற்பனை பொருள்கள்
இலவசமாகக்
கொடுக்கப்படுகிறது
கோயிலில் அன்னதானம்..

7–கல்விக் கட்டணம்
அளவிற்க்கு அதிகமாக
உயர்ந்தது ஏரியின் நீர்
மட்டம்..

8–குடிசை வீட்டிற்குள்
தினமும் இரவில்
விளக்கேற்றும்
முழுநிலவின் வெளிச்சம்..

9–அந்தி மாலை வேளை
மஞ்சள் நிறத்தில்
மங்களகரமாக பூசணிப் பூ..

10–கண்மூடி தியானம்
செய்ததில் இறைவனின்
தரிசனம் கிடைத்தது
நேற்றைய கனவில்..

11–முதல் முத்தம்
தித்திப்பாக இனித்தது
மழலையின் பேச்சு..

12–வெங்காயத்தை
உரித்தவுடன் கண்கள்
கண்ணீர் வடிக்கிறது
தாயின் பிரிவு..

13–நிறைமாதக் கர்ப்பிணி
சுமக்க முடியாமல் சுமந்து
செல்கிறாள்
புத்தகப் பையுடன் மாணவி

14–தெருவில் அமர்ந்து
யாரோ ஒருவருக்கு
எதிர்காலத்தை கணிக்கும்
ஜோதிடன்...

15–குழந்தையின் முத்தம்
அலுக்காமல் நனைத்துச்
செல்லும் கடலலை...

**nishaa**



என்னைப்பார்க்கும் போதே
பூவாய் மலர்ந்திருக்கும் நீ
இன்னும் நான் தொட்டால்
எப்படியெப்படியெல்லாம்
மலர்வாய்!
நீ வராத போதெல்லாம்
தவிக்கும் என் மனம் நீ
வந்த பின்போ டிரம்ஸ்
வாசிக்கிறது!
நீ வந்தவாசியிலிருந்து தான்
வேலூருக்கு வந்திருப்பாயோ!?
எதைப் பற்றியும்
கவலைப்படாமல்
ஓடிக் கொண்டிருக்கும்
நதியைப் போல் தான்
என் மீதான உன் அன்பும்!
என்னைப்படரும் கொடியாக
நீயான பின் உன்னைப்
பாதுகாப்பதொன்றே என்
கொள்கை!
கா த லி த் து க் கொண்டே
வா ழ் வோ ம்!
வா ழ் ந் து கொண்டே
காதலிப்போம்!

## முடிவு

அந்தச் சின்னத்திற்கு
வாக்களிக்கலாமா?
இந்தக் கட்சிக்கு ஓட்டுப்
போடலாமா?
என்றெல்லாம் யோசிப்பது
போலல்ல இந்தக் காதல்!
உன் மனசு முடிவு செய்து
நாம் இருவரும் சேர்ந்து
வாழ்க்கையைத் தொடங்க
நாம் இருவருமே இணைந்து
கா த ல் சி ன் ன மா ன
இ த ய த் தி ல் வாக்களித்தே
தீர வேண்டும்!
உன் வார்த்தைகளில்
எத்தனை அழகை
ரசிக்கிறேனோ அதை விட
மிக அதிகமாகவே உன்
அன்பையும் நான்
நேசிக்கிறேன்!
நம் இருவருக்கெனவே
நமக்குள் பிறந்திருக்கும்
கா த ல் மிக அலாதியானது
வெகு அழகானது!
ஒரு நல்ல முடிவு
எதையும் சாதிப்பது போல்
உ ண் மை யா ன காதலையும்
வாழவைக்கும்! ஆட்சி


நம் உண்மையான நேசம்
மட்டுமே கா த லெ னு ம்
ஆட்சி நாற்காலியில்
நம் இருவரையும்
வெற்றிகரமாக அமர
வைத்தது!
காவலில்லாத எல்லை மீறிய
கா த ல் நமக்குள் ஓடிக்
கொண்டிருந்தாலும்
கடமை கண்ணியம்
கட்டுப்பாட்டை
எப்பொழுதும் நிலை
நிறுத்திக் கொண்டிருக்கிறது
நம் அன்பு!
பிரிவின்றி நாம் இணைந்து
வாழும் ஒவ்வொரு வினாடியும்
நமக்கு அதிர்ஷ்டமயமான
கா த ல் தருணங்க(ள்!) ளே!
உன் புருவ வில்லிலிருந்து
விடுபட்ட நாண் என்னும்
பார்வைதான் ஆட்சியில்
என்னைக்காதல்
மன்னனா க
அமர வைத்தது!
கவிதையான
எண்ணங்களுடன்
கா த லா க நாம்
பயணிக்கையில்
ஒவ்வொரு நொடியும் நம்மை
வெற்றி கைப்பற்றுகிறது!

**முத்து ஆனந்த்**
வேலூர்


WANTED
MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED
Managers: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000
Telecaller -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer
Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000
Call/wapp: 9438610756


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318



Seek Strive Succeed
Annai Violet
Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Key Features
Modern Infrastructure | Extensive Library
Expert Faculty | Result-Oriented Curriculum
Well-Equipped Labs | Competitive Exam Preparation
Sports & Skill Development | English Training
Prime Location | Strong Security
Seminar Hall | Personalized Student Support
Inter-College Competitions | Scholarships
Counseling & Mentoring | Industrial Visits
Interactive Learning | Strong Placement Support
Community Radio Station
BANK LOAN
Free Transportation for Girl Students from Pattaravakkam Railway Station & Kallikuppam to College
UG & PG COURSES
SHIFT I
B.C.A
B.B.A
B.Sc COMPUTER SCIENCE
B.Sc BIOCHEMISTRY
B.Sc MICROBIOLOGY
B.A TAMIL
B.A ENGLISH
B.A ECONOMICS
B.COM (GENERAL)
B.COM (ACCOUNTING & FINANCE)
B.COM (CORP. SECRETARYSHIP)
M.A ENGLISH
M.COM
M.Sc BIOCHEMISTRY
SHIFT II
B.Com (GENERAL)
B.Com (ISM)
B.Sc PHYSICS
B.Sc CHEMISTRY
B.Sc COMPUTER SCIENCE
B.Sc VISUAL COMMUNICATION
M.Sc COMPUTER SCIENCE
M.Sc MICROBIOLOGY
CERTIFICATE COURSE
DIP. IN MEDICAL LAB TECHNOLOGY (DMLT)
CERTIFICATE COURSE IN MEDICAL CODING
PHOTOSHOP • COREL DRAW • TALLY PRIME
Get great education with us
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388
No.53, Violet College Road, Menambedu, Ambattur, Chennai - 53.
info@violetcollege.in www.violetcollege.in


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97


துபாயை தலைமையிடமாகக் கொண்டு
தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக
பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY - 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872






















**ATTENTION**

**ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு**

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.







THANIGAI

**WANTED** ISO

**REAL ESTATE MARKETING**

**PART TIME & FULL TIME**

☑ Flexible work ☑ No Age Limit / No Investment

☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target


Simple work - just refer customers only

Office Location : Near Perambur Railway Station

K. Ramakrishnareddy 90879 55111







SMART PROMOTERS
BUSINESS VIDEOS
IN ALL INDIAN LANGUAGES
SUCCESS
GROWTH
MULTIPLE LANGUAGES
PROMOTE WITH US
PROMOTE YOUR BUSINESS THROUGH OUR CHANNEL
1. Promote your Business
2. In Multiple Languages
3. We Promote in Social Media
4. Find Innovation & New Techniques
5. With Less Budget
HIGHLY PROFESSIONAL & ATTRACTIVE CONTENT
ENGLISH TAMIL TELUGU HINDI ODIA BENGALI KANNADA
CALL NOW: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Low Cost Matrimony Website
MATRIMONY
WEBSITE
RS.15000
Call/Whatsapp - +91 97155 39521


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


உ
ஸ்ரீ வாசவி சகாயம்
கரூர் ஸ்ரீ வாசவி
கன்னிகாபரமேஸ்வரி அம்மன்
ஜெயந்தி தின விழா
அழைப்பிதழ்
26.04.2026 ஞாயிற்றுக்கிழமை
(18.04.2026 முதல் 27.04.2026 முடிய)


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
TV NEWS
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009



# பல்சுவை களஞ்சியம்



## முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைய..

முகப்பரு வந்தவுடன் அதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டும் என்ற எண்ணத்துடன் பருவை கிள்ளி விடுகின்றனர். பரு சிதைந்து நாளடைவில் அதுவே கரும்புள்ளிகளாக மாறுகின்றது.அரிசி மாவை தண்ணீர் விட்டு கலக்கி முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவி வர கரும்புள்ளிகள் மறையும். ரோஜா இதழ் மற்றும் பாதாம் பருப்பை அரைத்து முகத்தில் தேய்த்து, சிறிது நேரம் கழித்து கழுவி வர, கரும்புள்ளிகள் மறையும்.வெள்ளரிச்சாறு, புதினாச்சாறு, எலுமிச்சை பழச்சாறு ஆகியவைகளை சம அளவில் கலந்து முகத்திலுள்ள கரும்புள்ளிகளின் மீது தேய்த்து வந்தால் கரும்புள்ளிகள் போய்விடும்.ஜாதிக்காயை




அரைத்து முகத்தில் தடவி 30 நிமிடம் கழித்து கழுவி வர கரும்புள்ளிகள் மறையும். இரண்டு டேபிள் ஸ்பூன் தயிரை, ஒரு டேபிள் ஸ்பூன் எலுமிச்சை சாற்றுடன் கலந்து, தடவி வந்தால், கரும்புள்ளிகள் போய்விடும். உருளைக்கிழங்கை வெட்டி கரும்புள்ளிகளின் மீது தேய்த்து வர கரும்புள்ளிகள் மறையும். மஞ்சளுடன் கருவேப்பிலை சாறு சேர்த்து முகத்தில் தடவி வர கரும்புள்ளிகள் மறையும்.கற்றாழை ஜெல்லை முகத்தில் நாள்தோறும் தடவி வந்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைந்துவிடும். வெந்தயக் கீரையை நன்கு அரைத்து பேஸ்ட் செய்து முகத்தில் தடவி வந்தால், விரைவில் முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் நீங்கிவிடும்.

## எண்ணெய் பசை முகம்... பளிச்சென்று மாற... உங்களுக்கான டிப்ஸ்..!!



தயிர், கடலைமாவு, எலுமிச்சை சாறு ஆகியவற்றை கலந்து முகத்தில் பூசி சிறிதுநேரம் கழித்து கழுவினால் அதிகப்படியாக எண்ணெய் வழிவது குறைந்து முகம் பளபளக்கும்.வெள்ளரிக்காயை தினமும் காலையில் முகத்தில் தேய்த்து வர முகத்தில் அதிகமாக எண்ணெய் வழிவதை தவிர்க்கலாம்.தக்காளி பழச்சாற்றை முகத்தில் தடவி காய்ந்த பின், கழுவினால் எண்ணெய் வழிவது கட்டுப்படும். தக்காளியுடன் வெள்ளரிப்பழம் அல்லது ஓட்ஸ் சேர்த்து அரைத்து முகத்தில் பூசி 20 நிமிடங்கள் கழித்து கழுவலாம்.எண்ணெய் பசை சருமம் உள்ளவர்கள் அடிக்கடி முகம் கழுவ வேண்டும். முகத்தை கழுவ சோப்பிற்கு பதில் கடலைமாவை பயன்படுத்தலாம். இதனால் எண்ணெய் வழிவது குறைவதோடு, முகமும் பளபளப்பாக காட்சியளிக்கும். மோரை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால் எண்ணெய் வழிவது குறையும். சோளமாவுடன் தயிர் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவினால் முகத்தின் எண்ணெய் பசை நீங்கும்.சிறிது புதினா இலைகளை நீரில் போட்டு நன்கு கொதிக்க விட்டு, அந்நீரை குளிர வைத்து, பின் அதனை காட்டன் துணியைக் பயன்படுத்தி முகத்தைத் துடைக்கலாம். இதுவும் எண்ணெய் பசையைக் கட்டுப்படுத்தும்.ஐஸ் நீர் அல்லது ஐஸ் கட்டிகளைக் கொண்டு முகத்தை சிறிது நேரம் மசாஜ் செய்து வர, முகத்தில் உள்ள அழுக்குகள் நீக்கப்படுவதோடு சருமத்துளைகள் இறுக்கப்பட்டு, எண்ணெய் பசையைக் தடுக்கலாம்.வெள்ளரிச்சாற்றுடன் பால் பவுடர் கலந்து தடவினாலும் எண்ணெய் வழியாமல் முகம் பிரகாசமாக காணப்படும். கரும்புள்ளிகள் நீங்க குப்பைமேனி கீரையை எடுத்து அதனோடு மஞ்சள் சேர்த்து மை போல அரைத்து தேகத்தின் மீது தேய்த்து, சிறிது நேரம் கழித்து குளித்து வர வேண்டும். ஒரு மாதத்திற்கு இப்படி செய்து வந்தால் கரும்புள்ளிகள் மறையும், அழகு கூடும்.

## த்ரெட்டிங் செய்த பிறகு கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்..!

பெண்கள் முகத்தில் வளரும் தேவையற்ற முடிகளை நீக்குவதற்கும், தங்களை மேலும், அழகாக்கிக் கொள்ளவும் த்ரெட்டிங் செய்து கொள்வார்கள். சருமத்தில் வளரும் தேவையற்ற முடிகளை நீக்க வேக்சிங் இருந்தாலும், பெரும்பாலான பெண்கள் த்ரெட்டிங்கை தான் மேற்கொள்கிறார்கள். இதற்கு முதற்காரணம் வேக்சிங்கை விட த்ரெட்டிங் செய்வதால் வலி சற்று குறைவாக இருப்பது தான்.மேலும் த்ரெட்டிங் புருவங்களில் மட்டுமின்றி, சிலர் உதட்டிற்கு மேல் மற்றும் நெற்றியிலும் செய்வார்கள். த்ரெட்டிங் செய்த பின் சில விஷயங்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். அப்போதுதான் த்ரெட்டிங் செய்த இடத்தில் பிம்பிள், புண் வருவதை தடுக்கலாம். இப்போது த்ரெட்டிங் செய்த பின் கடைப்பிடிக்க வேண்டிய சில முக்கியமான வழிமுறைகளைப் பார்க்கலாம். முதலில் த்ரெட்டிங் செய்வதற்கு முன்பாக, முகத்தை நீரினால் நன்கு சுத்தமாக கழுவிக் கொள்ள வேண்டும். குறிப்பாக சுடுநீரைப் பயன்படுத்துவது நல்லது. ஏனெனில் சுடுநீர் சருமத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசையை நீக்கிவிடுகிறது. பின்னர் முகத்தை நீரில் கழுவியப் பிறகு, சுத்தமான காட்டன் துணியால் முகத்தை துடைக்காமல், ஒற்றி எடுக்க வேண்டும். ஏனெனில் துடைத்தால், சருமம் பாதிக்கப்படக்கூடும்.பிறகு இயற்கையான டோனரைக் கொண்டு முகத்தைத் துடைக்க வேண்டும். அதிலும் சீமை சாமந்தி டீ அல்லது கற்றாழை ஜெல் கொண்டு துடைத்து, உலர விட வேண்டும். அதன் பிறகு அழகுக்கலை நிபுணரை த்ரெட்டிங் செய்ய அனுமதியுங்கள்.த்ரெட்டிங் செய்து முடித்த பின், மீண்டும் டோனரை தடவி, ஒரு ஐஸ் கட்டியால் த்ரெட்டிங் செய்த இடத்தை ஒத்தடம் கொடுக்க வேண்டும். இதனால் சருமத்துளைகள் மூடி பிம்பிள் வருவது தடுக்கப்படும். மேலும் உங்களுக்கு முகம் கழுவ வேண்டுமென்பது போல் தோன்றினால், ரோஸ் வாட்டரை பயன்படுத்த வேண்டும். இதனால் த்ரெட்டிங் மூலம் ஏற்பட்ட காயங்கள் மற்றும் பிம்பிள் வருவது தடுக்கப்படுகிறது. த்ரெட்டிங் செய்து முடித்த பின் 6 மணிநேரத்திற்கு த்ரெட்டிங் செய்த இடத்தைத் தொடக்கூடாது. அதைப்போல் க்ரீம்களையும் பயன்படுத்தக்கூடாது. அதுமட்டுமின்றி, குறைந்தது 12 மணிநேரத்திற்கு ஸ்கரப் செய்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

-A.s.Govinda rajan
Kodambakkam, Chennai



# மீம்ஸ்









## விடுகதை



| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |



# ஜோக்ஸ்

காவலர் 1: நமது அரசியார் அரண்மனை வாசலில் வந்து நிற்கிறாங்களே! ஏன்?
காவலர் 2: போர்களத்திலிருந்து நமது அரசர் ஓடி வரும் அந்த கண்கொள்ளா காட்சியை கண்டு ரசிக்கத்தான்.
நாஞ்சில் சு. நாகராஜன்

ஒருவர் : டி. வி. யில் பேட்டி கொடுக்கும் அந்த டாக்டரை போலி என்கிறாயே! ஏன்?



அடுத்தவர்: கொசு கடிச்சாலும் தொப்பிளை சுற்றி மூணு ஊசி போடச் சொல்றாரே!

ஜோக்ஸ் பகுதிக்கு
இளைஞன் : டாக்டர், உங்க கிளினிக்கை அண்ணாந்து பார்த்தா எனக்கு தலை சுத்துகிறது.
டாக்டர் : எதற்கு அண்ணாந்து பார்க்கிறீங்க?
இளைஞன் : உங்க கிளினிக்கின் மூன்றாவது மாடியில்தான் என் லவ்வர் வீடு இருக்குது டாக்டர்.

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## இன்று முதல் 27-4-2026 வரை நிகழ்ச்சி



24-ந் தேதி (வெள்ளி)
* திருநெல்வேலி குறுக்குத்துறை சுப்பிரமணியர் மயில் வாகனத்தில் பவனி.
* சீர்காழி சிவபெருமான் வெள்ளி ரத உற்சவம்.
* மேல்நோக்கு நாள்.

25-ந் தேதி (சனி)
* தஞ்சை பிரகதீசுவரர் ரிஷப வாகனத்தில் பவனி.
* மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் நந்தீசுவர யாளி வாகனத்தில் உலா.
* கடையம் சிவபெருமான் இந்திர விமானத்தில் பவனி.
* கீழ்நோக்கு நாள்.

26-ந் தேதி (ஞாயிறு)
* மதுரை மீனாட்சி ந்தரேசுவரர் பட்டாபிஷேகம்.
* தூத்துக்குடி சுவாமி யானை வாகனத்திலும், அம்பாள் அன்ன வாகனத்திலும் பவனி.
* சீர்காழி சிவபெருமான் திருக்கல்யாணம்.
* கீழ்நோக்கு நாள்.

27-ந் தேதி (திங்கள்)
* சர்வ ஏகாதசி.
* மதுரை கள்ளழகர் கோடை வசந்தோற்சவம் ஆரம்பம்.
* தூத்துக்குடி நடராஜர் உருகு சட்ட சேவை.
* சோழசிம்மபுரம் லட்சுமி நரசிம்மர் அனுமந்த வாகனத்தில் சூர்ணா பிஷேகம்.
* கீழ்நோக்கு நாள்.

## தொழிலில் லாபம் தரும் பரசுராமர்



சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு பிரம்மேந்திர சுவாமி என்பவரால் இக்கோவில் கட்டப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த ஆலயம் இந்து, முஸ்லிம் மற்றும் ஐரோப்பிய கட்டிடக் கலை பாணியின் கலவையில் அமையப்பெற்றுள்ளது. கருவறையில் பரசுராமர், வில், அம்பு, கோடரி ஏந்தியபடியும், லாப முத்திரை காட்டியபடியும் அருள்பாலிக்கிறார். அருகில் இருபுறமும் பிரம்மா, விஷ்ணு இருவரும் நான்கு திருக்கரங்களுடன் ஆயுதம் ஏந்தி காட்சி தருகிறார்கள்.

வலம்புரி விநாயகர், அனுமன், கங்காதேவி, ரேணுகா தேவி ஆகியோருக்கும் சன்னிதிகள் உள்ளன. கோவிலுக்குள் 'பரசுராம் பான கங்கா' எனும் குளம் காணப்படுகிறது. இந்த குளத்தை பரசுராமர், தன் வில்லால் உருவாக்கியதாக கருதப்படுகிறது. பாவத்தில் இருந்து விடுபட நினைப்பவர்கள், இந்த நீரை தலையில் தெளிக்கிறார்கள்.

## தீய சக்திகளை அழிக்கும் வாராகி



வளர்பிறை பஞ்சமியில் வாராகி அம்மனை வழிபட்டால், அனைத்து தடைகளையும் நீக்கி அருளுவாள் தேவி என்கின்றனர் பக்தர்கள். உலகையாளும் மகாசக்தி என்று போற்றப்படுகிறாள் பராசக்தி. சிவத்துக்கே சக்தியாகத் திகழக் கூடிய பராசக்தி, அசுரக்கூட்டங்களை ஒழிப்பதற்காக, அழிப்பதற்காக ஒவ்வொரு சக்தியாக வெளிப்படுத்தினாள் என்கிறது புராணம்.

அசுரக்கூட்டங்களையும் தீய சக்திகளையும் அழித்தொழித்தவர்களில் வாராகியும் ஒருவர். பராசக்தியிடம் இருந்து அப்படி வந்த சக்திகளில், 7 தேவதைகள், 7 சக்திகள் மிக மிக முக்கியமானவர்கள். அந்த ஏழுபேரும் சப்த மாதர்கள் என்று போற்றி வணங்கப்படுகிறார்கள். சப்த மாதர்களில் பிரமாண்டமான வீரியமும் எதிரிகளை அழிப்பதில் வேகமும் துடிப்பும் கொண்டு நம் அபயக்குரலுக்கு ஓடோடி வருபவள் வாராகி அம்மன்.

சப்தமாதர்களுக்கு சந்நிதி என்பது சோழர்கள் காலத்தில் பல ஆலயங்களில் அமைக்கப்பட்டன. யுத்தம் முதலான முக்கிய நிகழ்வுகளின் போது, சப்த மாதர்களுக்கு படையல் போடப்பட்டு, வழிபாடுகள் நடத்தப்பட்டன. போருக்குச் செல்வதற்கு முன்னரும் போருக்குச் சென்று விட்டு வந்த பிறகும் சப்தமாதர்களை வழிபட்டார்கள் என்கின்றன பழங்கலா கல்வெட்டுக்கள்.

தஞ்சை பெரியகோவிலில் வாராகியை தரிசிக்கலாம். ஆனால் ராஜராஜ சோழன் வாராகிக்கு, பெரியகோவிலில் சந்நிதி எழுப்பவில்லை. பின்னாளில்தான் வாராகி சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. வராஹியை வணங்கி வருகிறார்கள் பக்தர்கள்.

வாராகி அம்மனுக்கு மொச்சை, சுண்டல் நைவேத்தியம் செய்வதும் விசேஷம். சுக்கு அதிகம் சேர்த்து பானகம் செய்தால், அந்த வெல்லக் கரைசல் போல், நம் வாழ்வில் இன்பத்தையும் நிம்மதியையும் சேர்த்துக் கலந்திடுவாள் வாராகி.

## சுடலை ஈசனின் தாயாக அருள்பாலிக்கும் பிரம்மசக்தி

கயிலாய மலையில் ஈசனும், ஈஸ்வரியும் ரகசிய ஆலோசனையின் பொருட்டு அளவளாவிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் பெற்றோர் என்ன பேசிக் கொள்கிறார்கள் என அறிய, விளையாட்டான கோணத்துடனே முருகன், வண்டு உருவெடுத்து தாயாரின் கூந்தலின் சிக்கிடையில் சத்தம் இல்லாமல் அமர்ந்து கேட்டார்.

பார்வதியும், முருகன் வந்து கூந்தலில் ஒளிந்து அமர்ந்திருந்ததை தடுக்கவுமில்லை பொருட்படுத்தவும் இல்லை. ஈசனும் இவையனைத்தையும் ஞானத்தால் உணர்ந்து,

"உமையே!" நம் பேச்சின் ரகசியத்தை, நீ மகன் முருகனை கூந்தலில் ஒளிந்திருந்ததை தடுக்காது விட்டதனாலும், ரகசியம் முருகன் அறிந்ததனாலும், முருகன் கடலில் மீனாகவும், நீ அதி அரசனுக்கு மகளாக மானிடப் பிறப்பெடுக்கவும் கடவது என சாபமிட்டார்.

எங்களின் சாபம் எப்போது தீரும் ? என தேவி வினவ, நீ பருவ வயதை பெறுகிற போது, நான் ஆண்டியாக வந்து உன்னை மணப்பேன். அந்த கணத்தில் முருகனுக்கும் சாப விமோசனம் தருவேன் என்றார் ஈசன்.

மங்கைபதி என்கிற பகுதியில் ஆட்சி செலுத்தி வந்த அதி அரசனின் மகளாக தேவி அவதரித்தாள். கடலில் முருகப் பெருமான் மகரமீனாக அவதரித்தார். பருவ வயதை எட்டியதும் ஈசன் சொல்லியபடி தேவியை ஆண்டியாக வந்து மணமுடித்து முருகனுக்கும் சாப விமோசனத்தை தீர்த்தார்.

கயிலாய மலையில் தேவியுடன் சிவபெருமான் வீற்றிருந்த நேரத்தில்,,,தேவர்கள் சிவசக்தியைக் காண, கயிலாய மலைக்கு வந்தனர். சிவபெருமானை பாதம் பணிந்து வணங்கி எழுந்தார்கள்.

ஈசன் கேட்டார்.... மணமுடித்த தருண நேரம் பார்த்து வந்திருக்கின்ற தேவர்களே! எங்களைக் காண என்ன கொண்டு வந்து இருக்கிறீர்கள்.

தேவர்களோ தேவா!.... தேவாதிதேவனே! இக்கயிலையில் இல்லாதது, வேறு எங்கே உள்ளது? என்றனர். அதற்கு ஈசன் தாங்களோ விருப்பு வெறுப்பு இல்லாதவர் ஏன் வேறில்லை. அரிதிலும் அரிதான கடலில் பிறக்கும் பொன்னேரி மலையைக் கொண்டு வாருங்களேன்!"

பொன்னேரி மலையைக் கொண்டு வருவதாக கூறிச் சென்ற தேவர்கள், திருப்பாற்கடல் சென்று, மந்திரகிரிமலையை மத்தாக்கி, வாசுகியை கயிறாகக் கொண்டு, அமிர்தம் கடைய கடைய பல்வேறுவிதமான பொருட்கள் ஒவ்வொன்றாக தோன்றி வந்தன. ஆனால் நினைத்த பொன்னேரி மலை மட்டும் வந்தபாடில்லை. நினையாத பலபொருட்களும் தொடர்ந்து தோன்றிக் கொண்டிருந்தன.

தேவர்களின் முதன்மைத் தலைவனான இந்திரன் பிரம்மாவிடம் முறையிட்டான். பிரம்மா அரளிப்பூவினை எடுத்து உருப்பிடித்து கடலிட, பொன்னேரிமலை தோன்றி வந்தது. அதை எடுத்துக் கொண்ட தேவர்கள் மனநெகிழ்ச்சி அடைந்தனர். பின் பொற்குடம் ஒன்றினுள் பொன்னேரி மலையை வைத்து கயிலைக்கு எடுத்து வந்தார்கள்.



பொன்னேரி மலையை தேவர்கள் எடுத்து வரும் வழியில், எதிரே ராட்சஷ படைகளுடன் சண்ட முண்டன் என்னும் ராட்சஷன் வழிமறித்து வீண்வம்பு செய்தான். சிறிது போராட்டத்திற்குப் பின், பொன்னேரி மலையுடன் கூடிய பொற்குடத்தை ராட்சஷன் அபகரித்துச் சென்றான்.

பொற்குடத்துடன் கூடிய பொன்னேரி மலை பெறப்பட்டதையும், அதை கொண்டு வரும் வழியில் ராட்சஷன் அபகரித்து விட்டதையும், ஈசனிடத்து வந்து தேவர்கள் மனம் வெதும்பி விவரித்தார்கள். அது கேட்ட ஈசன், எமதர்மனையும், ஆதித்தனையும் அழைத்து, சண்டமுண்டனிடம் போய் அபகரித்துச் சென்ற பொன்னேரி மலையை வாங்கி வருமாறு கூறினார்.

"இறைவா"....! எங்களால் அது முடியாது? அந்த ராட்சசனிடமிருந்தா! முடியவே முடியாது இறைவா. என்று தயங்கினர் எமதர்மனும், ஆதித்தனும்.

உடனே தேவி ஈசனைப் பார்த்து..... "மகாதேவா!" என்னால் முடியும்!" என்றார்.

பின், பிரம்மதேவனோ!" .... "தேவா!" எனக்கு உத்தரவிடுங்களேன். நான் மீட்டெடுத்து வரவா என கேட்க...

புன்னகைத்த ஈசன்,,,, "ம்" ஆகட்டும் என்று சொல்லி, சேவகர்களை அழைத்து, 64அடி சதுர வடிவுடன் 51 அடி ஆழத்துடன் வேள்விகுழியை அகழ்த்துமாறு பணித்தார்.

வேள்விகுழியில், பலவகையான மரங்களை வெட்டி தரித்து சீராக்கி அடுக்குப்பட்டிருந்தது. அணலை மூட்டத் தயாரானார்கள்.

சிவன் சக்தியைப் பார்த்தார். சக்தியின் அம்சம் சிவனுள் செல்ல, அதை ஈசன் நுதலில் (நெற்றி) ஏற்றி, நெற்றிக் கண்களின் வழியாக வெளிவந்த தீயை வேள்விக்குள் விடுத்தார். வேள்வித் தீ சுடர் பெருகி பொங்கி எழுந்தெரிந்தது.

அதில் பிரம்மன் தனது சக்தியினை மெருகேற்றி, கலைமகளின் ரூபமாக வெண் தாமரையும், மலைமகளின் ரூபமாக செவ்வரளி மலையையும், மஞ்சளையும், குங்குமத்தையும், மஞ்சளையும் அத்தீயிலிட, வேள்விக்குண்டத்திலிருந்து தீ பிழம்பினூடே பிரம்மராக்கு சக்தி தோன்றினாள்.

பிரம்மனால் ஒருங்கிணைத்து ஆக்கப்பட்ட சக்தி என்பதால், அவள், பிரம்மராக்கு சக்தி என அழைக்கப்பட்டாள்.

பிரம்மராக்குசக்தி, சண்டமுண்டன் என்னும் ராட்சசனை அழித்ததால், பிரம்மராட்சசி என்றும் போற்றப்பட்டாள்... இவள் பேச்சி பிரம்மசக்தி பூலோகத்தில் சுடலை ஆண்டவர்க்கு தாயாக மகன் சுடலையுடன் காட்சி தருகிறாள்...

## மாலை நேரத்தில் இந்த பொருட்களை தானம் கொடுத்தால் வறுமை நிலை ஏற்படுமாம்..

இந்திய கலாசாரத்தில் தானம் வழங்கினால் நன்மையே நடக்கும் என்று கூறப்படுகிறது. இதனால் பிறந்த நாள், கல்யாண நாள் அல்லது முக்கிய விஷேச நாட்களில் தானத்தை வழங்குகிறோம். அதுமட்டுமில்லாமல் வீட்டில் யாரும் ஏதாவது பொருட்கள் இல்லையென்றால் பக்கத்து வீட்டுக்காரரிடம் வாங்கி கொள்வார்கள். அப்படி வந்து கேட்கும் போது இல்லையென்று சொல்லாமல் கொடுக்கும் பழக்கம் நிறைய நபரிடம் இருக்கிறது. அப்படி நீங்கள் கொடுக்கும் நேரமானது மாலை நேரமாக இருக்க கூடாது. மாலை நேரத்தில் சில பொருட்களை தானம் வழங்க கூடாது என்று ஆன்மிகத்தில் கூறப்படுகிறது. அவை என்னென்ன பொருட்கள் என்று இந்த பதிவின் வாயிலாக அறிந்து கொள்வோம் வாங்க..

**தானமாக கொடுக்க கூடாத பொருட்கள்:**

சூரியன் மறைந்த பிறகு நாம் கொடுக்கும் பொருட்களில் சில பொருட்களை தானமாக கொடுத்தால் லட்சுமி தேவி கோபம் அடைவாள் என்று ஆன்மிகத்தில் கூறப்படுகிறது. லட்சுமி தேவி கோபம் அடைந்தாள் வீட்டில் வறுமை நிலை ஏற்படும். எவ்வளவு தான் பணம் சம்பாதித்தாலும் அதனை சேமிக்க முடியாது.

**பணம் அல்லது தங்கம்:**

நீங்கள் பணம் அல்லது தங்கத்தை மற்றவர்களுக்கு பொழுது போன நேரத்தில் தானமாக கொடுப்பதன் மூலம், உங்கள் வீட்டில் செல்வ நிலையானது குறியும் என்று ஆன்மிகத்தில் கூறப்படுகிறது. அதனால் இந்த பொருட்களை தானமாக வழங்க கூடாது.

**அரிசி/ தானிய வகை:**

சூரியன் மறையும் நேரத்தில் யாராவது வந்து அரிசி அல்லது தானிய வகைகளில் ஏதவாது ஒன்றை கேட்டால் கொடுத்து விடாதீர்கள். ஏனென்றால் இதனை நீங்கள் கொடுப்பதன் மூலம் உங்களிடம் பணவரவு காணப்படாது.

**மசாலா பொருட்கள்:**

நீங்கள் மசாலா பொருட்களை மற்றவர்களுக்கு தானமாக



கொடுப்பதன் மூலம் உங்கள் வீட்டில் உள்ள அமைதி ஆனது சீர் குழைந்து போகிவிடும். அதனால் நீங்கள் மசாலா பொருட்களை மாலை நேரத்தில் தானமாக கொடுத்து விடாதீர்கள்.

**எண்ணெய் பொருட்கள்:**

நீங்கள் எண்ணெய் பொருட்களை மற்றவர்களுக்கு தானமாக கொடுப்பதன் மூலம், உங்களின் உறவுகளில் நல்லுறவு பராமரிக்கப்படாது. அதனால் உங்களிடம் யாரேனும் எண்ணெய் பொருட்கள் வந்து கேட்டால் அவர்களுக்கு கொடுப்பதை தவிர்த்து விடவும்.

**உப்பு:**

உப்பு ஆன்மிகத்தில் மகாலட்சுமியின் உருவமாக பார்க்கப்படுகிறது. அதனால் தான் இந்த குறையாமல் பார்க்க வேண்டும் என்று ஆன்மிகத்தில் கூறுவார்கள். அப்படி இருக்கையில் நீங்கள் உப்புவை பொழுது போல நேரத்தில் தானமாக கொடுப்பதன் மூலம் குடும்பத்தில் உள்ளவர்களிடம் சண்டை ஏற்படும். உறவுகளுக்கிடையே நல்லுறவை பராமரிக்கப்படாது.

**ஏன் மாலை நேரத்தில் கொடுக்க கூடாது:**

ஆன்மிகத்தில் மேல் கூறியுள்ள பொருட்களை தானமாக கொடுப்பதன் மூலம் வீட்டில் உள்ள செல்வ நிலையானது குறைய ஆரம்பிக்கும். மேலும் வீட்டில் உள்ள அமைதி நிலையானது குறைய ஆரம்பிக்கும். வீட்டில் உள்ள நேர்மறை ஆற்றல் நீங்கி எதிர்மறை ஆற்றல் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. இது போன்ற காரணங்களினால் தான் மாலை நேரத்தில் பணம், உப்பு, மசாலா பொருட்கள் போன்றவற்றை கொடுக்க கூடாது என்று கூறியுள் ளார்கள்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புகள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## நமது பத்திரிகை குழுமத்தின் ஆசிரியர் R. S. ROSHINE அவர்கள் வாக்களித்தார்



நமது பத்திரிகை குழுமத்தின் ஆசிரியர் R. S. ROSHINE அவர்கள் வாக்களித்து தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.

# மதத்தில் புரட்சி செய்த மகான் ஸ்ரீராமானுஜர்..!

மக்களை உய்விக்க வந்த மகான் ஸ்ரீராமானுஜருக்கு இது ஆயிரத்து ஒன்பதாவது வருட ஜெயந்தி. சித்திரை மாத திருவாதிரைதான் அவர் அவதரித்த புண்ணிய தினம். அதுதான் ஸ்ரீராமானுஜர் ஜெயந்தியாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அனைத்து பெருமாள் கோயில்களிலும் இந்நாள் விமரிசையாகக் கொண்டாடப் படும். வைணவ ஆச்சாரியார் ராமானுஜர் அவதரித்து 1,000 ஆண்டுகள் நிறைவுற்றதையொட்டி, தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தை அடுத்துள்ள முச்சிந்தல் பகுதியில் உள்ள சின்ன ஜீயர் ஆசிரமத்தில் 45 ஏக்கர் பரப்பளவில் மிக பிரமாண்டமாக பத்ம பீடத்தின் மீது 216 அடி உயரத்தில் ராமானுஜருக்கு பஞ்சலோக சிலை அமைக்கப்பட்டுள்ளது.

உடையவர்', 'பாஷ்யகாரர்', 'இளையாழ்வார்', 'எம்பெருமானார்' எனப் பல பெயர்களால் இவர் அழைக்கப்படுகிறார்.



ஸ்ரீ இராமானுஜர் அத்வைதத்திற்கு மாற்றாக விசிஷ்டாத்வைதம் (Qualified Non-dualism) எனப்படும் தத்துவத்தைப் பரப்பினார். இறைவன் நாராயணன் என்றும், ஆன்மாக்கள் அவனது உடலாகவும், பக்தி மூலம் மோட்சம் அடையலாம் என்றும் போதித்தார்.

ஆதிசேஷன் அவதாரமென்று போற்றப்படும் ஸ்ரீராமானுஜர், குருவிடம் மந்திர உபதேசம் பெற வேண்டி பலமுறை முயன்றார். ஸ்ரீரங்கத்தில் இருந்து திருக்கோஷ்டியூர்க்கு நடந்தே வந்தார். ஆனால் குருவின் பார்வை கிடைக்கவில்லை. ஸ்ரீராமானுஜரின் குரு திருக்கோஷ்டியூர் நம்பி.

அலைக்கழிப்புக்குப்பின், இந்த மந்திரத்தை யாருக்கும் சொல்லக்கூடாது என்ற நிபந்தனையுடன் எட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்தார் திருக்கோஷ்டியூர் நம்பி. மீறிச் சொன்னால், நரகத்துக்குச் செல்வாய் என எச்சரித்தார்.

மந்திரோபதேசம் முடிந்த கையுடன், விறுவிறுவென அருகில் உள்ள ஆலயத்துக்குச் சென்றார். உச்சிக்குச் சென்றவர், ஊர்மக்களை அழைத்தார். சத்தமாக, தனக்குக் கிடைத்த உபதேசத்தை எல்லோருக்கும் சொல்லிக் கொடுத்தார்.

உபதேசித்த அந்த மந்திரத்தை, தான் மட்டும் ஜபித்து வைகுண்டம் செல்வது முறையல்ல என்றெண்ணிய ராமானுஜர், குருவுக்குக் கொடுத்த வாக்குறுதியையும் மீறி, நரகம் சென்றாலும் பரவாயில்லை மக்கள் அனைவரும் வைகுந்தம் செல்லும் பாக்கியத்தை அடையவேண்டும் என்று, ஓம் நமோ நாராயணாய..! என்ற மந்திரத்தை உரத்த குரலில் கூறியருளினார்.

இதை அறிந்து ஆவேசமானார் நம்பி. குருவின் கட்டளையை மீறிவிட்டாய் கொடுத்த வாக்குறுதியை மதிக்காததால் நீ நரகம் செல்வாய் என்று சாபம் கொடுத்தார். ஆனால் ராமானுஜர் தன் இறுதிக்காலம் வரை வைணவத்திற்குத் தொண்டு செய்து பரமபதம் அடைந்தார். மதத்தில் புரட்சி செய்த மகான் இராமானுஜரை போற்றுவோம்.

**தொகுப்பு: பா. சீனிவாசன், வந்தவாசி.**

## எ. வ. வே. கம்பன் வாக்கு செலுத்தினார்






திருவண்ணாமலை சோ.கீழ்நாச்சிப்பட்டு அரசு ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தில் திரு. டாக்டர். எ. வ. வே. கம்பன் அவர்கள் வாக்குச்சாவடி மையத்தில் வாக்கு செலுத்தினார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் காவி நிற அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!

வேலூர், ஏப். 24-

வேலூர் மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான்பட்டறையில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார். இந்த ஸ்ரீ ராகவேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை, ஸ்ரீ சத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது.

இதனை ஸ்ரீ க. மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. வியாழக்கிழமையை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது. ஸ்ரீ ராகவேந்திரர் காவி நிற அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இதைத் தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது. பக்தர்கள் தரிசனம் செய்தனர்.



இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர். இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் ஆர். குண்ணத்தூர் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ வைகுந்த வாசல் பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## அதிமுக வேட்பாளர் பரிதா தனது வாக்கை பதிவு செய்தார்



குடியாத்தம் (தனி) தொகுதி அதிமுக வேட்பாளர் பரிதா தனது வாக்கை பதிவு செய்தார். வேலூர் மாவட்டம் குடியாத்தம் அதிமுக வேட்பாளர் பரிதா பேரணாம்பட்டு மசிகம் பகுதியில் உள்ள அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியில் தனது வாக்கை பதிவு செய்தார்.

## துரைமுருகன் வாக்களித்தார்



காட்பாடி காந்தி நகரில் காட்பாடி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் துரைமுருகன் மற்றும் வேலூர் தொகுதி எம். பி .யும், துரைமுருகனின் மகனுமான கதிர் ஆனந்த் மற்றும் அவர்களது குடும்பத்தினர் வாக்களித்தனர்.

## புனர்பூசம் நட்சத்திரத்தை முன்னிட்டு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி





**திருப்பத்தூர், ஏப்.24:**

திருப்பத்தூர் மாவட்டம் மிட்டூர் கன்யகா பரமேஸ்வரி கோவிலில் புனர்பூசம் நட்சத்திரத்தை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. அன்னதான திட்டத்தின் தொடர்ச்சியாக 12 வது மாதமாக வியாழக்கிழமை அன்னதானம் சுமார் 500 நபர்களுக்கு மேல் தக்காளி சாதம் வழங்கப்பட்டது. இந்த திட்டத்திற்கு சுமார் 19 பேர் ஒவ்வொரு மாதமும் நிரந்தர நன்கொடையாளர்களாக செய்துள்ளார்கள். அன்னதான திட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## ராமர் உற்சவ கொடியேற்றம்



திருப்புல்லாணி ராமர் உற்சவ கொடியேற்றம்

## சிறப்பு அலங்காரம்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.




## நந்தகுமார் வாக்கு செலுத்தினார்



அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் ஏ. பி. நந்தகுமார் கே. வி. குப்பம் சட்டமன்ற தொகுதி லத்தேரி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் தனது வாக்கினை செலுத்தினார்.

## திமுக வேட்பாளர் எஸ்.அம்பேத்குமார் வாக்களித்தார்



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த ஆராசூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திமுக வேட்பாளர் எஸ். அம்பேத்குமார் தனது வாக்கை பதிவு செய்தார்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

# சுற்றுலா: இரவு வானத்தை ரசிக்க ஆசையா? இதோ தென்னிந்தியாவின் 9 இடங்கள்...



விண்மீன் கூட்டங்களும், நிலவும் நிறைந்த வானத்தை பார்க்க ஆசையா? நகரத்தின் இரைச்சலில் இருந்து விடுபட்டு, இருண்ட, அமைதியான இடங்களில் இரவு வானத்தை ரசிக்க தென்னிந்தியா ஒரு சரியான இடம். இரவு வானத்தின் அற்புதங்களை கண்டு ரசிக்க தென்னிந்தியாவில் உள்ள இந்த இடங்கள் உங்களை நிச்சயம் ஆச்சரியப்படுத்தும்.

1. குடகு, கர்நாடகா:

குடகு, மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது. குறைந்த ஒளி மாசு காரணமாக இரவு வானத்தை தெளிவாகக் காண இது ஏற்ற இடமாகும். இங்கிருக்கும் 'தாடியாண்டமோல் சிகரம் (TADIANDAMOL PEAK)' விண்மீன்களைப் பார்த்து ரசிக்கும் சிறந்த அனுபவத்தைத் தரும். குடகுவின் இயற்கைச் சூழலும், ஓய்வு விடுதிகளும் உங்கள் பயணத்தை மறக்க முடியாததாக மாற்றும்.

2. கொடைக்கானல், தமிழ்நாடு:

'மலைகளின் இளவரசி' என அழைக்கப்படும் கொடைக்கானல், அதன் குளிர்ந்த காலநிலையால் இரவு வானம் பார்ப்பதற்கு ஏற்ற இடமாக உள்ளது. 'பில்லர் ராக்ஸ் (PILLAR ROCKS)' மற்றும் 'டால்பின்ஸ் நோஸ் (DOLPHIN'S NOSE)' போன்ற இடங்கள், கண்களை கவரும் வானக் காட்சிகளை வழங்குகின்றன.

3. மூணார், கேரளா:

மூணாறின் பனி படர்ந்த தேயிலைத் தோட்டங்கள், மழைக்காலத்திற்குப் பின் மேலும் அழகாக இருக்கும். இந்தச் சமயத்தில் வானம் தெளிவாக இருப்பதால், நட்சத்திரங்களை எண்ணுவதற்கும், விண்மீன் மண்டலங்களை ரசிப்பதற்கும் இது சிறந்த நேரமாகும்.

4. ஏலகிரி, தமிழ்நாடு:

ஏலகிரி, விண்மீன் ஆர்வலர்களுக்கு அதிகம் அறியப்படாத ரகசிய இடமாகும். இங்குள்ள உயரம் மற்றும் குறைந்த ஒளி மாசு, வானியல் நிகழ்வுகளைப் பார்க்க சிறந்த சூழலை உருவாக்குகின்றன. குளிர்ந்த காலநிலை, இரவு முழுவதும் வானத்தை ரசிக்க உதவுகிறது.

5. சிக்மகளூர், கர்நாடகா:

சிக்மகளூர், அதன் அமைதியான சூழலால் விண்மீன் பயணத்திற்கு ஏற்றது. கர்நாடகாவின் மிக உயரமான சிகரமான 'முல்லையனகிரி (MULLAYANAGIRI PEAK)', வானத்தைப் பார்ப்பதற்கு ஒரு சிறந்த தளமாகும். இங்குள்ள குளிர்ச்சியும், பசுமையான காட்சியும் அனுபவத்தை மேலும் இனிமையாக்கும்.

6. அகுமப், கர்நாடகா:

'தென்னிந்தியாவின் சிரபுஞ்சி' என அழைக்கப்படும் அகுமப், அதன் இயற்கை அழகுக்கு பெயர் பெற்றது. மழைக்காலத்திற்குப் பின், இங்குள்ள தெளிவான வானம், விண்மீன்களைப் பார்ப்பதற்கு உகந்த காலமாகும்.

7. பைதல்மலா, கேரளா:

கண்ணூர் மாவட்டத்தில் உள்ள பைதல்மலா, நகரத்தின் விளக்குகளில் இருந்து விலகி, ஒதுக்குப்புறமாக அமைந்துள்ளதால், நட்சத்திரங்களை ரசிப்பதற்கு ஏற்ற இடமாக உள்ளது.

8. வாகமன், கேரளா:

வாகமன், இடுக்கி மற்றும் கோட்டயம் மாவட்டங்களில் அமைந்துள்ள ஒரு பசுமையான நிலப்பரப்பாகும். மழைக்காலத்தில் இங்குள்ள பள்ளத்தாக்குகள் அழகாக மாறுவதால், விண்மீன் காட்சிகளுக்கு ஒரு சரியான இடமாக அமைகின்றது.

9. நீலகிரி மலைகள், தமிழ்நாடு:

ஊட்டி மற்றும் குன்னூர் போன்ற நீலகிரி மலைகள், அதிக உயரம் மற்றும் தெளிவான வானம் கொண்டவை. குறைந்த ஒளி மாசு காரணமாக இங்குள்ள வானியல் நிகழ்வுகளை தெளிவாகக் காண முடியும்.

இரவு வானம் பார்ப்பதற்கான சில டிப்ஸ்:

சரியான நேரம்: அக்டோபர் முதல் மார்ச் வரையிலான மாதங்களில் தெளிவான வானம் இருக்கும். அதுவே இரவு வானத்தை ரசிக்க ஏற்ற நேரமாகும்.

சாதனங்கள்: வெறும் கண்களால் பார்ப்பது கூட ஒரு நல்ல அனுபவத்தைத் தரும். இருப்பினும், ஒரு நல்ல பைனாகுலர் அல்லது தொலைநோக்கி உங்கள் அனுபவத்தை மேம்படுத்தும்.

பாதுகாப்பு: எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் இருக்க, ஒரு சிவப்பு ஃபில்டர் கொண்ட டார்ச் லைட்டை உடன் எடுத்து செல்லவும்.

வானிலை: மேகமூட்டமான இரவுகளைத் தவிர்க்க, எப்போதும் உள்ளூர் வானிலை முன்னறிவிப்பைச் சரிபார்க்கவும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### ரயில்வே சுற்றுலாத்துறையில் வேலை: யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்?

இந்திய ரயில்வேக்கு சொந்தமான ஐஆர்சிடிசி உணவகங்களில் Hospitality Monitors பணிக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் வரும் 25 ஆம் தேதி சென்னையில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டு பயன்பெறவும்.

வேலைவாய்ப்பு அறிவிப்பு எண்.: 2026/IRCTC/SZ/HRD/Rectt./Hospitality Monitor

பணி: Hospitality Monitors

காலியிடங்கள்: 84

வயது வரம்பு : 1.4.2026 தேதியின்படி 27-க்குள் இருக்க வேண்டும். எஸ்சி, எஸ்டி பிரிவினர்களுக்கு 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினர்களுக்கு 3 ஆண்டுகளும், மாற்றுத்திறனாளி பிரிவினர்களுக்கு 10 ஆண்டுகளும் வயதுவரம்பில் சலுகை வழங்கப்படும்.

சம்பளம் : மாதம் ரூ.30,000

தகுதி: Hospitality & Hotel Management / Culinery Arts / Catering Science / Tourism/Hotel Administration போன்ற பாடப்பிரிவுகள் ஏதாவதொன்றில் B.Sc., MBA முடித்திருக்க வேண்டும். இந்தி மற்றும் ஆங்கிலத்தில் பேசவும், எழுதவும் தெரிந்திருக்க வேண்டும். வட்டார மொழிகளான தமிழ், கன்னடம், மலையாளம் தெரிந்திருப்பது விரும்பத்தக்கது.

தேர்வு செய்யப்படும் முறை: நேர்முகத் தேர்வு மற்றும் மருத்துவத் தகுதியின் அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பிக்கும் முறை: www.irctc.com என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து, அதைப் பூர்த்தி செய்து, அதனுடன் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்கள் மற்றும் நகல்கள் அதனுடம் சமீபத்திய 3 பாஸ்போர்ட் அளவு புகைப்படங்களையும் இணைத்து நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகத்தேர்வு நடைபெறும் தேதி மற்றும் இடம்: தேதி: 25.4.2026

## மார்பிங் செய்து ஆபாச படங்களை வெளியிடுவதாக மிரட்டி இளம்பெண்ணிடம் ரூ.13 லட்சம் மோசடி - வாலிபர் கைது



சென்னை, ஏப். 24:

திண்டுக்கல் மாவட்டம் வேடச்சந்தூரை சேர்ந்தவர் வினோத் (27 வயது). இவருக்கு சென்னை நங்கநல்லூர் ரகுபதி நகர் பகுதியை சேர்ந்த 24 வயதுடைய பெண்ணுடன் சில ஆண்டுகளுக்கு முன் சமூக வலைதளம் மூலம் பழக்கம் ஏற்பட்டது. பின்னர் இருவரும் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளனர்.

இந்த நிலையில், வினோத்தின் வங்கி கணக்கின் மூலம் இளம்பெண் தனது தொழில் தொடர்பான பரிவர்த்தனைகளை செய்து வந்ததாக கூறப்படுகிறது. அப்போது அவர் பல தவணைகளாக ரூ.13 லட்சம் வரை வினோத்துக்கு பணம் வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் இளம்பெண் பரங்கிமலை போலீஸ் நிலையத்தில் அளித்த புகார் மனுவில், ஆன்லைன் மூலம் ஏற்பட்ட பழக்கத்தை பயன்படுத்தி, வினோத் தன்னிடம் பண மோசடி செய்ததாகவும், தன்னை மிரட்டி பாலியல் பலாத்காரம் செய்ததுடன் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டால் என்னுடைய புகைப்படங்களை ஆபாசமாக மார்பிங் செய்து சமூக வலைதளத்தில் வெளியிடுவேன் என அவர் மிரட்டுவதாகவும் தெரிவித்து இருந்தார்.

இது தொடர்பாக பரங்கிமலை மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து வினோத்தை கைது செய்தனர்.

## திருவண்ணாமலையில் சிறுமி கூட்டு பாலியல் வன்கொடுமை: தமிழக டிஜிபி 5 நாளில் அறிக்கை சமர்ப்பிக்க தேசிய மகளிர் ஆணையம் உத்தரவு

சென்னை, ஏப்.24:

தமிழகத்தின் திருவண்ணாமலை மாவட்டத்தில் 15 வயது சிறுமி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை 5 நாள்களுக்குள் தாக்கல் செய்ய தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநருக்கு (டிஜிபி) தேசிய மகளிர் ஆணையம் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து தேசிய மகளிர் ஆணையத் தலைவர் விஜயா ரஹாத்கர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டின் திருவண்ணாமலை மாவட்டம் செய்யாரில் சிறுமியை கொடூரமாக பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் குறித்து தேசிய மகளிர் ஆணையம் தாமாக முன்வந்து கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. 15 வயது சிறுமி மீதான மிருகத்தனமான தாக்குதல் இளம் சிறுமிகளின் பாதுகாப்பு குறித்து கடுமையான கவலைகளை எழுப்பியுள்ளது. மேலும், இதுபோன்ற கொடூரமான குற்றங்களுக்கு எதிராக வலுவான தடுப்பு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளின் அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகிறது. இந்த காட்டுமிராண்டித்தனமான செயலை ஆணையம் கடுமையாக கண்டிக்கிறது. சிறுமிகளுக்கு எதிரான வன்முறை மனித உரிமைகளின் ஒட்டுமொத்த மீறலாகும்.

தப்பிப்பிழைத்தவர் மீது ஆழ்ந்த உடல், உணர்ச்சி மற்றும் உளவியல் வடுக்களை விட்டுச் செல்கிறது. இத்தகைய சம்பவங்களுக்கு உடனடி பொறுப்புக்கூறல் மற்றும் கடுமையான சட்ட நடவடிக்கை தேவைப்படுகிறது என அந்த செய்திக்குறிப்பில் ஆணையத் தலைவர் விஜயா ரஹாத்கர் கூறியுள்ளார்.

மேலும், பாரதிய நியாயா சன்ஹிதா மற்றும் போக்சோ சட்டத்தின் கீழ் எஃப். ஐ. ஆர். விரைவாக பதிவு செய்யப்படுவதையும், குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரையும் உடனடியாக கைது செய்வதையும், நியாயமான மற்றும் காலக்கெடுவுக்குள் விசாரணையையும், விரிவான மருத்துவம், ஆலோசனை, மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பு ஆதரவையும் உறுதி செய்யுமாறு தமிழ்நாடு டிஜிபிக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த விவகாரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விரிவான அறிக்கை 5 நாள்களுக்குள் சமர்ப்பிக்குமாறும் டிஜிபி}ஐ மகளிர் ஆணையத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்

## நாகை மீனவர் மீது இலங்கை கடற்படை தாக்குதல்: மீன்பிடி வலைகளையும் வெட்டி கடலில் வீசினர்

நாகப்பட்டினம், ஏப்.24:

நாகப்பட்டினம்: கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கி, மீன்பிடி வலைகளை வெட்டி கடலில் வீசினர்.

நாகை மாவட்டம் வானவன் மகாதேவியை சேர்ந்த காளிமுத்து மகன் செல்வகுமார் என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் அவருடன், கதிர்வேல், ராஜி, முருகபாண்டி ஆகிய மீனவர்கள் நேற்று முன்தினம் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

நேற்று முன்தினம் இரவு கோடியக்கரைக்கு தென் கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர், மீனவர்களை தாங்கள் வைத்திருந்த கம்பால் தாக்கியதுடன் மீனவர்களின் வலைகளை வெட்டி கடலில் வீசி எறிந்தனர். இதனால் அதிர்ச்சியடைந்த மீனவர்கள் நேற்று கரை வந்து சேர்ந்தனர்.

பின்னர் அவர்கள் நாகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த சம்பவம் குறித்து வேதாரண்யம் கடலோர காவல் குழும போலீஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

## நாங்குநேரியில் பெரும்பத்து கிராமத்தில் தேர்தல் புறக்கணிப்பு




நாங்குநேரி, ஏப்.24:

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது. நெல்லை மாவட்டம் முழுவதும் 1,680 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவையனைத்திலும் மக்கள் ஆர்வமுடன் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது வாக்கினை பதிவு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், நெல்லை மாவட்டம் நாங்குநேரி பெரும்பத்து கிராமத்தில் உள்ள 290-வது வாக்குச்சாவடியில் 969 வாக்காளர்கள் அனைவரும் ஓட்டுப்போட செல்லாமல் தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். 4 மணி நேரமாகியும் மக்கள் வாக்களிக்க செல்லாமல் வீடுகளிலேயே முடங்கி உள்ளனர். இதனால் வாக்குச்சாவடி வெறிச்சோடி காணப்படுகிறது.

கடந்த மார்ச் 2-ம் தேதி நடைபெற்ற இரட்டை கொலை சம்பவத்தில் நீதி கிடைக்கவில்லை எனக்கூறி தேர்தலை புறக்கணித்துள்ளனர்.

## சென்னையில் 2-வது 'ஏசி' மின்சார ரயில் சேவை: மக்கள் பயன்பாட்டுக்கு விரைவில் வருகிறது




சென்னை, ஏப்.24:

சென்னையில் 2-வது ஏசி மின்சார ரயில் சேவையை விரைவில் தொடங்க ரயில்வே நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. இந்த ரயிலை சென்ட்ரல் - அரக்கோணம் மார்க்கத்தில் இயக்குவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்படுகிறது.

சென்னை ஐ.சி.எப். ஆலையில், தயாரிக்கப்பட்ட 12 பெட்டிகள் கொண்ட முதல் 'ஏசி' மின்சார ரயில் கடந்த ஆண்டு ஏப்.19-ம் தேதி தொடங்கப்பட்டது. இந்த ரயில் சென்னை கடற்கரை - செங்கல்பட்டு மார்க்கத்தில் இயக்கப்படுகிறது. இந்த ரயிலுக்கு பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

இதற்கிடையில், சென்னை சென்ட்ரல் - அரக்கோணம், கடற்கரை - செங்கல்பட்டு ஆகிய இரு மார்க்கங்களில் 'பீக் ஹவர்சில்' கூடுதல் ஏசி மின்சார ரயில்கள் இயக்க பயணிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த கோரிக்கையின் பேரில், கூடுதல் மின்சார ரயில் இயக்க ரயில்வே வாரியத்துக்கு தெற்கு ரயில்வே பரிந்துரை செய்திருந்தது. ரயில்வே வாரியமும் தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டத்துக்கு ஏசி மின்சார ரயில் தயாரித்து வழங்க, ஐ.சி.எஃப்-இடம் கேட்டிருந்தது.

இதற்கிடையில், சென்னை சென்ட்ரல் - அரக்கோணம், கடற்கரை - செங்கல்பட்டு ஆகிய இரு மார்க்கங்களில் 'பீக் ஹவர்சில்' கூடுதல் ஏசி மின்சார ரயில்கள் இயக்க பயணிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த கோரிக்கையின் பேரில், கூடுதல் மின்சார ரயில் இயக்க ரயில்வே வாரியத்துக்கு தெற்கு ரயில்வே பரிந்துரை செய்திருந்தது. ரயில்வே வாரியமும் தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டத்துக்கு ஏசி மின்சார ரயில் தயாரித்து வழங்க, ஐ.சி.எஃப்-இடம் கேட்டிருந்தது.

இதையடுத்து, 2-வது ஏசி மின்சார ரயில் தயாரிப்பு பணி சென்னை ஐ.சி.எஃப் ஆலையில் கடந்த ஆண்டு தொடங்கி, நடைபெற்று வந்தது. இப்பணி இரண்டு மாதம் முன்பு நிறைவடைந்தது. இதையடுத்து, இந்த ஏசி மின்சார ரயிலை தெற்கு ரயில்வேயின் சென்னை ரயில்வே கோட்டத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த ரயில், தற்போது அண்ணனூர் ரயில்வே யார்டில் நிறுத்தி, பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறது. இந்த ரயில் சென்ட்ரல் - அரக்கோணம் மார்க்கத்தில் இயக்கியும் சோதிக்கப்படுகிறது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# மின்தூக்கிக்குள் பயணி சிக்கினால் எச்சரிக்கை எழுப்பும் ஏஐ அமைப்பு- நமோ பாரத் நிலையங்களில் விரைவில் அறிமுகம்

**புதுடெல்லி, ஏப்.24:**
நமோ பாரத் நிலையங்களில் உள்ள மின்தூக்கிகளில் பயணிகள் சிக்கிக்கொண்டால் உடனடியாக தகவல் தெரிவிக்கும் எச்சரிக்கை அமைப்புகள் பொருத்தப்பட உள்ளன.



தேசிய தலைநகர் வலய போக்குவரத்து கழகம் (என்சிஆர்டிசி) உருவாக்கிய இந்த அமைப்பு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் கொண்ட கேமரா மூலம் மின்தூக்கியில் உள்ள நிலவரத்தை ஆராய்ந்து ஆபத்துகளை அடையாளம் காணும். எதிர்பாராத சம்பவம் குறித்து 60 விநாடிகளுக்குள் தகவல் தெரிவித்து மீட்புப் பணியை துரிதப்படுத்தி மின்தூக்கியில் சிக்கிய பயணிகளை மீட்க முடியும் என ஓர் அதிகாரி பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அந்த அதிகாரி கூறியதாவது:

மின்தூக்கியில் ஒரு பயணி சிக்கிக்கொண்டால், ஒரு நிமிஷத்துக்குள் அந்த அமைப்பு பிரச்னையைக் கண்டறிந்து நமோ பாரத் கட்டுப்பாட்டு மையத்துக்கு தகவல் தெரிவிக்கும்.

மின்தூக்கி உள்ள பகுதியில் எச்சரிக்கை மணி ஒலிக்க தொடங்கும் என்பதால், நிலைய பணியாளர்கள் உடனடியாகச் செயல்பட்டு மீட்புப் பணியைத் தொடங்க இயலும்.

அடுத்த 60 விநாடிக்குள் பயணி மீட்கப்படாத நிலையில், எச்சரிக்கை ஒலி தானியங்கி முறையில் அதிகரித்து கவனத்தை அதிகரிக்கும்.

முன்பு இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்ந்தால், பயணிகள் தாங்களாகவே எச்சரிக்கை பொத்தானை அழுத்த வேண்டியிருக்கும் அல்லது தொலைபேசி அமைப்பு மூலம் பணியாளர்களிடம் தகவல் தெரிவிக்க வேண்டியிருக்கும்.

புதிய முறையில் பிரச்னை தானியங்கி முறையில் கண்டறியப்பட்டு அதற்கு தீர்வு காணப்படும் வரை எச்சரிக்கை அமைப்பு தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கும் என்றார் அந்த அதிகாரி.

இந்த அமைப்பை மெட்ரோ நிலையங்கள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள், மருத்துவமனைகள், வணிக வளாகங்கள் ஆகியவற்றில் பயன்படுத்த முடியும் என என்சிஆர்டிசி தெரிவித்துள்ளது.

# ஸ்க்ரைம் கார்னர்

## வீட்டின் மாடியில் கஞ்சா செடிகள் வளர்த்த பொறியாளர் கைது

**ஐதராபாத், ஏப்.24:**
தெலுங்கான மாநிலம் ஐதராபாத் அருகே சசிதர் என்கிற நபர் ஒரு மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். கஞ்சாவுக்கு அடிமையானதாக கூறப்பட்டதை அடுத்து அவர் வேலையை விட்டு விலகினார் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் தனது வீட்டின் மொட்டை மாடியில் கஞ்சா செடிகளை வளர்த்து வந்ததாக சசிதரை மதுவிலக்கு மற்றும் கலால் துறை அதிகாரிகள் கைது செய்தனர். அவரிடமிருந்து 17 கஞ்சா செடிகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதுகுறித்து, கலால் மற்றும் மதுவிலக்குத் துறையின் உதவி ஆணையர் ஆர்.கிஷன் கூறுகையில் "பணியில் இருந்தபோது, சசிதர் தனது முழு சம்பளத்தையும் கஞ்சாவுக்காகச் செலவழித்தார். தற்போது, கஞ்சா வாங்குவதற்கு வழியில்லாததால், அவர் சில விதைகளை வாங்கி, தனது வீட்டின் மொட்டை மாடியில் தொட்டிகளில் கஞ்சா செடிகளை வளர்க்கத் தொடங்கியுள்ளார்," என்று கூறினார்.

## சுற்றுலா வந்த அமெரிக்க பெண் பாலியல் பலாத்காரம்-கர்நாடகாவில் அதிர்ச்சி

அமெரிக்க பெண் ஒருவர் இந்த சுற்றுலா தலங்களை பார்ப்பதற்காக கர்நாடகா வந்துள்ளார். அவர் கர்நாடக மாநிலம் குடகு மாவட்டத்தின் குட்டா கிராமத்தில் உள்ள ஒரு தங்கும் விடுதியில் தங்கியிருந்தார். இந்த நிலையில் அந்த விடுதியில் பணிபுரிந்து வரும் ஜார்கண்ட் மாநிலத்தை சேர்ந்த வருஜேஷ் குமார் என்பவர் அந்த விடுதியில் வைத்து அமெரிக்க பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது. தான் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதை அடுத்து அந்த பெண் குடகு மாவட்ட போலீசில் புகார் செய்தார். அதன் அடிப்படையில் காவல்துறை அந்த விடுதி உரிமையாளரையும், அங்கு பணிபுரிந்த ஜார்கண்டை சேர்ந்த ஊழியர் வருஜேஷ் குமார் என்பவரையும் கைது செய்தனர். இச்சம்பவத்தை மூடிமறைக்க முயன்றதாக கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில், அந்த விடுதி உரிமையாளர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் 3 நாட்களுக்கு வை-ஃபை சேவைகளை துண்டித்ததாகவும், இதனால் பாதிக்கப்பட்ட பெண் அந்த காலகட்டத்தில் யாரையும் தொடர்புகொள்ள முடியாமல் தடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

குற்றம் சாட்டப்பட்ட வருஜேஷ் குமார் மற்றும் விடுதி உரிமையாளர் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு மே 3-ஆம் தேதி வரை நீதிமன்றக் காவலில் ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து உயர் அதிகாரிகளின் விசாரணை நடைபெற்று வருகிறது என தெரிவித்தார்.

## டாஸ்மாக் கடையில் துளையிட்டு ரூ.1 லட்சம் மதுபாட்டில் திருட்டு!

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே உள்ள பரமேஸ்வரநல்லூர் கிராமத்தில் டாஸ்மாக் கடை அமைந்துள்ளது. இங்கு கடந்த 16ந்தேதி இரவு வழக்கம் போல் வியாபாரம் முடிந்ததும் ஊழியர்கள் கடையை பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்றனர்.

மறுநாள் வந்து கடையை திறந்தபோது பின்பக்க சுவரில் துளையிடப்பட்டு இருந்ததைக்கண்டு அதிர்ச்சி அடைந்தனர். மேலும் கடையில் இருந்த 353 மதுபாட்டில்களை காணவில்லை. யாரோ மர்ம நபர்கள் நள்ளிரவில் கடையின் பின்பக்க சுவரில் துளையிட்டு உள்ளே புகுந்து ரூ.1,02,480 மதிப்புள்ள மது பாட்டில்களை திருடி சென்றது தெரியவந்தது.

இதுகுறித்த புகாரின் பேரில் சிதம்பரம் தாலுகா போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். விசாரணையில் அவர்கள் தில்லை நாயகபுரத்தை சேர்ந்த செல்வமணி மகன் தமிழ்செல்வன் (வயது 31), சிதம்பரம் ஓமக்குளம் பகுதியை சேர்ந்த ராமசாமி மகன் சீனிவாசன்(38), காட்டுமன்னார்கோவில் அருகே கூடுவெளிசாவடியை சேர்ந்த ஆறுமுகம் மகன் செல்வம் (35) ஆகியோர் என்பது தெரியவந்தது.

இதையடுத்து அவர்கள் 3 பேரையும் நேற்று கைது செய்த போலீசார், அவர்களிடம் இருந்த 353 மதுபாட்டில்கள் மற்றும் 2 மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

# விளையாட்டு செய்திகள்

## டேபிள் டென்னிஸில் தமிழக அணி சாம்பியன்

**டேராடூன், ஏப்.24:**
மாநிலங்களுக்கு இடையிலான யுடிடி ஜூனியர் மற்றும் யூத் தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் டேராடூனில் நடைபெற்று வருகிறது. இதில் யு-19 அணிகள் பிரிவில் ஆடவர் இறுதிப் போட்டியில் தமிழ்நாடு 3-1 என்ற கணக்கில் மகாராஷ்டிராவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது.

முதல் ஆட்டத்தில் தமிழ்நாடு அணியின் பாலமுருகன் 11-9, 13-11, 8-11, 6-11, 9-11 என்ற செட் கணக்கில் மகாராஷ்டிராவின் குஷால் சோப்டாவிடம் தோல்வி அடைந்தார். இதைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் பி.பி.அபிநந்த் 11-5, 11-3, 7-11, 11-6 என்ற செட் கணக்கில் நீல் முல்யேவை தோற்கடித்தார். தொடர்ந்து தமிழ்நாட்டின் எஸ்.கே.மேகன் 11-4, 12-10, 11-7 என்ற செட் கணக்கல் இஷான் கந்தேகரை வீழ்த்தினார். இதன் பின்னர் மாற்று ஒற்றையர் ஆட்டத்தில் பி.பி.அபிநந்த் 11-6, 11-6, 11-8 என்ற செட் கணக்கில் குஷால் சோப்டாவை தோற்கடித்தார்.

## வங்கதேச அணிக்கு 10 சதவீதம் அபராதம்

**டாக்கா, ஏப். 24:**
நியூஸிலாந்து கிரிக்கெட் அணி வங்கதேசத்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 2-வது ஒருநாள் போட்டி கடந்த 20-ம் தேதி டாக்காவில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் வங்கதேச அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

இந்நிலையில் இந்த ஆட்டத்தின் போது வங்கதேச அணி பந்துவீசு கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டதாக களநடுவர்கள் புகார் தெரிவித்தனர். நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் 2 ஓவர்களை வங்கதேச அணி குறைவாக வீசியிருந்தது. இந்நிலையில் இந்த விவகாரத்தில் ஒட்டுமொத்த வங்கதேச அணி வீரர்களுக்கும் போட்டியின் ஊதியத்தில் 10 சதவீதத்தை ஐசிசி அபராதமாக விதித்துள்ளது.

## மாட்ரிட் ஓபன் டென்னிஸ்: மரின் சிலிச், ஈலா வெற்றி

**மாட்ரிட், ஏப்.24:**
பிரெஞ்சு ஓபனுக்கு முன்னோட்டமாக களிமண் தரையில் நடக்கும் மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நேற்று தொடங்கியது. ஆண்கள் ஒற்றையர் முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் குரோஷியாவின் மரின் சிலிச் 4-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ஜிசோவ் பெர்க்சை (பெல்ஜியம்) வீழ்த்தினார். மற்ற ஆட்டங்களில் டாமி ஜும்ஹர் (போஸ்னியா) 6-2, 6-4 என்ற நேர் செட்டில் மேட்டியா பெலுக்சியையும் (இத்தாலி), டினோ பிரிஸ்மிக் (குரோஷியா) 6-3, 6-4 என்ற செட் கணக்கில் இத்தாலியின் பெரேட் டினியையும், ஜன் லெனர்ட் ஸ்ரப் (ஜெர்மனி) 7-6(3), 6-0 என்ற செட் கணக்கில் அலெக்சாண்டர் முல்லரையும் (பிரான்ஸ்) தோற்கடித்து 2-வது சுற்றை எட்டினர்.

பெண்கள் பிரிவின் முதலாவது சுற்றில் ஜினெப் சோன்மெஸ் (துருக்கி) 7-5, 6-2 என்ற நேர் செட் கணக்கில் கார்லோட்டா மார்ட்டினஸ் சிரெசை (ஸ்பெயின்) வீழ்த்தி 2-வது சுற்றுக்கு முன்னேறினார். அமெரிக்காவின் அலிசியா பார்க்ஸ் 6-3, 6-2 என்ற நேர் செட்டில் காக்சியாரெட்டோவை (இத்தாலி) வென்றார். அலெக்சாண்ட்ரா ஈலா (பிலிப்பைன்ஸ்) பாவ்லிசென்கோவாவை (ரஷியா) விரட்டினார்.

# இணைய விளையாட்டு விதிகள் மே.1 முதல் அமல்: மின்னணு அமைச்சகம் அறிவிப்பு

**புதுடெல்லி, ஏப்.24:**
இணைய விளையாட்டு ஊக்குவிப்பு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம் மே 1-ஆம் தேதி முதல் அமலாவதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் தெரிவித்தது.



இதற்கான விதிகளை அமைச்சகம் புதன்கிழமை வெளியிட்டது.

இதுதொடர்பாக தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலர் எஸ்.கிருஷ்ணன் கூறியதாவது: ஏற்கெனவே தடை விதிக்கப்பட்ட இணையவழி சூதாட்ட விளையாட்டுகள் தவிர பிற இணைய விளையாட்டுகளை கட்டாயம் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இந்த விளையாட்டுகளை விருப்பத்தின் அடிப்படையில் மட்டும் பதிவு செய்யும் விதமாக விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. ஒரு விளையாட்டை இணைய சூதாட்ட விளையாட்டு அல்லது இணைய சமூக விளையாட்டு என விண்ணப்பிக்க நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை.

பயனர் அம்சங்கள் குறித்து விதிகளில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இணைய சூதாட்ட விளையாட்டுகளுக்கு இந்தச் சட்டம் தடை விதிக்கும் அதேவேளையில் மின்னணு விளையாட்டுகள் மற்றும் இணைய சமூக விளையாட்டுகளை ஊக்குவிக்கிறது என்றார்.

கடந்த 2025-ஆம் ஆண்டு அக்டோபரில் இந்தச் சட்டத்தின் மீது மத்திய மின்னணு அமைச்சகம் கருத்து கேட்ட நிலையில் தற்போது இணைய விளையாட்டு ஊக்குவிப்பு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டத்துக்கான விதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை மே 1-ஆம் தேதி முதல் அமலாகின்றன.

# கடன் வலையில் இளைய தலைமுறை தவிப்பு

**புதுடெல்லி, ஏப்.24:**
'ஜென் இசட்' தலைமுறை என்று சமீப காலங்களில் அழைக்கப்படும் இளம் தலைமுறையினர், சேமிப்பை விட கடன் வாங்குவதில்தான் ஆர்வம் காட்டுகிறார்கள். அதை வாழ்க்கை முறை கருவியாக ஏற்றுக் கொண்டு இருப்பது தெரியவந்துள்ளது.




இது தொடர்பாக பிரபல கிரெடிட் ப்யூரோவான சி.ஆர்.ஐ.எப்.ஐ.மார்க் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவின் மொத்த கடன் வாங்குபவர்களில் நான்கில் ஒரு பங்கினர், அதாவது 23 சதவீதம் பேர் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் ஆவர். கடந்த 2021-ம் ஆண்டில் 4 கோடியாக இருந்த இவர்களின் எண்ணிக்கை, 2025-ல் 6.6 கோடியாக உயர்ந்துள்ளது. இது கடந்த 5 ஆண்டுகளில் 65 சதவீத வளர்ச்சியாகும்.

அதேபோல், புதிய கடன்களைப் பெறுவதில் இளைஞர்களே முன்னிலையில் உள்ளனர். 2025-ம் ஆண்டில் பெறப்பட்ட புதிய கடன்களில் 53 சதவீதம் 30 வயதிற்குட்பட்டவர்களால் வாங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இளைஞர்கள் வாங்கும் கடன்களில் பெரும்பாலானவை எவ்வித அடமானமும் இல்லாதவை. அவர்கள் வாங்கும் கடன்களில் 29.3 சதவீதம் தனிநபர் கடன், 23.2 சதவீதம் நுகர்வோர் பொருட்கள் கடன், 15.5 சதவீதம் கிரெடிட் கடன் ஆகியவற்றை வாங்கி உள்ளனர்.

ஆனால் எதிர்கால சொத்தாகக் கருதப்படும் வீட்டுக் கடன் வாங்குபவர்களின் எண்ணிக்கை இளைஞர்களிடையே வெறும் 0.9 சதவீதமாக மட்டுமே உள்ளது.

2021-ம் ஆண்டு முதல் 2025-ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், இளைஞர்களின் மொத்த கடன் மதிப்பு 102 சதவீதம் அதிகரித்துள்ளது. இது மூத்த தலைமுறையினரின் கடன் வளர்ச்சியை 98 சதவீதம் விட அதிகமாகும். குறிப்பாக சிறிய அளவிலான கடன்களைப் பலமுறை வாங்கும் பழக்கம் இளைஞர்களிடம் அதிகரித்துள்ளது. ஒரு இளைஞரின் சராசரி கடன் தொகை ரூ.2.7 லட்சமாக இருக்கும் வேளையில், அவர் சராசரியாக 2.4 முறை கடன் பெறுகிறார். இருப்பினும், இந்தத் தலைமுறையினர் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் அதிக சிரமத்தை எதிர்கொள்கின்றனர். 31 முதல் 90 நாட்கள் வரை தவணை செலுத்தத் தவறுபவர்களின் விகிதம் இளைஞர்களிடையே 2.7 சதவீதமாக உள்ளது. இது மூத்த கடனாளிகளை விட 2.2 சதவீதம் அதிகம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வணிகச் செய்திகள்

## இனி ஓடிபி தேவையில்லை: ஆட்டோ டெபிட் வரம்பை ரூ.15 ஆயிரமாக உயர்த்தியது ஆர்.பி.ஐ

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளை எளிதாக்கும் வகையில், இந்திய ரிசர்வ் வங்கி தொடர் கட்டணங்களுக்கான புதிய விதிமுறைகளை வெளியிட்டுள்ளது. அதாவது, இனி சந்தாக்கள், மின்சாரக் கட்டணம் மற்றும் மாதத் தவணைகளுக்கு தானாகவே டெபிட் செய்யும் ஆப்ஷன் கொடுத்திருந்தால், ஓடிபி பதிவிடாமலேயே வங்கி கணக்கில் இருந்து தொகை பிடித்தம் செய்யப்படும்.

ரூ.15,000 வரையிலான தொகைக்கு மட்டுமே இந்த விதிமுறை பொருந்தும். முதல்முறை இந்த சேவையை பதிவு செய்யும் போது மட்டும் கூடுதல் பாதுகாப்புச் சரிபார்ப்பு செய்தால் போதும். அதன் பிறகு குறிப்பிட்ட தொகை தானாகவே கழிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.15,000-க்கு அதிகமான தொகையை செலுத்தும்போது வழக்கம்போல ஓடிபி அல்லது கூடுதல் பாதுகாப்புச் சரிபார்ப்பு செய்யப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. மாதம் தோறும் செலுத்தப்படும் கட்டணங்கள் தற்போது உள்ள நடைமுறையால் சில நேரங்களில் தோல்வி அடைகின்றன. ஓடிபி மிகவும் தாமதமாக வந்து சேருதல், செல்போன்களுக்கு சில நேரங்களில் உரிய சிக்னல்கள் கிடைக்காமல் போவது, பயனர்கள் ஓய்வில் இருக்கும் நேரம் போன்ற காரணங்களால் ஓடிபியை பதிவிட முடியாமல் போகிறது. இதனால் சப்ஸ்கிரிப்ஷனுக்கான கட்டணங்கள் செலுத்துவதில் இடையூறு ஏற்படும். ஆனால் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள ஓடிபி அல்லாத நடைமுறையால் இந்த சிரமங்கள் தவிர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# டிஜிட்டல் கைது மோசடியில் இருந்து மகனை காத்த 81 வயது தந்தை

**புனே, ஏப்.24:**
இப்போதெல்லாம் தினமும் டிஜிட்டல் கைது மோசடியாளர்களிடம் சிக்கி லட்சக்கணக்கான ரூபாயை சாமானிய மக்கள் இழப்பது குறித்த சம்பவங்கள் அதிகளவில் பதிவாகி வருகிறது.

இந்தச்சூழலில் இணையவழி மோசடியாளர்கள் ரூ.12 லட்சம் கேட்டிருந்த நிலையில் தனது மகனையும், மருமகளையும் புனேவை சேர்ந்த முதியவர் ஒருவர் காத்துள்ளார். இது குறித்து போலீஸில் அந்த குடும்பம் புகார் அளிக்கவே அது பொதுவெளியில் கவனம் பெற்றுள்ளது.

அந்த முதியவரின் மகன், பொறியாளராக பணியாற்றி வருகிறார். அவருக்கு தெரியாத எண்ணில் இருந்து கடந்த 19-ம் தேதி வாட்ஸ்அப் தளத்தில் தொலைபேசி அழைப்பு வந்துள்ளது. அதில் பேசிய நபர் தன்னை மும்பை காவல் துறையின் சைபர் க்ரைம் பிரிவு அதிகாரி என அறிமுகம் செய்து கொண்டுள்ளார். 'உங்களுக்கு வந்துள்ள பார்சல் ஒன்றில் 5 பாஸ்போர்ட் மற்றும் போதைப்பொருள் உள்ளது. உங்களிடம் மேல் அதிகாரி உயர்மட்ட விசாரணை மேற்கொள்வார்' என அதிகாரி போல பேசிய மோசடியாளர் கூறியுள்ளார். அதோடு அந்த முதியவரின் மகன் மற்றும் மருமகளின் செல்போனில் 'சிக்னல்' மெசேஜிங் செயலியை இன்ஸ்டால் செய்யுமாறு அவர் கூறியுள்ளார். அதன் பின்னர் வீடியோ அழைப்பில் போலீஸ் சீருடையில் தம்பதியரிடம் பேசிய ஒரு நபர், தன்னை விசாரணை அதிகாரி என அறிமுகம் செய்து கொண்டுள்ளார். அந்த தம்பதியர் மீது சில குற்றச்சாட்டுகளை அவர் வைத்துள்ளார். மேலும், இந்த விவகாரம் குறித்து யாரிடமும் தெரிவிக்க வேண்டாம் என கூறியுள்ளார். அதோடு அவர்களின் ஆதார் கார்டு மற்றும் வங்கி விவரங்களையும் அவர் சேகரித்துள்ளார். ரூ.12 லட்சத்தை வழங்கினால் இந்த குற்ற வழக்கில் இருந்து தப்பலாம் என அந்த மோசடியாளர் கூறியுள்ளார்.

இந்தச் சூழலில் மகன் வாட்டத்துடன் இருப்பதை கவனித்த 81 வயது தந்தை, அது குறித்து அவரிடம் கேட்டுள்ளார். அப்போதுதான் அவர்கள் சிக்கி இருப்பது டிஜிட்டல் கைது மோசடியாளரிடம் என தெரிய வந்துள்ளது. உடனடியாக இது தொடர்பாக காவல் துறையில் புகார் தெரிவிக்குமாறு தன் மகனிடம் அந்த முதியவர் தெரிவித்துள்ளார். அதன் பேரில் போலீஸில் புகார் அளிக்கப்பட்டது.

# ஐ-பேக் அலுவலக சோதனையில் தலையீடு: மம்தா பானர்ஜிக்கு உச்ச நீதிமன்றம் கண்டனம்

**புதுடெல்லி, ஏப்.24:**



மேற்கு வங்க மாநிலத்தில் நிலவும் சமூக- அரசியல் சூழலை அசாதாரணமான ஒரு சூழ்நிலை என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் ஐ-பேக் அலுவலகத்தில் அமலாக்கத் துறை கடந்த ஜனவரியில் சோதனை நடத்தியது. அப்போது திடீரென வந்த முதல்வர் மம்தா அந்த வளாகத்திற்குள் நுழைந்து, ஐ-பேக் தொடர்பான கோப்புகளை கைப்பற்றி சென்றார். இது தொடர்பான வழக்கு நீதிபதிகள் பி.கே. மிஸ்ரா மற்றும் என்.வி. அஞ்சாரியா அடங்கிய அமர்வு முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் கூறியதாவது: "இது மாநிலத்திற்கும் மத்திய அரசுக்கும் இடையிலான சாதாரண மோதல் அல்ல. ஒரு புலனாய்வு அமைப்பு விசாரணை நடத்திக் கொண்டிருக்கும் இடத்திற்கு, பதவியில் இருக்கும் ஒரு முதல்வர் நேரில் செல்வார் என்று நாங்கள் ஒரு போதும் நினைத்துப் பார்த்ததில்லை. எந்தவொரு மாநில முதல்வரும் விசாரணையின் நடுவே இதுபோன்று உள்ளே நுழைந்து ஜனநாயகத்தைப் பேராபத்தில் ஆழ்த்திவிட்டு, இதை மத்திய- மாநில அரசு இடையிலான மோதலாக சித்தரிப்பதை ஏற்க முடியாது. இது, ஒரு முதல்வர் என்ற அதிகாரத்தில் இருப்பவர் தனிப்பட்ட முறையில் மேற்கொண்ட அத்துமீறல் நடவடிக்கை. இதன் மூலம் ஒட்டுமொத்த ஜனநாயகமே ஆபத்துக்கு உள்ளாகியுள்ளது. மாநிலத்தில் நிலவும் நடைமுறை யதார்த்தங்களை நீதிமன்றம் கவனிக்காமல் புறந்தள்ள முடியாது. இது ஒரு விதிவிலக்கான சூழல். ஏற்கெனவே ஒரு வழக்கில் (எஸ்ஐஆர் வழக்கு) நீதிமன்ற அதிகாரிகள் பிணைக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்ததை நாங்கள் கண்டோம். யதார்த்தத்தை எங்களால் மூடி மறைக்க முடியாது. நீங்கள் சட்ட ரீதியாக நுணுக்கமான வாதங்களை முன்வைக்கலாம்.

ஆனால் மாநிலத்தில் நடக்கும் நடைமுறைச் சிக்கல்களை நாங்கள் கவனிக்காமல் கண்ணை மூடிக் கொண்டு சும்மா இருக்க முடியாது.

இவ்வாறு நீதிபதிகள் கூறினர்.

## நாட்டின் பல பகுதிகளில் 5 நாட்களுக்கு வெப்ப அலை: இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

**புதுடெல்லி, ஏப்.24:**

இந்தியாவில் பஞ்சாப், ஹரியாணா, சண்டிகர் மற்றும் டெல்லியின் சில பகுதிகளில் ஏப்ரல் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் வெப்ப அலை நிலவ வாய்ப்புள்ளது என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய வானிலை ஆய்வுமையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மேற்கு உத்தரப் பிரதேசத்தில் ஏப்ரல் 23 முதல் 25 வரையிலும், கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் ஏப்ரல் 22 முதல் 26 வரையிலும், ராஜஸ்தானில் ஏப்ரல் 24 முதல் 26 வரையிலும், மத்தியப் பிரதேசத்தில் ஏப்ரல் 23 முதல் 26 வரையிலும், விதர்பா மற்றும் சத்தீஸ்கரில் ஏப்ரல் 24 முதல் 27 வரையிலும், மேற்கு வங்கம், பிஹார் மற்றும் ஜார்க்கண்டில் ஏப்ரல் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளிலும் வெப்ப அலை நிலவக் கூடும். ஒடிசா, கடலோர ஆந்திரப் பிரதேசம், ஏனாம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளா, மாஹே, கடலோர கர்நாடகா மற்றும் குஜராத்தின் கடலோரப் பகுதிகளின் ஆங்காங்கே உள்ள சில இடங்களில் ஏப்ரல் 22 முதல் ஏப்ரல் 25 வரையிலான காலகட்டத்தில் வெப்பமான வானிலை நிலவக்கூடும்.

இந்தக் காலகட்டத்தில், ஹரியாணா, சண்டிகர், டெல்லி, ஒடிசா, கொங்கண் மற்றும் கோவாவில் இரவுகளிலும் வெப்பமான வானிலை இருக்கக் கூடும்.

இதற்கிடையில், வடகிழக்கு மற்றும் கிழக்கு இந்தியாவின் சில பகுதிகளில், இந்த வாரத்தில் இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

'தமிழகத்தின் உள் மாவட்டங்களில் நாளை முதல் 26-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக் கூடும். கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்' என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## மேற்காசிய போர் நிறுத்தம் நீட்டிப்பு: இந்தியா வரவேற்பு

**புதுடெல்லி, ஏப்.24:**

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான மேற்காசிய போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டுள்ளதை இந்தியா வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளதாவது:

"இந்தியா எப்போதும் அமைதிக்கு ஆதரவாக நிற்கும். அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை சார்ந்து முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கையையும் இந்தியா வரவேற்கும். மேற்காசிய போர் நிறுத்தத்தை இந்தியா ஏற்கெனவே வரவேற்றுள்ளது. அரசாங்க ரீதியிலான பேச்சுவார்த்தை மூலம் இந்த மோதலை முழுவதுமாக முடிவுக்கு கொண்டு வர முடியும் என நம்புகிறோம்.

மேற்காசிய மோதல் காரணமாக உலக மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். சர்வதேச அளவில் எரிசக்தி விநியோகம் மற்றும் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி வழியாக தடையில்லாத வகையில் கப்பல் போக்குவரத்து உறுதி செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறோம்" என அவர் கூறியுள்ளார்.

# தொல்லை தரும் அண்டை நாடு: அமைச்சர் ராஜ்நாத் சிங் சூசகம்

**புதுடெல்லி, ஏப்.24:**



ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் தீவிர வாதிகள் தாக்குதல் நடத்தியதில் 26 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நடந்து நேற்றுடன் ஓராண்டு நிறைவடைந்தது.

இது தொடர்பாக டெல்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்துகொண்டு பேசியதாவது: 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையில் நமது ராணுவம் என்ன சாதித்துள்ளது என்பதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. நமது ராணுவ வலிமை முன்னெப்போதையும்விட பன் மடங்கு வலுப் பெற்றுள்ளது. இந்தியா உலகிலுள்ள எந்த நாட்டையும் தாமாக முன்வந்து தாக்கியதே இல்லை. ஆனால், அண்டை நாடு ஏதேனும் ஒன்று வம்பு செய்ய முயன்றால், அதன் பிறகு விளைவு கடுமையாக இருக்கும். மற்ற அண்டை நாடுகள் நமது நாட்டுடன் நட்புடன் உள்ளன. நமக்கு ஒரே ஒரு அண்டை நாடு மட்டுமே தொல்லை கொடுத்து வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

தொல்லை கொடுத்து வரும் அண்டை நாடு பாகிஸ்தான் என்பதை மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் சூசகமாக இங்கு குறிப்பிட்டார். சில நாட்களுக்கு முன்பு பாகிஸ்தான் அமைச்சர் கவாஜா ஆசிப் பேசும்போது, "இந்தியா மீண்டும் வாலாட்டினால் நாங்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம். எந்த செயலுக்கும் வலுவான பதிலடி கிடைக்கும். எங்களைச் சீண்டினால் கொல்கத்தாவைக் குறிவைப்போம்" என்று பேசியிருந்தார். அவருக்கு பதிலடி கொடுக்கும் விதமாகவே மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் இவ்வாறு சூசகமாகப் பேசியுள்ளார்

# இந்தியா - சீனா இடையே நேரடி விமான போக்குவரத்து மீண்டும் தொடக்கம்

**புதுடெல்லி, ஏப்.24:**




இந்தியா - சீனா இடையிலான நேரடி விமான போக்குவரத்து சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக, ஏர் சீனா நிறுவனம், பெய்ஜிங் - டெல்லி இடையிலான தனது விமான சேவையை செவ்வாய்க்கிழமை தொடங்கியுது.

கடந்த 2020-ம் ஆண்டு நிலவிய கல்வான் பள்ளத்தாக்கு மோதல் மற்றும் கரோனா பரவல் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவை நிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில், தற்போது படிப்படியாக விமான சேவை இயல்பு நிலைக்குத் திரும்பி வருகிறது.

இது குறித்து சீனாவின் 'குளோபல் டைம்ஸ்' இதழ் வெளியிட்டுள்ள செய்தி: பெய்ஜிங் மற்றும் டெல்லி இடையிலான நேரடி விமான சேவையை செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமை என வாரத்திற்கு 3 நாட்களில் ஏர் சீனா வழங்க உள்ளது. இதற்காக ஏர்பஸ் 330 ரக விமானங்கள் பயன்படுத்தப் படுகின்றன. பெய்ஜிங்கில் இருந்து மதியம் 3:15 மணிக்கு புறப்படும் ஏர் சீனா விமானம், இந்திய நேரப்படி இரவு 8:20 மணிக்கு டெல்லியை வந்தடையும். இதன் ஆரம்பக் கட்ட பயணக் கட்டணம் சுமார் 3,570 யுவான் அதாவது சுமார் ரூ.49,000- ஆக (சுமார் 523 அமெரிக்க டாலர்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏர் சீனா நிறுவனத்தைத் தொடர்ந்து, பிற விமான நிறுவனங்களும் தங்களது சேவையை விரிவுபடுத்தி வருகின்றன. சீனா ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் கடந்த ஏப்ரல் 18-ம் தேதி முதல் குன்மிங் - கொல்கத்தா இடையிலான சேவையைத் தொடங்கியது. முன்னதாக, 2025 நவம்பரில் ஷாங்காய் - டெல்லி சேவையை இந் நிறுவனம் மீண்டும் தொடங்கியது. இந்திய நிறுவனமான இண்டிகோ, மார்ச் 30-ம் தேதி முதல் கொல்கத்தா - ஷாங்காய் தினசரி நேரடி விமான சேவையைத் தொடங்கியுள்ளதாக குளோபல் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

# மணிப்பூர் கலவரம் காரணமாக இதுவரை 58,821 பேர் இடம்பெயர்வு; 217 பேர் உயிரிழப்பு

**இம்பால், ஏப்.24:**




2023-ஆம் ஆண்டு மே 3-ஆம் தேதி இனக்கலவரம் வெடித்தது முதல் இந்த ஆண்டு மார்ச் 30 வரையிலான காலகட்டத்தில், மணிப்பூரில் மொத்தம் 58,821 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும், 217 பேர் உயிரிழந்துள்ளதாகவும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

மணிப்பூர் காங்கிரஸ் தலைவர் ஹரேஷ்வர் கோஸ்வாமி தாக்கல் செய்த தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவுக்குப் பதிலளிக்கும் விதமாக, ஏப்ரல் 20 அன்று உள்துறைச் செயலகம் இந்தப் புள்ளிவிவரங்களை வழங்கியது.

மே 2023 முதல் இனக்கலவரம் தொடர்பாக உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை குறித்துப் பதிலளித்த அத்துறை, 'உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்ட கருணைத் தொகையின் அடிப்படையில் இதுவரை 217 பேர் உயிரிழந்துள்ளனர்' என்று குறிப்பிட்டது.

மார்ச் 10, 2026 நிலவரப்படி மணிப்பூரில் நிவாரண முகாம்களின் எண்ணிக்கை 174 ஆக இருந்ததாகவும், அதேவேளையில் மணிப்பூர் காவல்துறைவீட்டுவசதிவாரியக் கழகத்தால் 3,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும் அது தெரிவித்தது. இனக் கலவரத்தால் மே 3, 2023 முதல் 7,894 நிரந்தர வீடுகள் முழுமையாகவும், 2,646 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளதாகவும் உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த தகவல்கள் வெளியான பின்னர் மணிப்பூர் காங்கிரஸ் தலைவர் ஹரேஷ்வர் கோஸ்வாமி வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் குறித்த தகவல்களைப் பெறுவதற்குத் தனக்கு ஏழு மாத கால முயற்சி தேவைப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளத்தாக்குப் பகுதியைச் சேர்ந்த மேதி சமூகத்தினருக்கும், மலை மாவட்டங்களில் வசிக்கும் குக்கி சமூகத்தினருக்கும் இடையே மே 2023-இல் வெடித்த இனக்கலவரம் 2 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது.

தற்போதும் கூட அம்மாநிலத்தில் அங்காங்கே வெடிக்கும் வன்முறையால், அவ்வப்போது பதற்றமான சூழல் உருவாகி வருகிறது என்பது கவனிக்கத்தக்கது.

## மேற்கு வங்கத்தில் முதல் கட்டத் தேர்தல் 2026! விறுவிறுப்பான வாக்குப்பதிவு

**கொல்கத்தா, ஏப்.24:**

மேற்கு வங்க மாநிலத்தில் முதல்கட்ட தேர்தல் நடைபெறும் 152 தொகுதிகளில் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது.

காலை 7 மணி முதலே வாக்குச்சாவடிகளில் மக்கள் வரிசையில் நின்று வாக்களித்து வருகிறார்கள். முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களும், பிரபலங்களும் வாக்களித்து வருகிறார்கள்.

மேற்கு வங்கத்தில் முதல்கட்ட பேரவைத் தேர்தலுக்கான பிரசாரம் செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடைந்தது. 152 தொகுதிகளில் இன்று அமைதியான முறையில் வாக்குப்பதிவு தொடங்கியிருக்கிறது. இதையொட்டி, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

294 உறுப்பினர்களைக் கொண்ட மேற்கு வங்க சட்டப் பேரவைக்கு இரு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. முதல்கட்டமாக 152 தொகுதிகளுக்கு இன்றும், இரண்டாம் கட்டமாக 142 தொகுதிகளுக்கு ஏப்.29-ஆம் தேதியும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. மே 4-இல் வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இந்த முதல்கட்ட தேர்தலில் மொத்த வாக்காளர்கள் 3.60 கோடி பேர் (ஆண்கள் 1.84 கோடி, பெண்கள் 1.75 கோடி, மூன்றாம் பாலினத்தவர் 465). இவர்கள் வாக்களிக்க வசதியாக, 44,378 வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 2.5 லட்சம் பாதுகாப்புப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## கபடி போட்டியில் பந்தயம்: கர்நாடக அமைச்சர் மீது வழக்கு

**பெங்களூரு, ஏப். 24:**

கர்நாடக மாநிலம் தும்கூரில் கடந்த பிப்ரவரியில் கல்லூரி மாணவர்களுக்கான கபடி போட்டி நடைபெற்றது. இதில் பங்கேற்ற உள்துறை அமைச்சர் ஜி.பரமேஸ்வரா, நட்பின் அடிப்படையில் விஜயபுரா அணி வெற்றி பெறும் என தெரிவித்து, ரூ.500 பந்தயம் கட்டினார்.

அதற்கு மேடையில் இருந்த தும்கூர் மாவட்ட ஆட்சியர் சுபா கல்யாண், விஜயபுரா அணி தோற்கும் என கூறினார். இறுதியில் தட்சிண கன்னட அணி விஜயபுராவை 36- 26 என்ற புள்ளிக் கணக்கில் தோற்கடித்து வெற்றி பெற்றது.

வெற்றி பெற்ற அணிக்கு பரிசுகளை வழங்கும் போது, அமைச்சர் பரமேஸ்வரா, தான் தோற்றுவிட்டதாகக் கூறி பந்தய பணமான ரூ.500-ஐ வழங்கினார். இது குறித்து சமூக செயற்பாட்டாளர் எச்.ஆர்.நாகபூஷன் என்பவர், பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அதை ஏற்ற நீதிபதி கே.என்.சிவகுமார், பரமேஸ்வரா மீது முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து விசாரணை நடத்த காவல் துறைக்கு உத்தரவிட்டார்.

## சபர்மதி ஆற்றில் தங்கம், வெள்ளி நகைகளை தேடும் மக்கள்



**அகமதாபாத், ஏப்.24:**

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் ஓடும் சபர்மதி ஆற்றங்கரையில் சுற்றுலா பயணிகள் பொழுதுபோக்குக்காக கூடுவர். இங்கு மக்கள் ஆற்றில் இறங்கி குளிப்பது வழக்கம். சில பயணிகள் வேண்டுதலுக்காக ஆற்றில் காசுகள், தங்கம், வெள்ளி நகைகளை போடுவதும் வழக்கம். சிலர் குளிக்கும்போது தங்க, வெள்ளி ஆபரணங்களை இழப்பதும் உண்டு. சபர்மதி ஆற்றில் உள்ள வஸ்னா தடுப்பணையின் கதவுகளில் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக தடுப்பணை மூடப்பட்டது. இதனால் சபர்மதி ஆற்றில் தண்ணீர் வரத்து குறைந்து வறண்டு காணப்படுகிறது. இதனால் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை சபர்மதி ஆற்றங்கரையில் குவிந்து 'புதையலை' தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒருவருக்கு வெள்ளி நாணயம் கிடைத்ததாக கூறப்படுகிறது. பெரும்பாலும், துருப்பிடித்த இரும்பு பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள்தான் அங்கு கிடைக்கின்றன. ஆனாலும் பலர் கடும் வெயிலை பொருட்படுத்தாமல் தேடி வருகின்றனர்.

## மணிப்பூர்: போராட்டத்தில் கலந்து கொண்டு வன்முறையில் ஈடுபட்ட 2 காவலர்கள் கைது

**இம்பால், ஏப்.24:**

மணிப்பூர் மாநிலத்தில் கடந்த 2023-ம் ஆண்டு மே மாதம் குக்கி மற்றும் மெய்தி இன மக்களிடையே ஏற்பட்ட மோதல் மிகப்பெரிய கலவரமாக வெடித்தது. மணிப்பூரில் அமைதியை கொண்டு வர அரசு சார்பில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், அவ்வப்போது சில வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன.

அந்த வகையில், கடந்த 7-ந்தேதி பிஷ்னுபூர் மாவட்டத்தில் ஆயுதக்குழுவினர் நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 வயது ஆண் குழந்தையும், 6 மாத பெண் குழந்தையும் உயிரிழந்தனர். அந்த குழந்தைகளின் தாய் படுகாயமடைந்தார். இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து மணிப்பூரில் போராட்டங்கள் வெடித்தன. இந்த தாக்குதல் தொடர்பான விசாரணை என்.ஐ.ஏ. அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மணிப்பூர் முதல் மந்திரி கேம்சந்த் சிங் தெரிவித்தார்

இந்த நிலையில், இம்பால் கிழக்கு மாவட்டத்தில் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டு வன்முறையில் ஈடுபட்ட 2 காவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# செர்னோபில் அருகே ரஷ்ய ஏவுகணைகள்: அணு உலை பேரழிவு எச்சரிக்கை விடுத்தது உக்ரைன்



கீவ், ஏப்.24:

செர்னோபில் அணு உலை விபத்தின் 40-வது ஆண்டு நினைவு தினம் வரும் ஞாயிற்றுக்கிழமை அனுசரிக்கப்பட உள்ளது.

இந்நிலையில், செய்தி நிறுவனத்திடம் உக்ரைனின் தலைமை அரசு வழக்கறிஞர் ருஸ்லான் கிராவ்சென்கோ கூறியுள்ளதாவது: கடந்த 2024 ஜூலை முதல் உக்ரைன் மீது ரஷ்யா தீவிர ட்ரோன் தாக்குதல்களை நடத்தி வருகிறது. குறிப்பாக, செர்னோபில் அணு உலையின் கதிர்வீச்சு பாதுகாப்பு கவசத்துக்கு 5 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் குறைந்தது 92 ரஷ்ய ட்ரோன்கள் பறந்ததை எங்களது ரேடார்கள் கண்டறிந்துள்ளன.

உக்ரைனை அச்சுறுத்தவும், தீவிரவாதத்தை பரப்பவுமே அணு உலைகளுக்கு மேல் ரஷ்யா இதுபோன்று ஏவுகணைகளையும், ட்ரோன்களையும் ஏவி வருகிறது.

கடந்த 1986-ம் ஆண்டு ஏப்ரல் 26-ம் தேதி வெடித்துச் சிதறிய செர்னோபில்லின் 4-வது அணு உலையிலிருந்து கதிர்வீச்சு கசியாமல் தடுப்பதற்காக பிரம்மாண்ட பாதுகாப்பு கவசம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025 பிப்ரவரியில் ட்ரோன் தாக்கியதில் இந்த கவசத்தின் உள் மற்றும் வெளி அடுக்குகளில் 6 மீட்டர் விட்டம் கொண்ட ஓட்டை ஒன்று விழுந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே, இது மீண்டும் ஒரு அணு உலை பேரழிவுக்கு வழிவகுக்கும்.

இவ்வாறு கிராவ்சென்கோ கூறியுள்ளார்.

இதுகுறித்து செர்னோபில் நிலைய இயக்குநர் செர்ஜி தாரகனோவ் கூறுகையில்,

"இந்தக் கட்டமைப்பின் அருகே ஏவுகணை விழுந்தால் அது ஒரு சிறிய நிலநடுக்கத்தையே ஏற்படுத்தும். இந்தப் பாதுகாப்பு கவசம் நிலைத்து நிற்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை" என எச்சரித்துள்ளார்.

## தெற்கு லெபனானில் இஸ்ரேல் தாக்குதல்; பெண் பத்திரிகையாளர் உள்பட 5 பேர் பலி



டெல்அவிவ், ஏப்.24:

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு எதிரான போரில், ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பு லெபனானில் இருந்து செயல்பட்டது. இஸ்ரேல் மீது தாக்குதலை தொடுத்தது. இதனால், பதிலடியாக லெபனானை இஸ்ரேல் தாக்கியது. இதில், லெபனான் நாட்டில் பொதுமக்கள் பலர் பலியானார்கள். உடனடியாக போர்நிறுத்த உடன்பாடு ஏற்படுத்த வேண்டும் என்று இஸ்ரேலிடம் லெபனான் கோரி வந்தது.

இந்த நிலையில், லெபனான் ஜனாதிபதி ஜோசப் ஆவன் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகிய இருவரும், பேச்சுவார்த்தை நடத்தி, பெரிய அளவில் தீர்வு ஒன்று ஏற்படுவதற்கான நடவடிக்கையாக, இரு தலைவர்களும் தற்காலிக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி கொள்ள முடிவு செய்தனர்.

இதனை அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் உறுதிப்படுத்தினார். இதன்படி, லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையே 10 நாட்களுக்கு தற்காலிக போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு உள்ளது.

இந்த நிலையில், தெற்கு லெபனானில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதில் பெண் பத்திரிகையாளர் உள்பட 5 பேர் பலியாகி உள்ளனர். லெபனானில் இருந்து வெளிவரும் நேஷனல் நியூஸ் ஏஜென்சி என்ற நிறுவனம் வெளியிட்ட செய்தியில், தெற்கு லெபனானில் உள்ள அட்-திரி கிராமத்தில் வாகனம் ஒன்றின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

இதில், வாகனத்தில் இருந்த 2 பேர் பலியானார்கள். அதே கிராமத்தில் நடந்த மற்றொரு தாக்குதலில் 2 வாகனங்கள் சேதமடைந்தன. இதில் பெண் பத்திரிகையாளர் பலத்த காயமடைந்து, சிகிச்சை பலனின்றி பலியானார். இதில், மொத்தம் 5 பேர் பலியாகி உள்ளனர். இந்த சம்பவத்திற்கு லெபனான் தகவல் மந்திரி பால் மார்கோஸ் கண்டனம் தெரிவித்து உள்ளார். ஹிஸ்புல்லா குழுக்களின் தளங்களை இலக்காக கொண்டு தாக்குதல் நடந்துள்ளது.

## விண்வெளிக்கு செல்லும் நுண்ணுயிரிகள் - சிலி நாட்டு விஞ்ஞானிகளின் புதிய ஆய்வு



சாண்டியாகோ, ஏப்.24:

விண்வெளியின் கடுமையான சூழ்நிலைகளில் உயிரினங்கள் வாழ முடியுமா? என்பதை சோதிக்க சிலி நாட்டை சேர்ந்த விஞ்ஞானிகள் புதிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, அண்டார்டிகா கண்டம் மற்றும் சிலி நாட்டின் அடகாமா பாலைவனத்தில் வசிக்கும் 6 வகையான நுண்ணுயிரிகளை விண்வெளிக்கு அனுப்ப ஆய்வாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

போலாரிஸ்(POLARIS) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விண்வெளி ஆய்வு, டாக்டர் ஜெனி பிலெய்மி என்ற விஞ்ஞானியின் தலைமையில் நடைபெறுகிறது. இந்த திட்டத்தின்படி, பூமியில் இருந்து அனுப்பப்படும் நுண்ணுயிரிகள், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு வெளியே வைத்து சோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளன.

அங்கு பிராண வாயு, புவியீர்ப்பு விசை இல்லாத சூழல், அதிக கதிர்வீச்சு மற்றும் வெப்பநிலையை இந்த நுண்ணுயிரிகள் எவ்வாறு எதிர்கொள்கின்றன? என்பது கண்காணிக்கப்பட உள்ளது. இந்த நுண்ணுயிரிகளை விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்திற்காக 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தின் 'பால்கன் 9' ராக்கெட் பயன்படுத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க கடற்படை முற்றுகை நீங்கினால் மட்டுமே போர் நிறுத்தம் சாத்தியம்: ஈரான் திட்டவட்டம்



தெஹ்ரான், ஏப்.24:

முழுமையான போர் நிறுத்தம் ஏற்பட வேண்டுமானால், ஹார்முஸ் ஜலசந்தியில் அமெரிக்க கடற்படை முற்றுகை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று ஈரான் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஈரான் நாடாளுமன்ற சபாநாயகரும், ஈரான் - அமெரிக்கா இடையிலானபேச்சுவார்த்தைக் குழுவில் ஒருவருமான முஹம்மது பாகர் கலிபாஃப் தனது எக்ஸ் பக்கத்தில், "ஈரான் துறைமுகங்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள கடற்படை முற்றுகை நிறுத்தப்பட்டால் மட்டுமே முழுமையான போர் நிறுத்தம் சாத்தியமாகும். இத்தகைய அப்பட்டமான போர் நிறுத்த விதிமீறல்கள்நீடிக்கும் வரை, ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறப்பது சாத்தியமற்ற ஒன்று" தெரிவித்துள்ளார். முன்னதாக இன்று காலை அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ஈரான் போர் நிறுத்தத்தை நீட்டிப்பதாக அறிவித்தார். "ஈரான் உடனான போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுகிறது. அமைதி ஒப்பந்தம் சார்ந்து ஒருங்கிணைந்த முன்மொழிவை ஈரான் முன்வைக்கும் வரையில் இந்த போர் நிறுத்தம் தொடரும். அதே நேரத்தில் ஈரான் துறைமுகங்கள் முற்றுகையிட்டுள்ள அமெரிக்க ராணுவத்தின் பணியை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு நான் கூறியுள்ளேன்," என தனது அறிவிப்பில் அவர் தெரிவித்திருந்தார்.

உலக நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்கப் போர் நிறுத்தம் மேற்கொள்ளத் தயார் என்றாலும், அதற்குப் பிரதிபலனாகத் தங்களின் கடல்சார் வர்த்தகச் சுதந்திரத்தை அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டும் என்பதில் ஈரான் உறுதியாக உள்ளது.

## நைஜீரியா: பயங்கரவாதிகள் தாக்குதலில் 11 பேர் பலி



மைதுகுரி, ஏப்.24:

ஆப்பிரிக்காவில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளில் ஒன்றான நைஜீரியாவின் வடகிழக்கே போர்னோ மாகாணத்தில் சம்பீசா வன பகுதியில் புபாகு என்ற பகுதியில் இஸ்லாமிய பயங்கரவாதிகள் சிலர் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதில் சிக்கி 11 பேர் பலியாகி உள்ளனர். 2 பேர் காயமடைந்தனர். அவர்கள் 2 பேரும் மீட்கப்பட்டு, மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். அவர்கள் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுபற்றி கிராமத்தினர் கூறும்போது, உயிரிழந்தவர்களின் உடல்கள் நேற்று புதைக்கப்பட்டு உள்ளன. போகோ ஹரம் குழுவை சேர்ந்த பயங்கரவாதிகள் சிலர் துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் கிராமத்திற்குள் புகுந்து, மக்களை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினர்.

ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய லகுரவா அமைப்பு மற்றும் கடத்தல், பணய தொகை கேட்டு மிரட்டல், சட்டவிரோத சுரங்க பணிகளில் ஈடுபடுதல் ஆகியவற்றில் ஈடுபடும் கொள்ளை கும்பல்களின் தாக்கம் நைஜீரியாவில் அதிகரித்து காணப்படுகிறது என தகவல் தெரிவிக்கின்றது. இதனால், அவர்கள் அடிக்கடி கிராமங்களுக்குள் புகுந்து துப்பாக்கி சூடு நடத்தி பொதுமக்களை தாக்கி வருகின்றனர்.

## அமெரிக்காவின் முற்றுகையை மீறி... வளைகுடாவில் அதிரடி காட்டி சென்ற 34 ஈரான் கப்பல்கள்

தெஹ்ரான், ஏப்.24:

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28-ந்தேதி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல், ஏறக்குறைய 40 நாட்களாக நீடித்து வந்த நிலையில், கடந்த 8-ந்தேதி 2 வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதனால், பதற்றம் சற்று தணிந்தது.

எனினும் ஈரான், அமெரிக்கா இடையே நிரந்தர போர் நிறுத்தத்திற்காக பாகிஸ்தானில் கடந்த வாரம் 21 மணிநேரம் நீடித்த தொடக்க கட்ட அமைதி பேச்சுவார்த்தையில் உடன்பாடு எதுவும் முடிவாகவில்லை. இந்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என அமெரிக்கா தெரிவித்தது.

இதனை தொடர்ந்து, ஈரானிய துறைமுகங்களை முற்றுகையிடுவதுடன், நீடித்த பொருளாதார நெருக்கடி நீடிக்கும் என அமெரிக்கா தெரிவித்தது. இதனால், மேற்காசிய பகுதியில் மீண்டும் பதற்றம் கூடியது.

ஈரான் புத்திசாலித்தனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், அப்படியில்லாமல் அதிருப்தி ஏற்படும் வகையிலான வழியை தேர்ந்தெடுக்கும் என்றால், அவர்களை முற்றுகையிடுவதுடன், உள்கட்டமைப்பு, மின்சாரம் மற்றும் எரிசக்தி கட்டமைப்புகள் மீது குண்டுகள் வீசி தாக்கப்படும் என்று டிரம்ப் எச்சரிப்பும் வெளியிட்டார். எனினும், 2-வது சுற்று பேச்சுவார்த்தையில் பலன் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில், அமெரிக்காவின் முற்றுகையை மீறி, 34 ஈரான் கப்பல்கள் கடந்து சென்றுள்ளன என தகவல் தெரிவிக்கின்றது. இந்த 34 கப்பல்களில், ஈரானுடன் தொடர்புடைய 19 கப்பல்கள் வளைகுடாவில் இருந்து வெளியேறி சென்றுள்ளன. மற்ற 15 கப்பல்கள் அரபி கடலில் இருந்து ஈரானை நோக்கி வளைகுடாவுக்குள் நுழைந்துள்ளன. இவற்றில் 6 கப்பல்களில் ஈரானிய கச்சா எண்ணெய் இருந்துள்ளது. ஒட்டுமொத்தத்தில் 1.07 கோடி பீப்பாய்கள் கப்பல்களில் இருந்துள்ளன.

பிரென்ட் ரக கச்சா எண்ணெய்யுடன் ஒப்பிடும்போது, ஈரானிய கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு 10 அமெரிக்க டாலர் குறைவாகவே விற்பனை செய்கிறது. சர்வதேச தடைகளால் இந்த நிலை நீடிக்கிறது. அந்த வகையில் ஒட்டுமொத்த வருவாய் ரூ.8 ஆயிரத்து 436 கோடி ஆக உள்ளது என மதிப்பிடப்பட்டு உள்ளது.

## 8 பெண்களுக்கு மரண தண்டனையா...? டிரம்ப் கூறிய விசயங்களை மறுத்த ஈரான்



வாஷிங்டன், ஏப்.24:

ஈரான், அமெரிக்கா இடையே நிரந்தர போர் நிறுத்தத்திற்காக பாகிஸ்தானில் 21 மணிநேரம் நீடித்த தொடக்க கட்ட அமைதி பேச்சுவார்த்தையில் உடன்பாடு எதுவும் முடிவாகாமல், பேச்சுவார்த்தை தோல்வி அடைந்த நிலையில், 2-வது சுற்று அமைதி பேச்சுவார்த்தை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனை உலக நாடுகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றன. இந்த சூழலில், ஈரானில் தூக்கு தண்டனையை எதிர்கொள்ளும் பெண்களை விடுவிக்கும்படி டிரம்ப் கோரினார்.

சமூக ஊடக ஆர்வலரான இயால் யகோபி வெளியிட்ட புகைப்படம் ஒன்றில், ஈரானிலுள்ள 8 பெண்கள் தூக்கு தண்டனையை எதிர்கொள்ள கூடிய சூழலில் உள்ளனர் என தெரிவித்து உள்ளார். அவர்களுடைய புகைப்படங்களையும் அவர் வெளியிட்டு உள்ளார். இதனை தன்னுடைய ட்ரூத் சோசியல் வலைதளத்தில் பகிர்ந்த டிரம்ப், என்னுடைய பிரதிநிதிகளுடன் விரைவில் பேச்சுவார்த்தையில் ஈடுபட உள்ள ஈரானின் தலைவர்களே, இந்த பெண்களை விடுவியுங்கள். நான் உங்களை பெரிதும் பாராட்டுவேன்.

நீங்கள் விடுவித்த பின்னர், அந்த உண்மையை அவர்கள் மதிப்பார்கள் என நான் உறுதியாக கூறுகிறேன். தயவுசெய்து அவர்களுக்கு எந்த தீங்கும் ஏற்படுத்த வேண்டாம். அது நம்முடைய பேச்சுவார்த்தைக்கு மிக பெரிய தொடக்கம் ஆக அமையும். இந்த விவகாரத்தில் கவனம் செலுத்தியதற்காக நன்றி என பதிவிட்டு உள்ளார்.

இந்த நிலையில், ஈரான் நாட்டின் நீதி துறை வெளியிட்ட செய்தியில், டிரம்ப் மீண்டும் போலியான செய்திகளால் தவறாக வழிநடத்தப்பட்டு உள்ளார் என தன்னுடைய வலைதளத்தில் தெரிவித்து உள்ளது

# 3 சரக்குக் கப்பல்கள் மீது ஈரான் ராணுவம் துப்பாக்கிச் சூடு



தெஹ்ரான், ஏப்.24:

அமெரிக்கா - ஈரான் இடையேயான 2 வார கால இடைக்கால போர் நிறுத்தம் நேற்றுடன் முடிந்தது. இந்நிலையில், காலவரையின்றி சண்டை நிறுத்தத்தை நீட்டிப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நேற்று அறிவித்தார். ஆனால், ஈரான் எந்த பதிலும் அளிக்கவில்லை.

இந்நிலையில், ஈரான் சரக்குக் கப்பல்கள் சிலவற்றை அமெரிக்கா துப்பாக்கிச் சூடு நடத்தி சிறைபிடித்துள்ளது. மேலும், ஈரான் துறைமுகங்களை தொடர்ந்து முற்றுகை நிலையில் வைத்திருக்க அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். இதனால் ஈரானின் கச்சா எண்ணெய் விற்பனை வருவாய் முடங்கியுள்ளது.

அமெரிக்காவின் நெருக்கடிக்கு பதிலடி அளிக்கும் வகையில், ஹார்முஸ் ஜலசந்தி பகுதியைக் கடக்க முயன்ற 3 சரக்குக் கப்பல்கள் மீது ஈரான் ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இத்தகவலை சரக்குக் கப்பல் போக்குவரத்தைக் கண்காணிக்கும் இங்கிலாந்தின் யுகேம்டிஓ மையம் தெரிவித்துள்ளது.

இதில் ஒரு சரக்குக் கப்பல் சேதம் அடைந்துள்ளது. ஆனால், ஊழியர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இந்தத் தாக்குதல் மூலம் ஹார்முஸ் ஜலசந்தி தொடர்ந்து தங்கள் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. தங்கள் அனுமதியின்றி எந்தக் கப்பலும் ஹார்முஸ் ஜலசந்தியைக் கடந்து செல்ல முடியாது என ஈரான் ராணுவம் எச்சரித்துள்ளது.

இந்தியக் கப்பல்: முன்னதாக ஹார்முஸ் ஜலசந்தியில் கடந்த 18-ம் தேதி இந்தியக் கொடியுடன் வந்த 2 கப்பல்கள் மீது ஈரான் ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இந்தியாவின் கண்டனத்தை தொடர்ந்து இந்த தாக்குதல் தற்செயலானது என ஈரான் விளக்கம் அளித்தது.

ஹார்முஸ் ஜலசந்தியில் இந்தியக் கொடி ஏந்திய மேலும் 14 கப்பல்கள் சிக்கியுள்ளன. இந்தக் கப்பல்களை பத்திரமாக வெளியேற்ற மத்திய அரசு முயன்று வருகிறது. இந்நிலையில் ஹார்முஸ் ஜலசந்தி அருகில் 2 கப்பல்களைக் ஈரான் நேற்று கைப்பற்றியது.

அந்தக் கப்பல்கள் ஈரானின் ஐஆர்ஜிசி கடற்படையின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், அவை ஈரானுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் ஈரானிய அரசுத் தொலைக்காட்சி பின்னர் செய்தி வெளியிட்டது.

அந்தக் கப்பல்கள் எம்எஸ்சி பிரான்செஸ்கா மற்றும் எபமினோண்டாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளன. கடல் போக்குவரத்து தரவுகளின்படி, லைபீரியக் கொடியுடன் கூடிய டேங்கர் கப்பலான எபமினோண்டாஸ், குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் உள்ள முந்த்ரா துறைமுகம் நோக்கி வந்து கொண்டிருந்ததாக தெரிகிறது. மற்றொரு கப்பல் இலங்கை நோக்கி சென்றதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவில் புதிய வரலாறு: 84.69% வாக்குப்பதிவு



# நாங்குநேரி தேர்தல் புறக்கணிப்பு 5 வாக்குகள் மட்டும் பதிவு



# மேற்கு வங்கத்தில் 90% வாக்குப்பதிவு

# ஜனநாயக கடமையை ஆற்றிய திரைப்பிரபலங்கள்

# மின்தூக்கிக்குள் பயணி சிக்கினால் எச்சரிக்கை எழுப்பும் ஏஐ அமைப்பு - விரைவில் அறிமுகம்

# விண்வெளிக்கு செல்லும் நுண்ணுயிரிகள் சிலி நாட்டு விஞ்ஞானிகளின் புதிய ஆய்வு


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

24.04.2026 வெள்ளிக்கிழமை

இலவச இ–பேப்பர்